திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

8 - JUN 1968



பைரவர்

மாலை 10] கீலக - வைகாசி - ஜூன், 1968 [மணி 9

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



திருஇந்தளூர் ஸ்ரீபரிமள ரங்கநாத சுவாமி கோயில்
திருக்குட முழுக்கு விழாக் காட்சி (5—2—68)

பொருளடக்கம்

1. சிவஞான சுவாமிகளின் சிறந்த உவமைகள்
2. கச்சியும் கச்சபேசமும்
3. மணவாள மாமுனிகள்
4. திருப்பாவைச் செழும் பொருள்
5. சிவஞான சித்தியாரில் ஒரு செய்யுள்
6. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாகம்
7. மகாபாரதம்
8. உகந்தருளின நிலங்கள்
9. ஞானசித்தர்களும் சித்தமருந்தும்
10. உடம்படு மெய்
11. ஒருவர் எனும் இயற்சொல்
12. தொல்காப்பியச் சிறப்பு

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 10] கீலக - வைகாசி - ஜூன், 1968 [மணி 9

8 - JUN 1968

சிவஞான சுவாமிகளின் சிறந்த உவமைகள்

முன்னுரை

உவமை :

ஒரு கவிதையின் சிறப்புக்குக் காரணமாக அமைவன, பலப்பல. அவைகளுள் உவமை என்பதும் ஒன்று. உவமையானது கவிதைக்கு அழகும் சுவையும் அளிக்கின்றது; கருத்து வளத்தினைப் பெருக்குகின்றது; கவிதையின் பொருளைப் பயில்வார் உள்ளத்திற் கவினுறப் பதியும்படி செய்கின்றது. "அணியிலாக் கவிதை பணியிலா வனிதை" என்பது பழமொழி. கவிதைக்குரிய அணிகளுள், முதன்மையும் தலைமையும் வாய்ந்தது உவமை அணியே. ஏனைய எல்லா அணிகளுக்கும் உவமையே அடிப்படையும் உயிரும் ஆகும்.

அது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியர், பிற அணிகளை விதந்து ஓதாமல், உவமை ஒன்றனையே சிறப்பாகக் கொண்டு உவமையியல் என ஒரு தனி இயலை வகுத்து, அதனை மட்டுமே விரித்து அழகுற விளக்கி யருளினர். இங்ஙனமே,

> "உவமை என்னும் தவலரும் விறலி
> பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
> காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
> யாப்பறி புலவர் இதயம்
> நீப்பறு மகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே"

என அப்பைய தீட்சிதர் என்பவரும், தாம் இயற்றிய "சித்திர மீமாம்சை" என்னும் நூலில், எல்லா அணிகளும் உவமையின் அடியாகவே தோன்றின எனக் குறிப்பிடுகின்றூர்.

> கற்பனை செறிந்த நல்ல
> கவிதையாம் அரங்கம் தன்னில்
> பொற்புறும் உவமை என்னும்
> புகழ்மிகும் விறலி தானே,
> பற்பல வேடம் பூண்டு,
> பண்பமை சுவைஞர் உள்ளம்
> நற்பெரு மகிழ்ச்சி ஓங்க,
> நடனம்செய் தின்பம் நல்கும்!
>
> நலமிகும் உவமை என்னும்
> நல்லெழில் விறலி தானே,
> பலவகைச் சிறந்த கோலம்
> பாங்குறப் புனைந்து போந்து
> கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
> காவிய அரங்கில் தோன்றிப்
> புலவர்தம் உள்ளத் தின்பம்
> பொங்கிட நடிப்பள் நன்றே!

—தமிழாக்கம், ஆசிரியர்.

சிவஞான சுவாமிகள் :

சிவஞான சுவாமிகள் இற்றைக்கு ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர்! தமிழ் நாட்டில் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெருங்கவிஞர்களின் வரிசையில் தலைசிறந்த ஒருவராக மதித்துப் போற்றத்தக்க பெருஞ் சிறப்புடையவர் இவர்! தமிழ்ப் புலமை உலகிலும், சைவ சித்தாந்தத் தத்துவ உலகிலும், தனிப்பெரும் சிறப்பிடம் சிவஞான சுவாமிகளுக்கு உண்டு.

சிவஞான சுவாமிகள் தோன்றியருளிற்றிலராயின், சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை இந்நாளில் இத்துணை விளக்கம் பெற்றிருத்தல்

இயலாது. வடமொழி தென்மொழி என்னும் இருபெரு மொழிகளிலும் புலமை நிரம்பப்பெற்றுத் தமிழில் மிகச் சிறந்த எழில் நலம் சான்ற உரைநடை வரையும் திறனும் வாய்ந்து, தாம் இயற்றியருளிய பற்பல அரும்பெறல் நூல்களால் நம் தமிழ் மொழியினைப் பொற்புற மிகவும் வளப்படுத்தி, பெருந்தொண்டாற்றியருளியவர் நம் சிவஞான சுவாமிகள்! 'சிந்தனைத் திறன் மிக்க தென்னக மக்களின் பேரறிவின் பெருவிளைவு' எனப் புகழ்ந்து ஓதப் பெறும் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் நுட்பங்களை விளக்குதலில், சுவாமிகள் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது.

அத்துவிதம் :

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினை உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் வெவ்வேறு வகைகளில் தத்தமக்கு ஏற்ப விளக்குகின்றன. நமது இந்து சமயம் அதனை 'அத்துவிதம்' என்னும் சொல்லாற் குறிப்பிடுகின்றது. அத்துவிதம் என்னும் இவ் வரும்பெறற் சொற்றொடரின் பொருட்டிறம் குறித்துச் சங்கரர் இராமானுசர் மத்துவர் முதலிய பற்பலரும், தத்தமக்கு ஏற்ப ஒவ்வொரு வகையில் விளக்கம் செய்துள்ளனர். அவ்விளக்கத்திற்கு ஏற்ப எத்தனையோ பல நூல்களும், கொள்கைகளும், மரபுகளும், சமயப் பாகுபாடுகளும் ஏற்பட்டு நிலவி வருகின்றன.

அத்துவிதம் என்னும் இச்சொற்றொடருக்குச் சைவ சித்தாந்தப் பெருஞ்சான்றோராகிய ஆசிரியர் மெய்கண்டார் பெருமானும், தமக்கு முற்பட்ட தமிழகத்துச் சிவநெறிச் சான்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பொருள் விளக்கம் கண்டுள்ளார்.

"பொய்கண்டார் காணப்
புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள்
மேவும்நாள் எந்நாளோ?"

என வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் சான்றோராகிய தாயுமான அடிகள், அத்துவிதச் சொற்றொடருக்கு மெய்கண்டார் விளக்கியருளிய பொருளை வியந்து போற்றியிருத்தல் காணலாம்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை ஒருசிலர் பொன்னும் பணியும் போல் **அபேதம்** என்பர்; மற்றும் சிலர் இருளும் ஒளியும்போல் **பேதம்** என்பர்; வேறு சிலர் சொல்லும் பொருளும்போற் **பேதாபேதம்** என்பர். இறைவனும் உயிர்களும் தம்முள் பொருட்டன்மையால் இரண்டாயினும், பிரிக்க முடியாத கலப்புத் தொடர்புடையன என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. அத்துவிதம் என்னும் சொற்றொடருக்கு ஆசிரியர் மெய்கண்டார் 'இரண்டு அன்மை' எனப்பொருள் விளக்கினர். பிரிக்க முடியாதபடி சேர்ந்துள்ள இருபொருள்களின் கலப்பே அத்துவிதம் எனப் பெறும்.

இவ் அத்துவிதமாகிய கலப்பு ஒன்றாய் நிற்றலா? வேறாய் நிற்றலா? உடனாய் நிற்றலா? எனின், இம்மூன்றுமாயும் நிற்றலே அத்துவிதம் என்பது சைவசித்தாந்தம். உயிர்கள் நிலைத்தற்கு இறைவன் அவற்றோடு ஒன்றாய் நிற்கின்றான். பொருள்களை உயிர்கள் அறியும்படி செய்தற்கு இறைவன் உயிர்களுக்கு வேறாக நிற்கிறான். பொருள்களை உயிர்கள் நுகரும்படி செலுத்துவதற்கு, இறைவன் உயிர்களோடு உடனாக நிற்கின்றான்.

கலத்தற்றன்மையால் உடலின் உயிர்போல் உயிர்களோடு ஒன்றாகியும், பொருட்டன்மையால் கண்ணிற் சூரியன் போல உயிர்களுக்கு வேறாகியும், உயிர்க்கு உயிராதற்றன்மையால் கண்ணொளியின் உயிருணர்வுபோல உயிர்களுக்கு உடனாகியும் இறைவன் நிற்கின்றான். உயிர்கள் **நிலைத்தல், அறிதல், நுகர்தல்,** என்னும் மூன்று பயன்களையும் எய்துதற்கு இறைவன் உயிர்களோடு முறையே ஒன்றாகவும் உடனாகவும் நிற்பது இன்றியமையாததாக இருக்கின்றது எனச் சைவ சித்தாந்த நூல்கள் பலவும் சாற்றுகின்றன.

சிவஞான சுவாமிகளின் செய்யுள் :

சிவஞான சுவாமிகள், சைவ சித்தாந்தம் கூறும் இம்முத்திற நிலைகளையும் பற்றிப் பின் வரும் அழகிய இனிய செய்யுளாற் சுருங்கத் தொகுத்து விளங்க வகுத்து உணர்த்துகின்றார்.

பண்இசை,வெம் பரிதிமதி, திலதயிலம்,
தீஇரும்பு, பாணி உப்பு,
விண்அநிலம், உடல்உயிர், நீர் நிழல், உச்சிப்
பளிங்கு, பகல் விளக்கு, பால் நீர்,
கண்இரவி, உணர்வுஒளிபோல், பிரிவரிய
அத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
சிவாயகுரு சரணம் போற்றி

இறைவனோடு உயிர்க்கு உள்ள இயைபுகளை விளக்கும் திறனில் இச்செய்யுள் பெருஞ் சிறப்புடையதாகத் திகழ்கின்றது. அளவாற் சிறியதாயினும் பொருளின் நுணுக்கத்தால் இச்செய்யுள் மிக்க மாட்சிமை வாய்ந்து திகழ்கின்றது. சிவஞான சுவாமிகளின் சிறந்த புலமை நலனை உணர்த்துதற்கு, இச்செய்யுள் ஒன்று மட்டுமே இனிய எடுத்துக்காட்டாக அமைதற்குப் போதியதாகும்.

இனிய இச்செய்யுளின்கண், திறம்தெரிந்து தேர்ந்தெடுத்த (13) உவமைகளைச் சிவஞான சுவாமிகள் மிகப் பொருத்தமாக அருளிச் செய்துள்ளார். இறைவன் உயிர்களோடு ஒன்ருய் நிற்றற்கு (3) உவமைகளும், வேருய் நிற்றற்கு (3) உவமைகளும், உடனுய் நிற்றற்கு (7) உவமைகளும், இச்செய்யுட்கண் முறையே கூறப்பட்டுள்ளன. இவ்வுமைகளின் இனிய பொருத்தத்தினை இங்கு நாம் ஒரு சிறிது ஆராய்வோம்.

ஒன்ருதல் :

(1) பண் என்பது ஒலியின் வேறுபாடு. ஒலியைவிடப் பண்வேறு அன்று. ஆயினும் ஒலியெல்லாம் பண் ஆகாமையின் ஒலியும் அன்று. ஒலியும் அன்ருய் ஒலியின் வேறுபாடே ஆகிய பண்ணுனது ஒலியை விட்டுத் தனித்து நில்லாதவாறு போலச் சித்தின் பேதமாகிய சீவன், சிவனுகிய சித்தன்ருய் சிவனை யின்றித் தனித்து நில்லாது. ஆதலின் அதனை உணர்த்தப் '**பண்ணும் இசையும்**' போல் என உவமை கூறினர்.

(2) அங்ஙனமாயின், ஒலியின் வேறுபாட்டையே பண்ணென்ருற்போலச் சிவத்தின் வேறுபட்டதே சீவன் என்னலாமோ? எனின், சூரியனின் ஒளியையின்றிச் சந்திரனுக்கு ஒளியில்லையாயினும் பொருளால் வேறு காணப்படுமாறு போலச் சிவனையின்றிச் சீவன் தனித்து நிற்றலில்லை யாயினும் 'பொருளால் வேறு ஆகும்' என்பதை உணர்த்த '**வெம் பரிதியும் மதியும்**' உவமை கூறப்பட்டன.

(3) அற்றேல், சூரியனும் சந்திரனும் வேறு வேருகப் பிரித்தறியப்படுமாறு போலச் சிவனும் சீவனும் வேறு வேறு என்று பிரித்து அறியப் படுமோ, எனின், நெய்யைவிட்டு வேறு பிரித்தறிய முடியாத எள்ளைப்போல, சிவனைவிட்டுச் சீவனை வேறு பிரித்தறிய முடியாது, என்பது உணர்த்துதற்கு '**எள்ளும் நெய்யும்**' (திலதைலம்) எடுத்துக் காட்டப்பெற்றன. எள்ளினின்று நெய் வேறு பிரிக்கவும் படுகின்றதே எனின், நெய் உள்ள வரையில்தான் எள்ளெனப்படுமேயன்றி, நெய் பிரிந்த பின்னர் 'சக்கை' எனப்படுமாதலின் இங்குப் பிரித்தறியப்படமாட்டாமைக்குத் 'திலதைலம்' என உவமை கூறியிருப்பது பொருத்தமேயாகும்.

வேருதல் :

(4) நெய்யைவிட்டு எள் தனித்து நில்லாது எனின், சிவனைவிட்டுச் சீவனும் தனித்து நிற்றல் இல்லை என முடியும். சீவன் சிவனை விட்டுத் தனித்து நில்லாதாயின் சிவன் சீவனுக்குப் பொருள்களை அறிவிப்பது எங்ஙனம்? எனின்—, தீயினுற் காய்ச்சப்பட்ட இரும்பு தீயேயாயினும்,தீயின் வேருய் இரும்பு பிரிந்தும் நிற்றலைக் காண்கின்ருேம். அதுபோலச் சிவன் சீவனின் வேருகப் பிரிந்தும் நிற்பனுதலின் சிவன் சீவனுக்குப் பொருள்களை அறிவித்தல் இயலும். இவ்வுண்மையை உணர்த்துதற்கே தீயும் இரும்பும் உவமையாக வந்தன.

(5) தீயின் வேருக இரும்பு தனித்து நிற்பினும் இரும்போடு இயைந்த தீயானது தனித்துக் காணப்படாதவாறுபோல, இறைவன் உயிர்களின் வேருயினும் அவற்ருேடு இயைந்து நிற்றலால் தனித்துக் காணப்பட மாட்டானே? எனின்—, நீரோடு கூடிய உப்பானது நீரேயாயினும் நீரினின்று பிரிந்து உப்பு தனித்து நிற்கவும் பெறுமாறுபோல, உயிர்களோடு கலந்து நிற்கும் இறைவனும் உயிர்களைப் பிரிந்து தனித்தும் நிற்பன். இதனை உணர்த்துதற்கு '**நீரும் உப்பும்**' உவமைகள் ஆயின.

(6) நீரும் உப்பும் ஒரு காலத்திற் சேர்ந்து பிறிதொரு காலத்துப் பிரிந்து நிற்பது போல, உயிரும் இறைவனும் ஒரு காலத்துச் சேர்ந்து மற்ருெருகாலத்தில் பிரிந்திருக்குமோ? எனின்—, காற்று வானத்தை விட்டு எக்காலத்தும் பிரிந்திராதவாறுபோல, உயிர்களும் எக்காலத்தும் இறைவனைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டா. இதனை உணர்த்துவதற்கே '**வானமும் காற்றும்**' (விண், அநிலம்) உவமை யாகக் கூறப்பட்டன.

உடனுதல் :

(7) காற்றுக்கு வானம் இடங்கொடுத்தலே யன்றி, காற்றை அசையும்படி செய்வதில்லையே! அதுபோல இறைவன் உயிர்களுக்கு ஆதாரமாய் நிற்றலேயன்றி, அவற்றை இயக்கிச் செலுத்துதல் இல்லையோ? எனின்—, உடல் அழிவின்றி நிலைபெறுதற்கு ஆதாரமாகிய உயிர், அவ்வுடலை அதனேடு உடன் நின்று இயைந்து செலுத்துவதுபோல, இறைவனும் உயிரோடு இயைந்து நின்று இயக்கிச் செலுத்துவன் என்பதனை வலியுறுத்த, **உடலும் உயிரும்** உவமைகளாகப் போந்தன.

(8) உடலை உயிர் இயக்குதலை, சிவன் சீவர்களை இயக்குதற்கு உவமை கூறின், அதிற் பல பொருந்தாமைகள் தோன்றுகின்றன. உயிரானது நனவின்கண் பரு உடலையும், கனவின்கண் நுண் உடலையும், உறக்கத்தின்கண் காரண உடலையும், அவ்வப்போது பிரிந்தும் கூடியும் இயக்குவதுபோல, இறைவனும் உயிர்களை இயக்குங்கால் கூடியும் பிரிந்தும் நிற்பான் போலும்! எனின்—, நீரி

னிடத்து நிழல் எக்காலத்தும் பிரிப்பின்றிச் சேர்ந்து விரவி நிற்றல்போல, இறைவனும் உயிர்களிடத்துப் பிரிப்பின்றிச் சேர்ந்து விரவியே நிற்பான். இதனைத் தெளிவிக்கும் உவமையே ‘நீர் நிழல்’ என்பது.

(9) நிழலின் உதவியின்றியே நீர் எக்காலத்தும் உவர்ப்பு கைப்பு இனிப்பு முதலிய சுவைகளைப்பற்றி அதுவதுவாய் நிற்கக் காண்கின்றோம். அதுபோல, இறைவனின் உதவியில்லாமலேயே உயிர்களும் எக்காலத்தும் நுகர்பொருள்களைப் பற்றிக்கொண்டு, அதுவதுவாய் நிற்கவல்லனவோ? எனின்—, சூரியனின் ஒளி பக்கத்தில் இருக்கும்பொழுது அவ்வொளியைக் கொண்டே பளிங்கின் ஒளியானது பல வகை நிறங்களைப் பற்றுதலும், சூரியனின் ஒளி உச்சிக்கு வருங்கால் பளிங்கின் ஒளி அச்சூரியனின் ஒளியோடு கலந்து ஒரு நிறத்தையும் பற்றுமல் இருத்தலும்போல, மலப்பிணிப்பு உள்ள காலத்தில் இறைவன் மறைந்து நிற்க அவ்விறைவனின் துணையைக் கொண்டே உயிர்கள் நுகர்பொருள்களைப் பற்றுகின்றன. மலப்பிணிப்பு நீங்கி வீடுபேறு எய்தும் நிலையில் உயிர்கள் இறைவனோடு கலந்து நுகர்பொருள் ஒன்றையும் பற்றுது நிற்கின்றன. இதனைத் தெளிவுறுத்தவே உச்சிப் பளிங்கு உவமையாயிற்று.

(10) உச்சி வேளையில் எதிர்ப்பட்ட பளிங்கு, தன் ஒளி மழுங்காது நிற்கும். அதுபோல முக்திக் காலத்து உயிர்க்குத் தற்போதம் கெடுதலில்லையோ எனின், பகற்காலத்து விளக்கின் ஒளி சூரியனின் ஒளியில் அடங்கி நிற்றல் போல, முக்திக் காலத்தில் சீவன் தற்போதம் கெட்டு, சிவபோதம் உற்று நிற்கும். இவ்வியல்பை விளக்குதற்கே ‘பகல் விளக்கு’ உவமையாக அமைந்தது.

(11) பகற்காலத்து விளக்கு ஒளிமழுங்கிச் செயலற்றிருத்தல்போல, முக்திக்காலத்து உயிர்களுக்கு இன்பநுகர்ச்சி நிகழ்தல் இல்லையோ? எனின்—, பாலானது தன்சுவை முழுவதையும் தன்னோடு கலந்த நீருக்காக்கி, அந்நீரைத் தன்னுள் அடக்கி நிற்கச் செய்யுமாறு போல, இறைவனும் முக்திக் காலத்தில் தன் இன்பம் முழுதையும் உயிர்களுக்கே ஆக்கித் தன்னுள் அடங்கி நிற்கச் செய்வன். இதனை உணர்த்துதற்கே ‘பாலும் நீரும்’ உவமைகள் ஆயின.

(12) நீர் பாலோடு கூடியவழி, பாலின் சுவையாயும், பாலோடு கூடாதவழி தன்சுவையாயும் நிற்குமாறுபோல, உயிர் இறைவனோடு கூடியவழி இறைவனுக்குரிய இன்பமயமாயும், இறைவனோடு கூடாதவழி தனக்குரிய துன்பமயமாயும் நிற்குமோ? எனின்—, கண்ணனது ஒளியுடைப் பொருளாயினும், அக்கண்ணொளி சூரியன் முதலிய பிற ஒளியின் துணையை இன்றி ஒரு காலத்தும் எதனையும் அறியமாட்டாமை போல, உயிரானது அறிவுடைப் பொருளேயாயினும் இறைவனையன்றி எக்காலத்தும் எப்பொருளையும் அறியவல்லது அன்று. இதனை வற்புறுத்துதற்குக் கண்ணும் இரவியும் உவமை கூறப்பட்டன.

(13) கண்ணொளியும் சூரியனின் ஒளியும் கலந்து நிற்பினும், கண்ணும் சூரியனும் வேறுவேறு இடத்தில் இருத்தல்போல, உயிரறிவும் இறையறிவும் கலந்து நிற்பினும், உயிரும் இறைவனும் வேறுவேறு இடத்தில் இருத்தல் கூடுமோ எனின்-, கண்ணொளியின் உள்ளீடாய் விரவி நிற்கும் உயிரையின்றிக் கண்ணொளி நுகர் பொருளை அறியாதவாறுபோல, உயிரின் உள்ளீடாய் உயிர்க்குயிராய் நிற்கும் இறைவனை இன்றி உயிர் ஒன்றனையும் உணராது. ஆதலின் உயிரும் இறைவனும் வேறுவேறு இடத்தில் இராமல், ஓரிடத்திலேயே கலந்து நிற்கும். இதனை உணர்த்தும் உவமையே ‘உணர்வு ஒளி’ என்பது.

> பண்இசை,வெம் பரிதிமதி, திலதயிலம்,
> தீஇரும்பு, பாணி உப்பு,
> விண்அநிலம், உடல்உயிர், நீர் நிழல், உச்சிப்
> பளிங்கு,பகல் விளக்கு, பால்நீர்,
> கண்இரவி, உணர்வொளிபோல், பிரிவரிய
> அத்துவிதக் கலவி காட்டித்
> தண்ணளிவைத் தெனையாண்ட துறைசை
> நமச்சிவாய குரு சரணம் போற்றி!

முடிவுரை :

இங்ஙனம் இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையேயுள்ள ‘அத்துவிதம்’ என்னும் பிரிப்பரிய கலப்பின் பெற்றியினைத் தெளித்தினிது உணர்த்துதற்கு, மிகவும் பொருத்தமான 13 உவமைகளை முறையே தெரிந்தெடுத்து, நிரந்தினிது தொடுத்து நுணுக்கமாகப் பாடிச் சுருங்கக் கூறி, விளங்க வைத்தருளிய சிவஞான சுவாமிகளின் சிறப்பினை யாம் என்னென்பேம்! அவர்தம் அரிய இனிய நூல்களை நாம் அனைவரும் நன்கினிது ஆராய்ந்து கற்றுப் பயன் அடைய முற்படுவோமாக!

[தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின் 84-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், அருண்மொழியரசு திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களின் தலைமையில், சிவஞான சுவாமிகள் குருபூசை விழா நன்னாளில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. (6-5-68).]

ஆசிரியர்.



ஸ்ரீ மீனாட்சியம்மை—மதுரை.

கச்சியும் கச்சபேசமும்

முன்னுரை :

'கச்சி' என்பது காஞ்சிபுரத்திற்கு மிகப் பழங்காலந்தொட்டு வழங்கி வரும் பெயர். "கச்சியோனே கைவண்தோன்றல்'' என்பது பெரும்பாணுற்றுப்படை. மணிமேகலையின் கண் "கச்சி மாநகர் புக்க காதை'' என வருதலும் காணலாம். கச்சி என்னும் சொல்லைப் போலவே 'காஞ்சி' என்னும் சொல்லும் மிகப் பழமையானதொன்று.

அருளியல் நகரம் :

காஞ்சிபுரம் முத்திதரும் நகரங்கள் ஏழனுள் முதன்மைமிக்கது. இதனை 'நகரேஷு காஞ்சி' என்னும் வடசொற்றெடர் இனிதுணர்த்தும். உலகிலேயே மிகப் பழமைவாய்ந்த நகரங்களுள் ஒன்ருக மதிக்கத் தக்க மாட்சிமையுடையது காஞ்சிபுரம். கி. பி. 640இல் இயூன்-சங்கு என்னும் சீனயாத்திரிகன், இங்குவந்து அதன் சிறப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டிச் சென்றிருக்கின்ருன். 'நகர அமைப்பு' (Town Planning) முறையில், காஞ்சிபுரம் உலகிலேயே மிகவும் சிறப்பிடம் பெற்ருெளிர்கின்றது ! என, இதனைப் பேராசிரியர் கெட்டிஸ் துரைமகனர் (Prof Geddes), புகழ்ந்து போற்றுகின்ருர். உலகில் எத்துணையோ சிறந்த பெருநகரங்கள் பல, முன்னளில் தோன்றிச் சிலகாலம் இருந்து, பின்னர் இருந்த இடமும் தெரியாமல், மருங்கற அழிந்து மாய்ந்தொழிந்து போயின.

நமது தமிழகத்திலேயே, சோழர்களின் தலை நகரங்களாக விளங்கிய உறையூர், காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களும், சேர வேந்தர்களின் தலைநகரமாகத் திகழ்ந்திருந்த வஞ்சிமாநகர் முதலியனவும் அழிந்து போயின. ஆனல், பாண்டியர்களின் தலைநகரம் ஆகிய மதுரை, பல்லவர்களின் தலைநகரமாகிய காஞ்சிபுரம் என்பவை மட்டும், தொன்றுதொட்டு இன்றுகாறும், தம் பழம் பெருஞ் சிறப்புக்களிற் சிறிதும் குன்ருது நின்று நிலவி வருகின்றன. மதுரையின் மாட்சிமைக்கு மீனுட்சியம்மை காரணம். காஞ்சியின் பெருமைக்குக் காமாட்சியம்மை காரணம். அம்மையின் அருள் காரணமாகவே, இவ்விரு பெருநகரங்களும் செழித்தோங்கிச் சிறந்து திகழ்ந்து வருகின்றன.

கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர் :

காஞ்சிமாநகரத்தின் புகழ் மிகப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே தேசம் எங்கும் பரவியிருந்தது. பிறதேசங்கள் எல்லாம் காஞ்சியின் சிறப்பினைப் புகழ்ந்து கொண்டாடின. இதனை ஏறத்தாழ 1600 ஆண்டுகட்கு முற்பட்டவராகக் கருதப்பெறும் மாணிக்கவாசகர், "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்'' என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம். 'தேசமெல்லாம் புகழ்ந்தாடுதல்' என்னும் அடைமொழி, கச்சிக்கும் திருவேகம்பன் செம்பொற் கோயிலுக்கும் பொருந்துவதாகும். இங்ஙனமே 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்' என்று, 1300 ஆண்டுகட்கு முற்பட்ட திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற்பாலது.

சந்திரகுப்த மௌரியனின் அமைச்சராக விளங்கி, 'அர்த்த சாஸ்திரம்' என்னும் அரிய பெரிய நூலினை எழுதிய சாணக்கியர், காஞ்சிபுரத்திலேயே பிறந்தவர். சங்கரர், இராமாநுஜர், பரிமேலழகர் போன்ற பெருமக்கள் காஞ்சியில் வாழ்ந்தவர்கள். பௌத்த சமயத்தின் பெருநூலாசிரியர்களாகச் சீன திபெத்து ஜப்பான் பர்மா இலங்கை முதலிய நாடுகளிலெல்லாம் போற்றப்பெறும் புகழ் ஓங்கிய திக்கநாகர், தருமபாலர், தரும கீர்த்தி முதலிய பெருமக்கள், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்

களேயாவர். கடம்ப அரசர் குலத்தைத் தோற்றுவித்த முதல்வனுகிய **மயூரசன்மன்** (கி. பி. 350) என்னும் மன்னவன், பல்லவர்களுக்குப் பகைவனுயினும், 'கல்வியிற் கரை இலாத காஞ்சி' மாநகரத்தின் சிறப்புக் கருதி, அங்கு மாறுவேடங் கொண்டு மறைந்து வந்திருந்து, கல்வி பயின்று சென்றனன் என வரலாறு கூறுகின்றது! காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயிற் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றனவாகும்.

சான்றேர்கள் போற்றிய காஞ்சி :

திருக்குறிப்புத் தொண்டர், சாக்கியர், ஐயடிகள் காடவர்கோன் என்னும் நாயன்மார்கள், வாழ்ந்திருந்து வழிபட்டுஅருள்பெற்ற மாட்சிமை சான்றது காஞ்சிபுரம். கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியர், சேக்கிழார் சுவாமிகள், சிவஞான சுவாமிகள், தணிகைப் புராணம் முதலியன பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பெருமக்கள் பலரும், காஞ்சிபுரத்தின்பால் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். காஞ்சிபுரத்தில் தங்கியிருந்த பொழுதே ஆசிரியர் சிவஞான சுவாமிகள், சிவஞான போதப் பேருரையினை வகுத்தருளினர் என்பர். சேக்கிழார் சுவாமிகள், திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றினைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தொண்டை நாட்டின் பெருமையினையும், காஞ்சிபுரத்தின் சிறப்புக்களையும் 60 பாடல்களிற் சுவை துளும்பப் பெரிதுவந்து பாடுகின்ருர். காஞ்சி என்னும் சொல்லே, அவர்தம் திருவுள்ளத்தில் தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்கின்றது. ஆதலின் அவர் அதனைத் திரும்பத் திரும்பப் பலகால் பல பொருள்களில் அமைத்துப் பின்வரும் செய்யுளிற் பாடி இன்புறுத்துகின்ருர்.

"தண் காஞ்சி மென்சினைப்பூங் கொம்பர் ஆடல்
சார்ந்தசைய, அதன்மருங்கு சுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழன வேலிப்
பண்மருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்
திண்காஞ்சி நகர், நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு, திருமறைகள்ஒலிக்கும் தெய்வ
வன்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
வளர்கருணைக் கடலுலகம் சூழ்ந்தால் மானும்"

இதன்கண் 'காஞ்சி' என்னும் சொல், முறையே காஞ்சிமரம், காஞ்சிப்பண், காஞ்சி நகரம், காஞ்சி என்னும் அணிகலன் ஆகிய பொருள்களைக் குறிக்கும் வண்ணம் வழங்கப் பெற்றுள்ளது.

காஞ்சி என்னும் சொற்பொருட் காரணம்:

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் திருவாய் நவிற்றி மகிழ்ந்த 'காஞ்சி' என்னும் சொல்லின் செம்பொருட் குறிப்புக்களை யெல்லாம், ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தாம் இயற்றியருளிய காஞ்சிப்புராணம் என்னும் நூலில் அழகுற விளக்குகின்ருர்.

க+அஞ்சி : காஞ்சி

(1) சிவபெருமானை. அம்மை அயன் மால் முதலிய பலரும் வழிபட்டு அருள்பெற்ற இடமாதலின், 'காஞ்சி' என்னும் காரணப் பெயர் இந்நகரத்திற்கு அமைவதாயிற்று. க-பிரம்மம், சிவபெருமான்; அஞ்சித்தல்-வழிபடுதல்.

"பிறங்கு கவ்வெனும் மொழிப்பொருள் பிரமம்.
பிரமம் ஆனயாம் அஞ்சிக்கப் பட்டலால்,
உறங்கிடாப் புகழ்க் காஞ்சிஎன் றுரைக்கும்
ஒருதிருப் பெயர் எய்தும் இந்நகரம்"

'பிரமம்' என்னும் சொல் சிவபெருமானைக் குறிக்கும் என்பதற்குப் பாம்பன் குமர குருதாச சுவாமிகள், "ஆதிப்பிரமம் வெளிப்படுத்த அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே" என வரும் திருவாசகத் திருமொழியினை, மேற்கோள் காட்டியிருப்பது ஈண்டு உணர்ந்து இன்புறுதற்குரியது.

(2) நான்முகக் கடவுளாகிய பிரமன் வழிபட்டு உலகைப்படைக்கும் ஆற்றலைப் பெற்ற இடம். க-பிரமன், அயன், நான்முகன்; அஞ்சுதல்—பூசித்தல், வழிபடுதல்.

"கவ்வென்பது அயன்பேர் என்ன, முந்து இருக்கு ஓதும்
அஞ்சு என்பகுதி அடைவொடு பூசைமொழியும் மாதோ'.
"திசைமுகனல் அஞ்சிக்கப் படுத லினல்
காஞ்சி எனத் திசைபோய் மல்கும்"

(3) எத்தகையவரும் தலையாய தலம் எனச் சென்னி மேற்கொண்டு வழிபடத் தக்கது. க-சென்னி, தலை; அஞ்சித்தல்-வழிபடுதல்.

(4) யாவர்க்கும் பேரின்பத்தை அடைவிப்பது. க-இன்பம்; அஞ்சித்தல்-அடைவித்தல்;

"மற்றும் கவ்வெனல் சென்னியோடு இன்பம்
மலரவன் தனையுணர்த்தும்; அஞ்சித்தல்
சொற்ற பூசனை அடைவும் ஆம்; யாரும்
சென்னி மேற்கொடு தொழத்தகும் சிறப்பால்,

பற்றி வைகுநர் பேரின்பம் உறலால்,
பங்க யத்தவன் வழிபட லானும்,
பெற்ற தாகும் இத்தி ருப்பெயர்; இதனல்
பிரம லோகம் என்று ரைக்கவும் படுமால்.''

(5) நிலமகளுக்கு உந்தித் தானத்தைப் போன்று சிறந்த தலம். காஞ்சி-மகளிரின் உந்தி, கொப்பூழ்.

''இலகு வாள்நகை அரிமதர் மழைக்கண்
இருண்ட வார்குழல் வேய்மருள் பணைத்தோள்
கலப மாமயில் இயல்எழில் மடவார்
உந்தித் தானத்தைக் காஞ்சி என்றுரைப்பர்;
சுலவு வெண்டிரைப் பனிக்கடல் உடுக்கைத்
தொல்லை நானில மடக்கொடி தனக்குக்
குலவு காஞ்சிநற் ருனமாய்ப் பொலிந்த
கொள்கை யானும் அத்திருப்பெயர் வழங்கும்''

காஞ்சியின் சிறப்பு :

காஞ்சிபுரம் கோயில்கள் நிறைந்த நகரம். அதனைப் போன்று மிகச் சிறந்த கோயில்கள் நிறைந்த நகரம் பிறிதொன்றில்லை எனலாம். பலவகைப்பட்டனவும், பழமையும் பெருமையும் வாய்ந்தனவும் ஆகிய கோயில்கள் அங்குள்ளன. சமணம்பௌத்தம்சைவம்வைணவம் சாக்தம் என்னும் பலவேறு சமயங்களின் கோயில்களும், அங்கு உண்டு. பல்லவர்காலம், சோழர்காலம், பிற்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த பல கோயில்கள், அந்நகரை அணி செய்கின்றன.

அதுபற்றியே ''கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே'' என நாவுக்கரசர் நவின்றருளினர். காஞ்சிபுரத்தின் அதிசயங்கள் குறித்துச் சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றிலும், கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் திருநகரப் படலத்திலும், சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணம் விம்மிதப் படலத்திலும், விரிவாக விளக்கிப் பாடியுள்ளனர். சீர்காழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உளவாதல் போல, காஞ்சிபுரத்திற்கும் பன்னிரண்டு பெயர்கள் வழங்கும். அவை முறையே காஞ்சிபுரம், பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம், என்பனவாகும். இப்பெயர்க் காரணங்களால், காஞ்சிபுரத்தின் அருமை பெருமைகளை யாவரும் அறிந்தின்புறலாம்.

காஞ்சியைப் பற்றிய தனிக் கவிதைகள் :

காஞ்சிபுரத்தைப் பற்றிப் பலப்பல சிறந்த அழகிய இனிய தனிக் கவிதைகள், இலக்கியங்களில் வழங்குகின்றன. அவைகள் அறிஞர்களின் உள்ளங்களைப் பெரிதும் கொள்ளை கொள்ள வல்லவை. அவற்றின் பொருட் சுருக்கம் வருமாறு :—

''இருபுறத்தும் உள்ள ஏரிகள், இரண்டு சிறகுகளாகவும் மதிலே வயிருகவும், சோலைகளே தோகையாகவும், அத்தியூர் என்னும் சிறிய காஞ்சியே அலகாகவும் அமைய, காஞ்சிமாநகரம் அழகிய ஒரு மயிற் பறவையைப் போன்றுள்ளது.''

''கடலும் காஞ்சிமாநகரும், ஒலியினுலும் பரப்பினுலும் தம்முள் சமமாக இருக்கும். ஆனல், காஞ்சியிற் கிடைக்கும் பொருள்கள், கடலிற் கிடைக்கமாட்டா; கடலிற் கிடைப்பன எல்லாம் காஞ்சியிற் கிடைக்கும்.''

''திருமால், காஞ்சிபுரத்தில் வெஃகா என்னும் யதோக்தகாரி கோயிலில் கிடந்த திருக்கோலமாகவும், பாடகம் என்னும் பாண்டவ தூதர் கோயிலில் இருந்த திருக்கோலமாகவும், ஊரகம் என்னும் உலகளந்த பெருமாள் கோயிலில் நின்ற திருக்கோலமாகவும் எழுந்தருளியிருக்கின்ருர். இத்தகைய பெருமை வாய்ந்த காஞ்சிபுரத்தை மானிடர்கள் எவ்வாறு விட்டு நீங்குவார்கள்?''

''பழமைமிக்க வேதங்கள் ஆராய்கின்ற சிவபெருமான் ஆகிய கணவன்பால், காமாட்சியம்மை ஓராண்டளவும் இருநாழி நெல்லைப் பெற்றுக் காஞ்சிபுரத்தில் 32 அறங்களையும் செய்து, உலகத்தில் இருக்கின்ற உயிர்களை எல்லாம் உணவூட்டிப் பாதுகாக்கின்ருள்.''

''காமாட்சியம்மையின் தனங்கள் அழுந்து தலாற் குழைந்த திருவேகம்ப நாதரும், தூண்டாத தெய்வச் சுடர்விளக்கு ஆகிய விளக்கொளி எம்பெருமானும், வள்ளன்மைமிக்க பெருந்தகையோர்களும் இருத்தலால், காஞ்சி மாநகரமானது என்றும் அழியாது நிலைபெற்றிருக்கின்றது.''

ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிருக்,
காருடைய பீலி கடிகாவா,—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா, அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு.

மலிதேரான் கச்சியும், மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும்; மலிதேரான்
கச்சி படுவ கடல்படா; கச்சி
கடல்படுவ எல்லாம் படும்.

"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார்?
வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான்! இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு?"

தொல்லை மறைதேர் துணைவன்பால், ஆண்டுவரை
எல்லை இருநாழிநெற் கொண்டோர்-மெல்லியலாள்,
ஓங்குலகில் வாழும் உயிர்அனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி இடை.

"பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டிவ் வுலகு"

என்பன போன்ற பல தனிப்பாடல்கள், காஞ்சியின் பெருமையைக் குறிப்பனவாகத் தண்டியலங்காரம், வீரசோழியம், யாப்பருங்கலம் முதலிய தமிழிலக்கண நூல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட்டம் காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன்—
கைச்செண்டு,
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு."

என்னும் பழைய வெண்பாச் செய்யுள் ஒன்று, அடியார்க்கு நல்லார் அவர்களால், தமது சிலப்பதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்தாளப் பெறுகின்றது. காஞ்சி காமாட்சியம்மை கோயிலைக் காவல்புரியும் சாத்தனாரின் கையிலுள்ள செண்டு என்னும் படைக்கலனைப் பெற்றே, கரிகாற் சோழன் இமயத்தின்மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றான் என்பது, இவ் வெண்பாவின் பொருள்.

ஏகம்பநாதர்; காஞ்சிபுரம் ஏகம்பநாதர் கோயிலைப்போலவே, கச்சபேசமும் முதன்மையும் சிறப்பும் வாய்ந்த கோயில் ஆகும். இறைவன் 'வெள்ளங் காட்டி வெருட்டிட' அம்பிகை நடுக்கம் (கம்பம்) கொண்டு, சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்ட காரணத்தால், கோயில் 'ஏகம்பம்' எனப் பெயர் பெற்றது. ஆம்ப்ரம்-மாமரம். இறைவன் ஒரு மாமரத்தின் கீழ் (ஏகம்+ஆம்ப்ரம்=ஏகாம்பரம்) எழுந்தருளியிருத்தலின், ஏகாம்பரநாதர் எனப் பெயர் பெற்றார் எனினுமாம்.

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கால ரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

எனவரும் சுவைமிகுந்த காளமேகப் புலவர் பாடலில், ஏகாம்பரநாதர் 'ஒரு மாவின் கீழர்' எனக் குறிப்பிடப்படுதல் அறிதற்குரியது.

"இருகால்களோடு ஊன்றுகோல் ஆகிய ஒரு காலையும் சேர்த்து மூன்று கால்களைக் கொண்டு நடப்பதற்கு நேரும் முன்னே, கருமை நிறம் கழிந்து நரைமயிர் தோன்றுவதற்கு முன்னே, எம தூதர்கள் வருவதனைக் கண்டு பயப்படுவதற்கு முன்னே, விக்கலும் இருமலும் வருவதற்கு முன்னே, மாகாணி என்னும் சுடுகாட்டிற்குச் செல்வதற்கு முன்னே, காஞ்சிபுரத்தில் வேதமாகிய ஒற்றை மாமரத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் திருவேகம்பநாதரை இப்போதே வழிபட்டு உய்க" என்பது இப்பாடலின் பொருள்.

கச்சபேசம் : 'கச்சபேசம்' என்னும் தொடர், கச்சபம் ஈசம் என்னும் இருசொற்கள் கொண்டது. கச்சபம்-ஆமை. ஈசம்-கோயில், ஈசன் எழுந்தருளியிருப்பது. இச்சொல் ஈச்சுரம், ஈச்சரம், எனவும் வழங்கும். அமிர்தம் பெறுவதன் பொருட்டுத் தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது, திருமால் ஆமை வடிவம் கொண்டு மந்தர மலையைத் தாங்கினர் என்பது வரலாறு. கச்சபம் என்னும் ஆமை வழிபட்ட திருக்கோயிலே 'கச்சபேசம்' எனப் பெயர் பெற்றது. கச்சப ஆலய ஈசுவரர் என்னும் சொற்றொடரே கச்சாலீசுவரர் என மருவி வழங்கி வருகின்றது. 'கச்சாலை' என்னும் மரூஉச்சொல் 'கச்சபேசம்' என்பதனைக் குறிக்க, நெடுங் காலத்திற்கு முன்னரே நூல்களில் வழங்கியிருக்கின்றது.

"நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்—
தோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்கு இறை"

"சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால்
சென்றகன்ற
காலத்தால் ஆராத காதலால்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக் கனி"

இவ்விரண்டு பாடல்களும் 'தண்டியலங்காம்' என்னும் அணி இலக்கண நூலில் மேற்கோட் செய்யுள்களாக வருகின்றன. கயிலாசநாதர் கோயிலைக் கட்டுவித்த இராசசிம்மன்

(கி.பி. 685—705) என்னும்பல்லவ மன்னனின் அவைக்களப் புலவராக விளங்கியிருந்த **தண்டி** என்னும் வடமொழிப் புலவர் இயற்றிய **காவ்யாதர்சம்** என்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பே, தமிழ்த் தண்டி யலங்கார நூல். இதனைத் தமிழில் மொழிபெயர்த்து இயற்றியவர் அநபாய சோழனின் காலத்தவர் என்பதும், **ஒட்டக்கூத்தர்** என்னும் புலவர் பெருந்தகையின் மாணவர் என்பதும், அந் நூலின் பாடல்களில் வரும் குறிப்புக்களைக் கொண்டு தெளியப்படுகின்றன.

காஞ்சிபுரத்தில் மிக முதன்மை வாய்ந்த திருக்கோயில்களுள் ஒன்றுகத் திகழும் கச்ச பேசம் பற்றியும், தேவாரத் திருப்பதிகங்கள் பாடப் பெற்றிருத்தல் வேண்டும். அவைகள் இப்போது கிடையாமற் போயினமை, நம் மனோர் தவக்குறைவேயாகும். எனினும் இவ் விரண்டு பழம் பாடல்களும், கச்சபேசுவரப் பெருமானை நாம் நினைந்து துதித்து உய்தற்குத் துணைபுரிவன ஆகும்.

''கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்
கற்புத்தப் பாதுல கேழையும்
ஒக்கப்பெற் ருள்வினை யாடிய
கச்சிக்கச்சாலையில் மேவிய பெருமாளே''

எனவரும் திருப்புகழ்ப் பாடலும் ஈண்டு உணர்தற்குரியது.

காஞ்சிபுரம் எண்ணிறந்த திருக்கோயில் களை உடையது. அவற்றுள் மூன்று அருள் நிலைத் தானங்களைத் தலை சிறந்தவையெனக் காஞ்சிப் புராணம் எடுத்துக் கூறுகின்றது. திருவேகம்பம், கச்சபேசம், காயா ரோகணம் என்பவை அவை. இம்மூன்று இடங்களிலும் இருக்கின்ற சிவலிங்க மூர்த்திகள் சுயம்பு (தாமே தோன்றியவை) ஆக உள்ளவை. இம் மூன்று மூர்த்திகளும் வேதவடிவாகவுள்ள மாமரம், முருக்க மரம், வில்வமரம் என்ப வற்றின் அடியில் இருப்பவை. மாவடி, முருக்கடி, வில்வத்து அடி என்பவை ஓங்கார மாகிய பிரணவத்தைக் குறிப்பவை. முதல்வன் ஓங்காரத்தின் பொருளாய், அதனை இருப்பிட மாகவும், வடிவமாகவும் கொண்டிருக்கின்ருன் என்பது வேத நூல் துணிபு.

திருவேகம்பத்தில் உமையம்மையும் மும் மூர்த்திகளும் வழிபட்டு அருள்பெற்றுற்போல, கச்சபேசத்தில் பிரமதேவனும் திருமாலும் வழி பட்டு அருள் பெற்ருர்கள் எனப் புராணம் கூறுகின்றது. இம்மூன்றனுள் திருவேகம்பத் திற்கு அடுத்த நிலையில் வைத்துச் சிறப்பித் துக் கூறப்படும் தலம் கச்சபேசம் ஆகும்.

இது ஒரு சிறந்த பிரார்த்தனைத்தலம். கார்த்திகை மாதமும் ஞாயிற்றுக் கிழமை களும் வழிபாட்டிற்குரிய சிறந்த காலங்கள். சித்திரை மாதத்து உத்திரநாளில் திருக்கல் யாணமும், அதைச் சார்ந்த 12 நாட்கள் மகோற்சவமும் ஆண்டுதோறும் நிகழும். அம்மையின் திருப்பெயர் சுந்தராம்பிகை, அழகம்மை.

இடம் : இத்தலம் பெரிய காஞ்சிபுரம் மேலை அரச வீதியின் தென்கோடியில், வீதியை நோக்கிய கோபுர வாயிலை உடையதாய் உள்ளது. புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கில் சுமார் இரண்டு கல் தொலை விலும், நகரப் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே கயிலாசநாதர் கோயிலுக்குச் செல் லும் வழியில் சுமார் அரை கல் தொலைவிலும் உள்ளது.

மூர்த்தியின் சிறப்பு : இங்குள்ள சிவலிங்க மூர்த்தி பிருதிவியால் சுடர் வடிவில் அமைந்து தீண்டாத் திருமேனியாய் விளங்குவது. கிழக்கு நோக்கிய திருமுன்பை உடையது. இம்மூர்த்தி இஷ்டசித்தி தீர்த்தக் கரையின் தென்சார்பில் உள்ளது. இஷ்டசித்தீசம் என்னும் தல இதற்கும், வடமேற்கில் மேற்கு நோக்கிய சந்நிதியை உடையதாய் இத்திருக் கோயிலின் உள்ளடங்கியுள்ளது. இன்னும் வேதசித்தி ஞானசித்தி யோகசித்தி தர்ம சித்தி என்னும் சித்தித்தலங்களையும், துர்க்கை ஐயனுர் சூரியன் வயிரவர், விநாயகர் என்னும் மூர்த்திகளின் ஆலயங்களையும் கோட்டங் களையும் தன்கண் அடக்கிக் கொண்டுள்ளது. இங்குள்ள இஷ்டசித்தித் தீர்த்தம் 'வேண்டினுர் தமக்கு இட்ட சித்தியதாய் விளங்கு தீர்த்தம்' எனப் பெரிய புராணத்தில் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

கதையும் கருத்தும் :

தல புராணங்களிற் கூறப் பெறுகின்ற கதைகள், நம்மிற் சிலருக்குப் புறக்கணிக்கத் தக்கன போலத் தோன்றலாம். எனினும், இத்தகைய கதைகள் எத்துணையோ பல நூற்றுண்டுகளாக நம் முன்னோர்களாற் சொல்லவும் கேட்கவும் சுவைக்கவும் பெற்று வழங்கி வருவன. இலக்கியம் வரலாறு சமு தாயம் பண்பாடு முதலிய துறைகளில் இன் னேரனைய கதைகள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. அவைகளை ஏற்றபெற்றி போற்றுதல் நமக்குக் கடமையாகும். *

இத்தல வரலாறு கூறும் கதை, பல நுண் பொருள்களைக் கொண்டுள்ளது. உயிர்களாகிய நம்மையே, அஃது ஆமையாக உருவகம் செய்து உணர்த்துகின்றது. ஆமை வடிவம் அறியாமையில் அழுந்தி வருந்தும் உயிர்களாகிய நம் இயல்பினைச் சுட்டுகின்றதெனலாம். ஆமையின் கால்கள் நான்கும், தலை ஒன்றும் ஆகிய ஐந்தும், உயிர்களின் ஐம்பொறிகளை யுணர்த்தும். ஆமை நீரும் நிலமும் ஆகிய ஈரிடத்தும் உலவும் தன்மையுடையது. உயிர்கள் நல்லதனோடும் தீயதனோடும் தொடர்பு கொள்ளும் தன்மையினை, இது குறிக்கின்றது. ஆமையின் மந்தகதி, உயிர்களின் தெளிவற்ற மந்தத் தன்மையினைப் புலப்படுத்தும். திருநாவுக்கரசர் தம்மை ஓர் ஆமையின் நிலைக்கு ஒப்பிட்டுக் கொள்ளுகின்றார்.

"வளைத்துநின் றைவர் கள்வர்
வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையை ஏற்றித்
தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற
ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றேன்
என்செய்வான் தோன்றி னேனே"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். முதலில் இன்பம் போலத் தோன்றி மயக்கிப் பின்னர்ப் பெருந்துன்பத்தில் அழுத்தி வருத்தும் உலகியல் நுகர்ச்சிகளில் உழலும் உயிர்களின் தன்மைக்கு, உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரின் இளஞ்சூட்டினை முதலில் மகிழ்ந்து, பின்னர்ச் சூடு ஏறஏறத் தாங்கொணது பெரிதும் தளர்ந்து வருந்திமாயும் ஆமையினுடைய தெளிவின்மையினை, நாவுக்கரசர் உவமை கூறியிருத்தல் நனிமிகப் பொருந்துவதாகும். இஃது உயிர்களாகிய நம்மனோரின் அறியாமை நிலைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு! நாலடியார் (331) செய்யுளிலும் இக்கருத்து வந்துள்ளது. இனி, மெய்யுணர்வு எய்தத்தக்க உயிர்களின் மேதகு நிலைக்கும் ஆமையையே ஏற்ற உவமையாக

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

எனவரும் திருக்குறளில், ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருக்கும் திறம், அறிந்தின்புறற் பாலது.

முடிவுரை :

ஆமை வழிபட்டு அருள்பெற்ற கச்சிக் கச்சபேசப் பெருமானை, நாமும் 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றி' வழிபட்டு நன்னெறி ஒழுகி நலம்பலவும் எய்தி உய்ய முயல்வோமாக!

[காஞ்சிபுரத்தில் ஸ்ரீ சுந்தராம்பிகை சமேத கச்சபேசுவரப் பெருமானுக்கு 1—5—68 புதன் கிழமை காலை நிகழ்ந்த திருக்குட முழுக்கு விழாச் சிறப்பின் நினைவாக, இக்கட்டுரை அமைந்தது] —ஆசிரியர்.

---

* "In these anecdotes there is doubtless a large mixture of fable; but they are not on that account unworthy of being recorded; for it is both an authentic and an important fact that such tales, whether false or true, were heard by our ancestors with eagerness and faith."

—LORD MACAULAY,
in The History of England.

"Indian mythology is richer, vaster, very beautiful and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these bright dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them... Many of the problems of human life have a permanence and a touch of eternity about them, and hence the abiding interest in these ancient books...We can admire them and they become part of our mental heritage"

—JAWAHARLAL NEHRU,
The Discovery of India.

மணவாள மாமுனிகள்

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் தத்துவங்களை உலகிற்கு உபதேசித்து எங்கும் பரவச்செய்து வளர்த்த பெரியவர்களை ஆழ்வார்கள் என்றும், ஆசாரியர்கள் என்றும் இருவகையாக வழங்குவர். திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்களை அருளிச் செய்து, தீதில் நன்னெறி ஆகிய ஞானச்சுடர் விளக்கினை ஏற்றித் தெய்வ அருள் ஒளி பரப்பியவர்கள் ஆழ்வார்கள் என்று சிறப்பிக்கப் பெறுவர். ஆழ்வார்கள் ஏற்றிய ஞானச் சுடர்விளக்கினை, உலக மக்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் விளங்கச் செய்தவர்கள் ஆசாரியர்கள் என்று போற்றிப் புகழப்பெறுவர்.

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் ஆசாரிய பரம்பரையில் முதல்வராகக் குறிப்பிடத்தக்கவர் நாதமுனிகள் ஆவர். இவர் காட்டுமன்னார் குடி என்னும் வீரநாராயணபுரத்தில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். 9-ஆம் நூற்றுண்டில் விளங்கியவர். இவருக்குப்பின்னர் அடுத்தடுத்து முறையே உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, இராமானுசர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், திருவாய்மொழிப் பிள்ளை என்னும் திருமலை ஆழ்வார் ஆகியோர் ஆசாரியர்களாக விளங்கி, ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தைப் பரப்பி வளர்த்துச் செழித்து ஓங்கச் செய்து வந்தார்கள்.

இப்பெருமக்களின் வரிசையில், திருவாய்மொழிப்பிள்ளையின் மாணவராக விளங்கியவரே, மணவாள மாமுனிகள் என்னும் பேராசிரியராவர். இவர் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில், திருநாவீறுடையபிரான் தாசரண்ணர் என்பவரின் திருமைந்தராக அவதரித்தவர். அந்தணர் மரபினர். 'அழகிய மணவாளன்' என்பது இவர்தம் இயற்பெயர். இவர் சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் தேர்ந்தவர்; சுருதிகள் நான்கும் ஆய்ந்து தோய்ந்தவர்; எல்லை இல்லா அறநெறியாவும் தெரிந்தவர். இவர் இல்லறமெனும் நல்லறம் கடைப்பிடித்து ஒழுகிவந்தார். அப்போது இவருக்கு இராமானுசப்பிள்ளை என்னும் ஒரு திருக்குமாரர் தோன்றியருளினர். ஜீயர்நயினர் என்பவர் இவருடைய பௌத்திரர்.

இவர்தம் ஞானசாரியரான திருவாய்மொழிப் பிள்ளை, இவரை 'ஆம் முதல்வன்' என்று குளிரக் கடைக்கணித்துத் தம்திருவடி வாரத்திலேயே, நிழலும் அடிதாறும்போன்று வைத்திருந்து, தம்முடைய சேமவைப்பான பொருள் நலங்கள் கலைத்திறங்கள் எல்லாவற்றையும், முறையே உபதேசித்து அருளினர். திருக்குருகூரில் இராமானுசருக்குத் தாம் எடுப்பித்த கோயிலையும், 'இராமானுச சதுர்வேதி மங்கலம்' என்னும் திருவீதியையும், அவற்றிற்குரிய நற்செல்வம் அனைத்தையும், இவர்பால் ஒப்படைத்து அவற்றை நன்கினிது ஆண்டு புரந்து வருமாறு பணித்தருளினர். அதன்படியே, இவரும் உடையவர் திருவடிகளிலே மிகவும் ஈடுபாடு கொண்டவராய்த், தமது கைங்கரியங்களைக் குறையற நடத்திக் கொண்டு போந்தார். அதுகண்டு மகிழ்ந்த திருவாய்மொழிப்பிள்ளை இவருக்கு ''யதீந்த்ரப் பிரவணர்'' என்னும் சிறப்புப்பெயர் அளித்து வழங்குமாறு செய்வித்தார். இவர் தமது ஆசாரியரின் கட்டளைப்படி, திருக்குருகூரில் கோயில் கொண்டுள்ள இராமானுசரைப் பற்றி 20 சுலோகங்களால் ''எதிராஜ விம்சதி'' என்று ஒரு துதி நூலை அருளிச்செய்தார்.

''வல்லவர்கள் வாழ்த்தும் குருகேசர்
தம்மை மனத்துவைத்துச்
சொல்லார வாழ்த்தும் மணவாள
நாயனர் தொண்டர்குழாம்

எல்லாம் தழைக்க எதிராஜ
விம்சதி இன்றளித்தோன்
புல்லார விந்தத் திருத்தாள்
இரண்டையும் போற்றுநெஞ்சே"

என இந்நூலின் சிறப்பினைப் பெரியோர்கள் வியந்து போற்றியுள்ளனர்.

இவர் திவ்விய தேச யாத்திரை செய்ய விரும்பிப் புறப்பட்டுக் காஞ்சிபுரம் வந்தடைந்து, அங்கு எழுந்தருளி விளங்கும் பெருமாளைச் சேவித்துத் "தேவராஜ மங்களம்" என்ற துதி நூலை வடமொழியில் அருளிச் செய்தார். காஞ்சியில் ஒருவருடம் தங்கியிருந்தபொழுது திருவெஃகா என்னும் யதோக்தகாரி சந்நிதியில், இராமாநுசர் இயற்றிய ஸ்ரீபாஷ்யப் பிரவசநம் செய்தருளினர்.

ஸ்ரீ ரங்கநாதர் பணித்தருளியபடி நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களைக் குறித்து, ஸ்ரீரங்கம் பெரியகோயிலில் கருட மண்டபத்தில் ஓராண்டு காலம் விளக்கம் செய்து வந்தார். ஸ்ரீரங்கநாதர் அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து,

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்
தீபக்த்யாதி குணர்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே
ரம்யஜாமாதரம்முநிம் :

என்னும் சுலோகத்தினைக் குருகாணிக்கையாக அருளிச்செய்து, இவரைச் சிறப்பித்தார் என்பது வரலாறு. வேதத்திற்குப் பிரணவம் போலே, திவ்யப் பிரபந்தமாகிய திராவிட வேத அநுசந்தானத்திற்கு இச் சிறந்த தனியனே முதலும் முடிவுமாக வழங்கி வருகின்றது.

பெருமாள் சேவைக்கும், திவ்யப்பிரபந்த வியாக்யான ப்ரவசனங்களுக்கும், உடல் தொடர்புடைய உறவினர்களின் மறைவால் நேரும் வாலாமை முதலியன, இடையிடையே தடையாக நேர்தல் குறித்து வருந்தி, இடையறுத தொண்டுசெய்தற் பொருட்டு, இவர் ஸ்ரீசடகோபஜீயர் என்னும் பெரியவர் பால் துறவறத்தை மேற்கொண்டார். அது முதல் இவருக்கு மணவாள மாமுனிகள் என்பது பெயராயிற்று.

இராமாநுசரைப் போலவே, இவரும் திருவரங்கம் பெரிய கோயிலில் திக்குற்ற கீர்த்தி மிக்கவராய்ச், சிறப்புடன் வாழ்ந்து வந்தார். அப்போது இவரை ஆசாரியராக வரித்து உய்ந்தவர்கள் பற்பலராவர். அவர்களுள் முதன்மையாக வைத்து எண்ணத் தக்கவர்கள் எண்மர். அவர்கள் "அஷ்டதிக் கஜங்கள்" என்று சிறப்பித்துப் பேசப்படுவர். அவர்களாவார் :—

1. வானமாமலை ஜீயர்
2. பட்டர்பிரான் ஜீயர்.
3. திருவேங்கடராமாநுஜ ஜீயர்.
4. கோயில் அண்ணன்.
5. பிரதிவாதி பயங்கரம் அண்ணன்.
6. எறும்பியப்பா.
7. அப்பிள்ளை.
8. அப்பிள்ளார்.

மணவாள மாமுனிகள் உலகமக்கள் ஈடேறுதற் பொருட்டுத் திருவுள்ளம் இரங்கி அருளிச் செய்த நூல்கள் பல. பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்த 18 ரகசியங்களுள் ஸ்ரீவசனபூஷனம், தத்துவத்திரயம், முமுட்சுப்படி என்னும் மூன்றற்கு விளக்கவுரைகள்; பெரியாழ்வார் திருமொழியின் முதல் 420 திருப்பாசுரங்களுக்கு வியாக்கியானம்; அருளாளப் பெருமாள் எம்பெருமானர் அருளிச் செய்த ஞானசாரம், பிர்மேயசாரம் என்னும் இரு நூல்களுக்கும் பொருத்தமான புராண சுலோகங்கள் ; ஆசார்ய ஹ்ருதயம் என்னும் நூலின் வியாக்கியானம், உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழிநூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம் என்பன மணவாளமாமுனிகள் இயற்றிய நூல்களாகும். இந்நூல்களினல் வேத வேதாங்கங்களிலும், இதிகாச புராணங்களிலும், அருளிச் செயல்களிலும், இவருக்கு இருந்த பரந்த பெரும்புலமை இனிது புலனுகின்றது. வைணவ சமய ஐதிகங்களையும் உருவகங்களுக்கு அமைந்த உள்ளுறைப்பொருள்களையும் எடுத்து விளக்கும் திறனில், மணவாளமாமுனிகளுக்கு இணையாவார் எவருமிலர்.

செந்தமிழ் வேதியர்
தெளிந்துசிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருல காரியர் செய்தருள்
நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப்புவி மானிடர்
தங்களை வானில் உயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரெதி
ராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள்

கந்த மலர்ப்பொழில் சூழ்குரு
காதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர் மேனி யரங்க
நகர்க்குஇறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர்மணவாள
முனிப்பரன் அவதாரம் செயும்நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில்
திருமூலம் அது எனும் நாளே

எனவரும் செய்யுளால், இவருடைய அவதாரத்தின் சிறப்பினை யாவரும் அறியலாம். இவர்தம் சமகாலத்தவராக விளங்கியிருந்த திருநாராயண புரத்து ஆய் என்னும் பெரியார்,

பூதூரில் வந்துதித்த புண்ணியனே? பூங்கமழும்
தாதார் மகிழ்மார்பன் தானிவனே?—தூதுர
வந்தநெடு மாலோ ? மணவாள மாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார் ?

என வினவி வியந்து, இவர்தம் பெருமையைச் சிறப்பித்துப் பெரிதும் போற்றியுள்ளார்.

இராமானுசர்பால் இவருக்கு இருந்த ஈடுபாடு எல்லையற்றது. இராமனுசரைச் சேவிப்பதற்கு, அவர் திருவவதரித்த ஸ்ரீபெரும்புதூர்க்கு எழுந்தருளும்பொழுது, அவ்வூர் அணித்தானவர்றே, அதனைக்கண்டு இவர் பின்வரும் வெண்பாக்களை அருளிச் செய்தனர்.

இதுவோ பெரும்பூதூர் ! இங்கே பிறந்தோ
எதிராசர் எம்மிடரைத் தீர்த்தார் !—இதுவோதான்
தேங்கும் பொருநல் திருநகரிக்கு ஒப்பான
ஓங்கு புகழுடைய ஊர் !

எந்தை எதிராசர் எம்மை எடுத்தளிக்க
வந்தபெரும் பூதூரில் வந்தேமோ !—சிந்தை
மருளோ ! தெருளோ ! மகிழ்மாலை மார்பன்
அருளோஇப் பேற்றுக் கடி !

மணவாள மாமுனிகளின் மாட்சிமை மிக்க அரும்பெருங்குண நலங்களின் சிறப்பினையும், தெய்விகப் பணித்திறத்தினையும், அதனுல் அவர் பெற்றிருந்த மனநிறைவின்மிக்க பெருமிதப் பெற்றியினையும், பின்வரும் செய்யுளால் உணரலாம்.

தென்னரங்கர் சீரருளுக் கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கந் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நம்குரவர் மொழிகள்உள்ளப்
பெற்றோம்
முழுதுநமக் கவைபொழுது போக்காகப் பெற்றோம்
பின்னையொன்று தனில்நெஞ்சு பேராமை பெற்றோம்
பிறர்மினுக்கம் பொருமையிலாப் பெருமையும்
பெற்றோமே.

—ஆர்த்திப் பிரபந்தம்.

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த ஸ்ரீவைஷ்ணவப் பெருஞ்சான்றோராகிய மணவாளமாமுனிகள் 'விசதவாக் சிகாமணிகள்' என்னும் விழுப்புகழ் பெற்று விளங்குபவர். அவர்தம் மாட்சிமை கடலினும் பரந்தது. அவர் அருளிச் செய்துள்ள திவ்ய சூக்திகளின் இனிமையும் தெளிவும் மிடுக்கும், சொற்சுவை பொருட்சுவை நலங்களும், நுட்ப திட்பங்களும், எதனையும் சிக்கல் அறுத்துச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறமும், பிறவும் நம்மனோர் அளவிட்டுரைப் பரியன. நவில்தொறும் நயம்பயக்கும் அவர்தம் ஞான நன்னூல்களை ஓதி யுணர்ந்து மகிழ்தலினும் மிக்க பெரும்பேறு வேறொன்றில்லை. ஆதலின் அவைதம்மை நாம் அனைவரும் ஆராய்ந்து கற்றுப் பயன் அடைய முற்படுவோமாக !

—ஆசிரியர்.

திருப்பாவைச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

அன்(று)இவ் வுலகம்
அளந்தாய்! அடிபோற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை
செற்றாய்! திறல்போற்றி!
பொன்றச் சகடம்
உதைத்தாய்! புகழ்போற்றி!
கன்று குணிலா
எறிந்தாய்! கழல்போற்றி!
குன்று குடையா
எடுத்தாய்! குணம்போற்றி!
வென்று பகைகெடுக்கும்
நின்கையில் வேல்போற்றி!
என்றென்(று)உன் சேவகமே
ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம்;
இரங்(கு)ஏலோ ரெம்பாவாய்!

அன்று : தன் விபூதியை மகாபலி அபகரிக்க நோவுபட்டிருக்கிற அன்று; உலகத்தை மகாபலியினுடைய அபிமானத்தினின்றும் மீட்ட அன்று: நாட்டுக்கெல்லாம் தன் திருவடிகளைத் தூளிதானம் பண்ணின அன்று :

இவ்வுலகம் அளந்தாய் : பிராட்டி மாருக்கும் பூத்தொடுமா போலே கூசிப்பிடிக்கும் திருவடிகளைக் கொண்டு காடும் ஓடையும் அளப்பதே என்கை. திருவடிகளின் மென்மைத்தன்மையினையும், காடும் ஓடையுமான பூமியினுடைய கடினத் தன்மையையும், இங்கு வசிப்பவர்களுடைய வன்கண்மையையும் நினைத்து, 'இவ்வுலகம்' என்கிறார்கள்.

அடிபோற்றி : திருவுலகு அளந்தருளின களைப்பு நீங்குமாறு மங்களாசாசனம் பண்ணுகிறார்கள்; 'செவ்வடி செவ்வி திருக்காப்பு' என்னும் குடிப்பிறப்பாலே 'அடி போற்றி' என்கிறார்கள்.

திருவுலகு அளந்தருளின அன்று இந்திரன் பயனை அடைந்து போனான்; மகாபலி ஔதாரியம் பெற்றுப்போனான்; அந்நிலையில் தாங்கள் அன்று உதவப்பெறாத இழவுதீரத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள் என்றுமாம்.

சென்று : புலிகிடந்த தூற்றிலே சென்று தட்டி எழுப்பிக் கொல்லுமாறு போலே, பிராட்டியைப் பிரித்த பையல் இருந்த இடத்தே செல்லுவதே; வழிப்போக்கிலே கரன் கபந்தன் விராதன் முதலிய அரக்கர்களை அழியச் செய்தபடி என்றுமாம்.

அங்கு : நின்றவிடத்திலே நின்று பூ அலர்ந்தாற்போலே இரண்டடியாக இடமாட்டாது, கொடிய காட்டிலே பரற்கற்கள் பாய, மெல்லடிகள் குருதி சோர நடப்பதே! என்று வயிறு பிடிக்கிறார்கள்.

தென்னிலங்கை : அழகியதான கோட்டையையும் அரணையும் உடைத்தாய், குளவிக்கூடு கொண்டாற்போலே, இம்சகர் அடையத் திரண்ட நிலமாயிருந்த இலங்கை மாநகரம்;

செற்றாய் : அன்பர்களின் விரோதிகள் தனக்குச் சத்ருக்கள் என்கை. அழகுக்கு இலக்காகாதாரை அம்புக்கு இலக்கு ஆக்கினபடி.

திறல்போற்றி : மதிலுக்கு மதிலிடுமா போலே மிடுக்குக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். 'இலங்கை பாழ் ஆளாகப் படை பொருதானுக்கு' என்று பரிவு கொள்

வது இவர்களின் பிறவி இயல்புஇறே. வெற்றி கொண்ட பராபிபவன சாமர்த்தியம் (செருக்கழித்துப் பிறரை அடக்கி ஆளவல்ல பேராற்றல்) எல்லாம், நினைத்துத் 'திறல் என்கிருர்கள்.

சக்ரவர்த்தித் திருமகன் தசரதனிலும் மிஞ்சும்படி இளம் பருவத்திலேயே படைக்கலப் பயிற்சிகள் பெற்று, விசுவாமித்திரர் முதலிய முனிவர்களின் பக்கல் நற்படைக்கலங்களின் மந்திரோபதேசங்களும் பெற்றுச் சமைய வளர்ந்தபின்பு செய்கிற செயல் இறே, இலங்கையை அழித்த செயல்! அதனுல் 'திறல்' என்ருர்கள் எனினுமாம்.

பொன்ற : இராவணனைப் போலே விரோதியென்று உணர்ந்து இருய்க்க வொண்ணுத அபாயம்; சூர்ப்பணகையையும் மாரீசனையும் போலே குற்றுயிராக்கி, மேல்அநர்த்தம் விளைக்க வைக்காமல், முற்ருக அழித்தபடி.

சகடம் உதைத்தாய் : எதிரிகள் உண்டென்று அறியமாட்டாத பருவம்; ஆயுதம் பிடிக்கவும் அறியாத தொட்டிற் பருவம்; இராவணன் சத்துரு என்று நேரே தோற்றினன். அங்ஙனம் அன்றிக்கே 'கள்ளச் சகடம்' என்னும்படி மறைந்து வந்தான் சகடாசுரன். இவனைக் காலாலே எற்றி மிக எளிதாக அழித்தாய் என்றபடி.

தாயின் முலைவரவு தாழ்த்துத் தொட்டிலை உதைத்த திருவடிகளுக்கு இலக்காய் முடியும்படி பண்ணின அநாயாசம். பெருமாள் கைக்கு விற்பிடித்த தழும்புபோலே, கிருஷ்ணனின் திருவடிகளுக்குச் சகடு உதைத்த தழும்பு.

புகழ் : பெற்ற தாயும் கூட உதவாத சமயத்திலே அநாயாசேன (சிரமம் இன்றியே) திருவடிகளாலே சகடாசுரனை அழித்த புகழ்.

போற்றி : இராமாவதாரத்தைக் காட்டில், கிருஷ்ணுவதாரம் மங்களாசாசனம் பண்ண வேண்டியிருக்கும். இராமாவதாரத்துக்குத் தந்தை சம்பராசுரனைக் கொன்ற தசரதன்; ஊர் திருவயோத்தி. புரோகிதர் மந்த்ர வாதிகளான வசிஷ்டாதி முனிவர்கள். பிள்ளைகள் அரக்கர் குலத்தைத் தடிந்தவர்கள்: குணவான்கள். இங்குக் கிருஷ்ணுவதாரத்திலோ, மாதாபிதாக்கள் சாது இடையர்: ஊர் இடைச்சேரி; கம்சாதிகள்; எதிரிகள்; பிருந்தாவனத்தில் முளைத்தெழும் பூண்டுகள் முழுவதும் அரக்கர்கள். தமையன் ஒருகணம் தப்பில், கிருஷ்ணனே பாம்பின் வாயிலே விழும் தீம்பன். பூதனை முதலியவர்களாலே பிறந்த அபாயங்களுக்கு அளவில்லை. ஆனபின்பு இனி மங்களாசாசனம் ஒழியக் காவலில்லை. ஆதலின் 'போற்றி' என்கிருர்கள்.

கன்று குணிலா : வத்சன் என்னும் ஓர் அசுரன் ஆகிய கன்றுக் குட்டியை எறிதடியாகக் கொண்டு, கபித்தன் என்னும் அசுரனுகிய விளாங்கனியை,

எறிந்தாய் : வீசிக் கொன்றவனே! விரோதியை இட்டு விரோதியை எறிந்து, முள்ளை முள்ளாற் களைதல் போலக் கொன்றவனே என்று, வீரமும் விவேகமும் கூறியபடி;

கழல்போற்றி : விளாங்கனியை இலக்காகக் குறித்துக், கன்றை எறிகருவியாகக் கொண்டு, எறிவதாக இச்சித்து நடந்த பொழுதைக் குஞ்சித்த திருவடிகளின் வீரக் கழலையும், அகவாயிற் சிவப்பையும் கண்டு வியந்து காப்பிடுகிருர்கள்.

குன்று குடையா எடுத்தாய் : மலையைக் குடையாக எடுத்துப் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைப் போக்கியவனே.

குணம் போற்றி : இந்திரன் பெரும்பசியாலே வந்த கோபத்தால் பசுக்களையும் இடையர்களையும் அழிக்கப் புக்குக் கையோயுந்தனையும் மழைபொழியச் செய்ய, ஆக்களையும் ஆயர்களையும் காப்பதற்காக மலையைக் குடையாக எடுத்துப் பிடித்து, உதவி புரிந்தருளிய பெருந்தகைமைக் குணத்திற்கு மங்களாசாசனம் புரிகிருர்கள்.

வென்று பகைகெடுக்கும் : பகைவர்களை வெற்றி கொள்வதுடன் அவர்களை முற்ருக அழிக்க வல்ல தாகவும் விளங்குகின்ற.

நின்கையில் வேல் : சக்கரவர்த்தியும் வில்பிடித்து, பரிகரமும் வில்பிடித்துப் பிள்ளைகளும் வில்பிடித்தாற்போலே, ஸ்ரீ நந்தகோபரும் இடையரும் பிள்ளைகளும் வேல் பிடித்தாயிற்றுத் திரிவது. 'கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோபன்' என்ற திறே. வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டியிருக்க மேலே வேலைப்பிடித்த அழகு; வேல் எதிரிகள் மேலே பட வேண்டா, பிடித்த பிடியிலே உகவாதாரை முடிக்கும். வேல் பிடித்த கைக்குத் திருப் பல்லாண்டு பாடுகிறார்கள். "வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்று ஆயுதங்களுக்கு மங்களாசாசனம் பண்ணினர் இறே தகப்பனர்!

என்றென்று : பிரயோஜனம் பெறுமள வும் சொல்லிப்பின்னர் அது மாறுவதன்றே; பயனுக்கும் பயன் வேண்டுமோ என்று இதுதானே பலமாக இருக்குமவர்கள் இறே. அடிபோற்றி-திறல் போற்றி-புகழ் போற்றி-கழல் போற்றி-குணம் போற்றி-வேல் போற்றி என்று இவர்கள் நாக்குக்கு இடும் ஆறுவகைச் சுவைத்திறம் (ஷட்ரசம்) இருந்தபடி.

உன் சேவகம் : வீரகுணத்துக்குப்போலே காணும் இவர்கள் தோற்பது; பந்துக் களாலே நலிவுபட்டுத் தளர்ந்த அபலை களுக்கு இவனுடைய விஜயமிறே பல ஹேது.

உன்சேவகமே ஏத்தி : உன்னுடைய வீர சரிதத்தினையே போற்றிப் புகழ்ந்து; "உன் னுடைய விக்ரமம் ஒன்ருெழியாமல் எல்லாம் என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்" என்னுமவர்களிறே.

பறை கொள்வான் : உன்னை அநுபவிக் கைக்காக; எங்கள் உத்தேச்யம் பெறுதற் பொருட்டு.

இன்று : இசைவு பிறந்த இன்று; நீ உறங்க நாங்கள் உறங்காத இன்று; ஊராக இசைந்த இன்று.

யாம் : பந்துக்களாலே நெடுங்காலம் நலிவுபட்ட நாங்கள்.

வந்தோம் : பெருமிடுக்கரான விருத்தை கள் எல்லாம் கிடந்து உறங்கக் குளிர் பொருத அபலைகளான நாங்கள் வந்தோம். நீ வருவதே முறையாயிருக்கக் காதல் நலி வாலே ஆற்ருமை இழுக்க நாங்கள் வந்தோம்.

யாம் வந்தோம் : நாங்களும் எங்களை அறியாமற் செய்தோம், நீயும் உன்னையறி யாமல் செய்வதுண்டிறே.

இரங்கு : முயற்சியெல்லாம் செய்தாலும் அவைபோற்றுக்கு உடலன்று, அவன் இரக்கமே காரியகரமாவது; அவனுக்கு என் வருகிறதோ என்று மங்களாசாசனம் பண்ணுகை, இவர்களுக்கு இயல்பு; இவர் களுக்கு இரங்குதல் அவனுக்கு இயல்பு.

வந்தோம் இரங்கு : இரங்காமைக்கு வேண்டுவன செய்தோமேயாயினும் இரங்க வேணும். இத்தலையில் பரபக்தியும் பேற்றுக்கு உடலன்று, அவனுடைய இரக் கமே நேரான உபாயம் என்று தெளிவைப் புலப்படுத்தியபடி.

ஒருத்தி மகனய்ப்
    பிறந்(து) ஓர் இரவில்
ஒருத்தி மகனய்
    ஒளித்து வளரத்
தருக்கிலான் ஆகித்தான்
    தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக்
    கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற
    நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்;
    பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும்
    சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து
    மகிழ்ந்(து) ஏலோ ரெம்பாவாய்!

ஒருத்தி : சர்வ லோகங்களுக்கும் நியா மகன் ஆனவனையும்கூட நியமிக்குமவள் ஆகையாலே நாட்டில் தனக்கு ஒப்பற்றி ருக்கின்ற தேவகி; தசரதன் சாதன அனுஷ் டானம் பண்ணி மாணிக்கம் போலே நாலு பிள்ளைகளைப் பெற்ருற்போலே, (வசுதேவர்

தேவகி நந்தகோபன் யசோதை) என்னும் நால்வரும் கூடித் தவசுபண்ணி ஒருவனைப் பெரு நிற்கச் செய்தே, பேறு ஒருத்தியது ஆகையாலே 'ஒருத்தி' என்கிருர்கள்; காரண வாக்கியங்கள் "ஊழி முதல்வன் ஒருவனே" என்கிற வஸ்துவை வயிற்றிலே அடக்கப் பெற்ருள் ஒருத்தியிறே.

ஒருத்தி மகனுய் : சர்வ லோகங்களுக்கும் சர்வ பூதங்களுக்கும் முந்தைத் தாய் தந்தையாய் இருப்பான் ஒருவனைத் தனக்குப் பிள்ளையாகப் பெறுகைக்கு நோன்பு நோற்கத் "தேவகி புத்திரன்" என்றே நினைக்கும்படி பிள்ளையானுன்.

பிறந்து : சிலர் மகனுக வேணும் என்று ஆசைப்பட்டால், தூணிலே தோற்றினுற் போலே ஆதல், ஆனைக்கு உதவினுற் போலே ஆதல், வந்து உதவ அமைந்திருக்க, ஈசுவரனே வந்து பிறக்க வேணும் என்று நோற்றபடியாலே, கர்ப்பவாசம் பண்ணி, உம்முடைய வயிற்றினின்றும் நாம் பிறந்தோமே என்று சோபனம் சொல்லிக்கொண்டு பிறந்தான். கர்மவசியர் படுவதெல்லாம் கிருபாபரதந்திரனுய்ப் படுவதே யென்று ஆழங்காற் படும்படி ஆய்த்துப் பிறந்தது. நித்திய சூரிகள் சேவிக்க இருக்கிறவன் சம்சாரத்திலே பிறந்த இக்குணம் இழக்க வொண்ணுது என்று ரிஷிகளைப் போலே ஆவிர்ப்பவித்தான் என்று அவத்யம் (குற்றம்) சொல்லாதே, நிறம் பெறும்படி பிறந்தான் என்பார்கள் ஆழ்வார்கள்.

மகனுய்ப் பிறந்து : மகனுகையாவது தாய் தந்தையர் கட்டளைக்கு உட்படுகையிறே. பெருமாள் பருவமடைந்த பின்பு மாதா பிதா வசன பரிபாலனம் பண்ணினுர்; கிருஷ்ணனுே பிறந்தபோதே 'சங்கு சக்கரங்களையும் இருதிருத்தோள்களையும் மறைக்கவேணும்' என்றபடியே மறைத்துக் கொண்டான்.

ஓர் இரவில் : நாய்க் குடலுக்கு நறுநெய் தொங்காதாற் போலே, சம்சாரிகள் தன்மை பிறந்த இடத்தில் ஓர் இராத்தானும் தங்க ஒட்டிற்றில்லை. சர்வேசுவரன் இங்கே வந்தால் நம்முடைய கர்மம் நம்மோடு அவனுக்குச் சாம்யத்தைக் கொடுக்கும், நாம் அங்கே சென்ருல் அவனுடைய கிருபை நமக்கு அவனேடு பரம சாம்யத்தைத் தரும். அவ்விரவோடு ஒத்த இரவு முன்பும் இல்லை; பின்பும் இல்லை.

ஒருத்தி மகனுய்: தேவகிக்குப் பிறந்தவன் யசோதைக்குப் பிள்ளையானுன். ஒருத்திக்கு அவதார ரசத்தைக் கொடுத்து, மற்ருெருத்திக்கு லீலா ரசத்தை அனுபவிப்பித்தான். கோயிலைக் கட்டித் திருப்பிரதிஷ்டை செய்தவர்களைக் காட்டிலும், அக்கோயிலுக்குத் திருப்பணி செய்து ஜீர்ணுேத்தாரணம் பண்ணினவர்கள் நிறை பெரும் புண்ணியமும் பேறும் பெற்றவராகின்ருர்! அதுபோல, பெற்றெடுத்த தேவகியைக் காட்டிலும் வளர்க்கலுற்ற யசோதை பெரும் சிறப்புடையவளாயினுள் என்பது.

பேர் சொல்லாதே 'ஒருத்தி' என்றது "அத்தத்தின் பத்தாம் நாள்" என்றவர் மகளாகையாலே, பயத்தாலே ஒளித்துச் சொல்கின்ருள். 'ஒருத்தி' என்றது 'என்ன நோன்பு நோற்ருள் கொல்லோ? இவனைப் பெற்ற வயிறுடையாள்' எனவும், 'ஞாலத்தில் புத்திரனைப் பெற்ருர் நங்கைமீர் நானே மற்று ஆருமில்லை' என்னவும் கூறும்படியான சிறப்பைப் பெற்ற ஒப்பற்றவள் என்றற்கு.

ஒளித்து வளர : பித்துக் கொண்ட பிள்ளை தாய் முன்னே நிற்கில் தாயைக் கொல்லும்; தாய் மறைந்து நிற்கில் தன்னை முடித்துக்கொள்ளும். அதற்காக முகம் தோற்ருதே மறைந்து நின்று இருபுறத்தும் நோக்கிக் காக்கும் தாயைப்போலே, கிருஷ்ணனும் ஒளித்து வளர்ந்தான். அவதரிக்கில் எதிரிடுவார்கள், பரமபதத்தில் இருக்கில் இவர்கள் அசத்துப் பொருள்களைப் போலத் தன்னை அறியாதே கிடப்பர்கள். ஆதலின், அந்தர்யாமியாய் முகந் தோற்ருதே நின்று காத்தருள்வன் இறைவன்.

தரிக்கிலானுகி : கிருஷ்ணன் வளரா நின்ருன் என்று கேட்ட பின்பு கம்சன் தரிக்க மாட்டிற்றிலன்.

தான்: பெயர் சொல்லவும் தகாத தீயவன் ஆதலாலே, கம்ஸன் என்னுதே தான் என்று பொதுப்படக் குறித்தவாறு. அடுத்துத் தனக்கு நேர இருக்கும் அழிவை அறியமாட்டாத 'தான்' எனினுமாம்.

தீங்கு நினைந்த: பரிவு கொள்ள வேண்டும் இடத்தில் பொல்லாங்கு நினைப்பதே, என்ன கொடிய இயல்பு என்று, பதறுகிருர்கள். 'ஒழுக்கம் உடையார்க்குத் தம் வாயால் வழுக்கியும் தீய சொற்கூறல் ஒல்லாது' ஆதலின், தங்கள் வாயாலே சொல்ல மாட்டாமையாலே தீங்கு என்கிருர்கள். ஈண்டுத் தீங்காவது வஞ்சனையாற் கொலை புரியக் கருதியதனை.

நினைந்த: இதற்கும் மனம் துணைபோக நேர்வதோ! 'சிந்தையினுல் இகழ்ந்த' என்கிறபடியே உக்தி மாத்திரமான அளவில் நலியாதே, நெஞ்சில் பொல்லாங்கு சோதித்தால் ஆயிற்றுக் கைவிடுவது. கைக்கொள்ளும் இடத்தில் கழுத்துக்கு மேலும் அமையும்; கைவிடும் இடத்தில் அகவாயிலும் உண்டென்று அறிந்தால் அல்லது கைவிடான்.

கருத்தைப் பிழைப்பித்து: பூதனை முதலான கொடிய அரக்கர்கள் நலிவுகளைப் பண்ணப்புக அவற்றிற்குத் தப்பித் தன்னை நமக்குத் தந்தபடி; கம்சனின் தீய கொடிய நினைவை அவன் பக்கலே ஆகும் படிப் பண்ணி என்றுமாம்.

கம்சன் வயிற்றில் நெருப்பு என்ன நின்ற: அனுதிகாலமாகச் சேர்ந்து கிடந்த பாபமனைத்தும் ஒருங்கே திரண்டு அனுபவித்து அறும்படி நின்றவன், அன்பர்களின் பயங்களை யெல்லாம் கம்சன் வயிற்றில் கொளுத்தியவன் ; தேவகியார் வயிற்றில் பிள்ளை, கம்சன் வயிற்றில் நெருப்பு! தேவகியார் வயிற்றில் பாலைச் சொரிகிறவன் காணும், கம்சன் வயிற்றில் நெருப்பைச் சொரிகின்ருன்.

நெடுமாலே: அன்பர்களின் பக்கல் அளவு கடந்த பெருங்காதல் மோகத்தை உடையவனே.

உன்னை அருத்தித்து வந்தோம்: உன் பக்கலிலே ஒன்று வேண்டி வந்தோமல்லோம், உன்னையே வேண்டி வந்தோம். 'என்னை ஆக்கிக் கொண்டு எனக்கே தன்னைத்தந்த' என்றதிறே.

வந்தோம்: எதிர்சூழல் புக்கு, ஆள் பார்த்து உழிதந்து, ஆயர் குலத்தினில் வந்து தோன்றின உன் பெருங்காதலெல்லாம் அசத்தாகும்படி, நாங்கள் உன்னைத் தேடிக் கொண்டு நாலடியிட்டு வந்தோம்.

பறைதருதியாகில்: எங்களுக்கு உத்தேசயம் செய்குதியாகில். இவர்கள் விரும்புதல் பயனில்லது, அவன் திருவுள்ளத்தாலேயே பலன் கைகூடும் என்கைக்காக 'ஆகில்'என்கிறது. இவர்கள் எல்லாம் செய்தாலும் அவன் 'அல்லேன்; என்னுமாயின், சுதந்திரனுகிய அவனை வளைப்பிட ஒண்ணுதே. இவர்களின் விருப்பம் அவனது தன்னுரிமையைப் போக்க மாட்டாதே. ஆகையாலே 'தருதியாகில்' என்கிருர்கள். எத்தனையேனும் மேலானவர்களை எத்தனையேனும் தாழ்ந்தவர்கள் 'திருவுள்ளமாகில்' செய்தருளவேணும்' என்றிறே சொல்லுவது.

திருத்தக்க செல்வமும்: ஸ்ரீய: பதிவத்தால் வந்த சம்பத்தையும். பிராட்டியை எனக்கு என்னும் பெருமை உண்டாம்போது, அவள் ஆசைப்பட்டு மேல் விழும்படி அதற்கு ஈடான சம்பத்து உண்டாக வேணுமிறே. செல்வச் சிறுமியரான இவர்களுக்குச் செல்வு தக்காற்போலே, போதமர் செல்வக் கொழுந்தான பெரிய பிராட்டியாருக்குத் தகுதியாயிருக்கும் செல்வத்தினுல் வளர்பிள்ளை யுடைய செல்வு.

சேவகமும்: அவ் ஐசுவரியத்தைக் காத்து ஊட்டவல்ல பெரு வீரமும். 'ஆற்றப் படைத்தான் மகனே' என்றதனுற் செல்வமும், 'கப்பம் தவிர்க்கும் கலியே' என்றதனுல் சேவகமும் கூறியமை காணலாம்.

யாம்பாடி: உன்பேர் சொல்லப் பெருத நாங்கள், உன்பேர் சொல்லவொட்டாதார் முன்னேஉவப்போடே பாடி. 'புள்ளின் வாய் கீண்டானைப் பாடி' என்று ஊரெல்லாம் பாடிக்கொண்டு திரிகிருர்கள் இறே.

வருத்தமும் தீர்ந்து : உன்னைப் பிரிந்து நெடுநாள் பட்ட கவலையெல்லாம் தீர்ந்து. துக்கம் நீங்குதல் மாத்திரமேயன்றே இவர் களுக்குப் பயன். பாடுகிறபோது பிரீதிக் குப் போக்குவீடு ஆகையாலே, அனுபவ காலத்தில் ஆநந்தம்போலே அநுசந்தான காலமும் ஆநந்தமாய் இறே இருப்பது. கிருஷ்ணநுசந்தானம் தித்திக்கும் இறே.

வருத்தம் தீருகைக்குச் **சேவகம்** பாடி னர்கள்; மகிழ்ச்சி பிறக்கைக்குச் **செல்வம்** பாடினர்கள். சௌர்ய வீராதிகள் கவலை தீருதற்குக்காரணம். செல்வப் பேறு இன் பத்திற்கு ஆக்கம். (25)

மாலே! மணிவண்ணா!
மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள்
வேண்டுவன கேட்டியேல்!
ஞாலத்தை எல்லாம்
நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்(து)உன்
பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள்
போய்ப்பாடு உடையனவே;
சாலப் பெரும்பறையே
பல்லாண் டிசைப்பாரே;
கோல விளக்கே !
கொடியே ! விதானமே !
ஆலின் இலையாய்!
அருள்ஏலோ ரெம்பாவாய்!

மாலே : 'நாராயணன்' 'பையத்துயின்ற பரமன்' 'தேவாதி தேவன்' என்று முன்பு எல்லையில்லாத மேன்மை உனக்கு உள்ளது என்றறிந்தோம். இப்போது, மேன்மை இடுசிவப்பு, வாத்ஸல்யமே உனக்கு இயல்பான பண்பு என்று நிலையிட் டோம் காண்.

பெருமாளுக்கு முதன்மையான குணத்தை 'சரணாகத வத்ஸலர்' என்று ஸ்ரீ இராமாயணத்துக்கு உள்ளீடாக நிலை யிட்டாள் பிராட்டி; அப்படியே கிருஷ்ண னுக்கு முதன்மையான குணமாய் மகா பாரதத்துக்கு உள்ளீடான அடியார்களி டத்துக்குக் கொண்ட அளவற்ற காதலை (ஆச்ரித வியாமோகத்தை) 'மாலே' என்கிற விளியினால் வெளியிடுகின்றார்கள் இடைப் பெண்கள்.

மணிவண்ணா : அளவிடமுடியாதவனை இருக்கச் செய்தேயும் முன்தானையிலே முடிந்து ஆளலாம்படி இருக்கை; கீழ்ச் சொன்ன வியாமோகம் வடிவிலே நிழ லிடுகை; இந்நீர்மை யன்றிக்கே காதுகன் ஆனாலும் விடவொண்ணாத வடிவழகு.

மார்கழி நீராடுவான் : மார்கழி நீர் ஆடு கைக்கு உபகரணங்கள் வேண்டி வந்தோம்.

மேலையார் செய்வனகள் : 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்பாருடைய அனுஷ்டானம், சுருதி ஸ்மிருதிகளில் சொல்லுகிறவை போல் அல்லகாண், பிரபலப் பிரமாண சித்தங்கள் என்கிறார்கள்.

விதி பிரவிருத்தமானால் பலன் கிடைக் கும் துணையும் ஐயம் நிகழுதற்கு இட முண்டு. கடைப்பிடித்துப் பலனை அடைந்து நுகர்ந்ததற்கு ஐயப்பாடு இல்லை. குற்ற மற்ற சான்றுகவுள்ள சாத்திரங்களும், வியாசன் சொன்னான், மனு சொன்னான் என்று, ஞானவான்களுடைய சொல்லையும் செயலையும் அன்றோ, சான்றாகக் கூறு கின்றது. வேதங்களுக்கும் மேற்பட வன்றோ தர்மஜ்ஞருடைய பிராமாண்யம் சொல்லப்படுகின்றது. சிஷ்டாசாரமேயிறே பிரசித்த பிரமாணம்.

வேண்டுவன கேட்டியேல் : 'கேட்டியேல்' என்கிறது அந்யபரதையாகிய கவனிப் பின்மையாலே. அந்ய பரதை என் எனில், பஞ்சலட்சம் குடியிற் பெண்கள் முன்னே நிற்கையாலே இவர்களின் முலையிலும் இடையிலும் கண்ணிலும் முகத்திலும் துவண்டு ஆனைக்குப்பு ஆடுவாரைப் போலே இருக்கையாலே, தட்டி எழுப்பிச் சொல்லுவதுபோற் சொல்லுகிறார்கள்.

இத்தால் சுவாபதேசத்தில் (உள்ளுறைப் பொருளில்) ஞானபக்தி வைராக்கியத்தைச் சொல்லுகிறது; காண்கைக்கு ஏதுவாகை யாலே 'கண்' என்று ஞானத்தைச் சொல்லு கிறது. இன்ப நுகர்ச்சிக்குத் துணையாகை யாலே 'முலை' என்று பக்தியைச் சொல்லு கிறது. கார்ச்சியத்தாலே 'இடை' என்று வைராக்கியத்தைச் சொல்லுகிறது.

ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன : உலகம் எல்லாம் வாழும்படி முழங்குதற்கு இடமுடைத்தானவை; "பூங்கொள் திரு முகத்து மடுத்து ஊதிய" சங்கின் ஒலியிறே தாரகம். நாடெல்லாம் சங்கத்தொனி கேட்டு வாழவேணும் என்கிறார்கள். இவர்கள் தாங்களும் 'வலம்புரிபோல் நின்று' அதிரவேணும் என்றிறே சொல்லிற்று.

பால் அன்ன வண்ணத்து : பாலைத் திரட்டினாற்போலே வெண்மையாய் இருக்கை, 'மணிவண்ணா' என்று இவன் நிறம் குறிப்பிட்டால் இவனோடு தொடர்புடையார் நிறமும் குறிப்பிடவேணுமோ?

உன் பாஞ்சசந்யமே போல்வன சங்கங்கள் : உன்னுடைய கையில் உள்ள சிறந்த பாஞ்சசந்யம் என்னும் பெயர் கொண்ட சங்கைப்போன்ற எண்ணில்லாத சங்குகள்.

போய்ப்பாடுடையன : பெரிடமாய் இருக்கை. இடம் உண்டாகிலிறேதொனி முழங்கியிருப்பது. 'போய்ப்பாடு' என்று புகழுடைமையாகவுமாம். ருக்மிணிப் பிராட்டி போல்வாருக்கு உதவினது அன்றிக்கே 'சங்கு அரையா உன் செல்வம்' என்று நாச்சிமாரும் கூடப் போற்றும்படியான புகழ். ஏனையவற்றை வேண்டுதற்கு முன்னே, முதன்மையானது மங்கள சப்தமாகையாலே, அதனை வேண்டுகிறார்கள்.

சாலப் பெரும்பறையே : எழுச்சிக்குச் சங்கு ஊதினால் புறப்பாட்டுக்குக் கொட்ட வேண்டாவோ. பாஞ்சசந்யத்தின் முழக்கம் பரவிய திக்கெல்லாம் ஒலிக்கவல்ல மிகவும் பெரியதொரு பறை வேணும்.

பல்லாண்டு இசைப்பாரே : திருப்பல்லாண்டு பாடிக்கொண்டு போதருவார் பலர் திரளாக வரவேணும். கொட்டிக்கொண்டு புறப்படும்போதே எதிரே நின்று சாப்பிடுவார் வேணும்.

கொடியே : கிட்டினார்க்கிறே விளக்கு பிரகாசிப்பது. எங்களைக்கண்டு தூரத்திலே வாழும்படி முன்னே பிடித்துக்கொண்டு போக ஒரு திருக்கொடி ஆடவேணும்.

விதானமே : புறப்படும்போதே பனி தலையில் விழாதபடி ஒரு மேற்கட்டி வேணும். நாங்கள் குளிக்கப்போம் போதைக்கு வேண்டும் அளவு இவை என்கிறார்கள்.

ஆலின் இலையாய் : உன்னுடைய சிறிய வயிற்றிலே பெரிய லோகங்கள் எல்லாவற்றையும் வைத்து ஒருபவனாக ஆலிலையிலே கிடந்து அகடிதங்களைச் செய்ய வல்ல உனக்கு அரியதுண்டோ என்கிறார்கள்.

'மாலே மணிவண்ணா' என்கிற இடத்தில் சௌலப்யம் சொல்லுகிறது. 'ஆலின் இலையாய்' என்கிற இடத்தில் சர்வசக்தி யோகம் சொல்லுகிறது. அது 'மாம்' என்பதன் பொருள். இது 'அஹம்' என்பதன் பொருள்.

அருள் : கொடுத்தருள்க. வேண்டாதொழியில் கொடுக்கலாவதில்லை. வேண்டில் கொடுக்கச் சக்தியில்லாமையில்லை. தரில் அரியதில்லை, தாராதொழியில் வளைப்பிட ஒண்ணாது என்கிறார்கள்.

போய்ப்பாடப் பாஞ்சசந்யம் தந்தான். பறைக்குக் குடக்கூத்தாடிய பொழுது திரு அரையிற்கட்டின பறையை அளித்தான். திருப்பல்லாண்டு பாடுகைக்குப் பெரியாழ்வாரையும், மங்கள தீபம் எடுக்கைக்கு நப்பின்னைப் பிராட்டியையும், திருக்கொடி ஆடுதற்குப் பெரிய திருவடியையும் அனுப்பி வைத்தான். மேல் கட்டியாகிய விதானத்துக்கு அத்தவாளத்தைக் கொடுத்தான். (தொடரும்)

—ஆசிரியர்.

சிவஞான சித்தியாரில் ஒரு செய்யுள்

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமதுஅருமைத் தமிழ் மொழியிலுள்ள தத்துவநூல்களுள், சிவஞான சித்தியார் மிகவும் தலைசிறந்த ஒன்றாய்த் திகழ் கின்றது. 'சிவத்துக்குமேல் இல்லை தெய்வம், சிவஞான சித்திக்குமேல் இல்லை நூல்' என் பது பழமொழி. "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும்" எனக் குருஞான சம்பந்தர் இந் நூலைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

"பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்த மாகஉண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாருநாள்எந்நாளோ?"

என வேதாந்த சித்தாந்த சமரசஞான வித்தகச் சான்றோராகிய தாயுமான சுவாமிகள் அருளிச் செய்திருப்பதும், சிவஞான சித்தியாரின் சிறப் பைச் செவ்விதினில் உணர்த்தும்.

செய்யுள் :

இத்தகைய சிறந்த பெருநலம் வாய்ந்த சிவஞான சித்தியாரின்கண் வரும் செய்யுள் ஒவ்வொன்றும், சொல்நலம் பொருளாழம் கருத்துச்சிறப்பு கவிதையினிமை என்பன வற்றை யுடையதாகும்.

"புத்திமற் காரி யத்தாற்
பூதாதி; புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றால்
அறிதலால்; அவற்றை மாயை
உய்த்திடும் அதனால்; மாயைக்கு
உணர்வொன்றும் இல்லை என்றே
வைத்திடும் அதனால் எல்லாம்
வருவிப்பான் ஒருவன் வேண்டும்."

என்பது, சிவஞான சித்தியாரின்கண் வரும் ஒரு செய்யுள். இஃது உலகத்தையெல்லாம் தோற்றுவிப்பதற்கு நிமித்த காரணமாகிய கட வுள் ஒருவன் இருத்தல் வேண்டும் என்ப தனை வலியுறுத்துகின்றது. "நாஸ்திகமத கண்டனம் செய்து உலகத்திற்கு நிமித்த காரணன் ஒருவன் உளன் ஆதலை நிறுத்த எழுந்தது இத்திருவிருத்தம்." அதன் பொருள் பின்வருமாறு :

"குடம் குயவனால் செய்யப்படும் காரியம் ஆனாற்போல, பூதம் முதலிய பிரபஞ்சமெல் லாம், ஒரு சேதனப் பொருளால் செய்யப் படும் காரியமே ஆகலானும்; உயிரானது சேதனப் பொருளாயினும் அப்பூதம் முதலிய வற்றாலாகிய தனுகரணாதிகளைப் பெற்றவழியே அறிதலானும்; அவற்றிற்கு முதற்காரணமாய்ச் செலுத்திநிற்கும் மாயைக்கு உணர்வு சிறி தும் இல்லையென்று நூல்கள் தெளிவுறக் கூறுதலானும்; பாரிசேட அளவையான், இவ் வனைத்தினும் வேறாய் மாயையினின்றும் பூதம் முதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையும் தோற்று விப்பான் ஆகிய ஒரு கடவுள் இன்றியமையாது வேண்டப்படுவன்."

என்பது சிவஞான சுவாமிகள், இச்செய்யுட்கு எழுதியுள்ள திரண்ட பொழிப்புரை.

சிவஞான சுவாமிகள் :

இங்ஙனம் பொருள் பயக்கும் தன்மையிலும் சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினை விளக்கி நிறுவும் முறையிலும் அமைந்துள்ள இச்செய்யுளுக்கே, வேறு வகைகளிலும் வேறு கொள்கைகளுக்கு இயையப் பொருள் கொள்ளலாம் என்று கூறி, அவ்வகையில் அறிஞர் அனைவரும் வியந்து நிற்கும் வண் ணம், உலகாயதம் பௌத்தம் சாங்கியம் என் னும் சமயக் கொள்கைகளை ஒட்டிச் சிவ ஞான சுவாமிகள் ஓரிடத்தில் உரைசெய்து காட்டுகின்றார். 'வல்லான் வகுத்ததே வாய்க் கால்' எனும் பழமொழிக்கு இயைய, எதனை யும் நிறுக்கவும் மறுக்கவும் வல்ல பெரும்

புலமை நலத்தால், சுவாமிகள் செய்துகாட்டி யிருக்கும் உரைத்திறம், அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தாகத் திகழ்கின்றது.

“ஒரு நூலுக்கு உரை செய்வோர் நூலாசிரியரின் கருத்துணர்ந்து அவர்கள் வழங்கும் சொற்பொருள் துணிதற்குரிய கருவிகளைக் கொண்டு, ஐயமும் மருட்கையும் நிகழாமல் செவ்விதின் உரை இயற்றுதல் வேண்டும். அவ்வாறின்றித் தத்தம் மனம் போனபடியெல்லாம் பொருள் செய்தல் கூடாது” என்பதனை வற்புறுத்தி வலியுறுத்துதற் பொருட்டே, சுவாமிகள் இங்ஙனம் சைவ சித்தாந்தத் தத்துவச் சார்பே உடைய இவ் வழகிய இனிய செய்யுளுக்கு, வெவ்வேறு வகையான சமயக் கொள்கைகளுக்கு இயையப் பல்வேறு வகையில் பொருள் செய்துகாட்டுகின்றார்! அறிவாற்றல் நலம் பெரிதும் விளங்கித் திகழ, அவர் எழுதிக் காட்டியுள்ள உரைத்திறத்தினை நாம் இங்கு, முறையே காண்போம்.

உலகாயதம் :

காணப்படுகின்ற உலகம் மட்டுமே உள்ளது. நிலம் நீர் தீ காற்று என்னும் நான்கு பூதங்களே உள்ளன. அவற்றின் சேர்க்கையால் ஓர் அறிவு நிகழும். அது பூதம் எனப்படும் இயற்கைப் பொருளின் செயலால் நிகழ்வது. கடவுள் என்றொரு பொருள் இல்லை. உடலின் வேறாக உயிர் என்பதும் இல்லை. உடம்பே கண் காது முதலிய கருவிகளைக் கொண்டு பொருள்களை அறிகின்றது. காம இன்பமே மேலான இன்பம். இதனை விளைவிக்கும் மன்மதனே கடவுள். உலகிற்கு முதற்காரணமாகக் கூறப்பெறும் மாயை என்பதொரு பொருள் உண்டு என்பதற்குச் சான்று எதுவும் இல்லை. நிலம் நீர் தீ முதலியனவே, உடல் முதலிய கருவிகளை மயக்குகின்றன. வியாழன் என்னும் பிருகஸ்பதியே, இவ்வுலகாயதக் கொள்கையை விளக்கிய ஆசிரியன். இக் கொள்கைகளுக்குச் சிறிதும் பிறழாமலும், அதன் கொள்கைகளுக்கே முற்றும் பொருந்தும்படியும், சுவாமிகள் பின் வருமாறு உரைக் குறிப்புக்கள் தருகின்றார்.

அத்தனுகரணம் பெற்றால்	—	*அறிவுடையனவாகிய கண் காது முதலிய பொறிகளின் துணையைப் பெற்ற வழியே*
அறிதலால்	—	*அறியும் திறனை அடைந்து இயங்குதலாலும் ;*
அவற்றை	—	*அவ்வுடல் கருவி முதலியவற்றை*
மதனால்	—	*மன்மத பகவானால்*
மாயை உய்த்திடும்	—	*மாயையானது காமநுகர்ச்சிகளின் மயக்கத்தினை விளைக்கும் ஆதலாலும் ;*
மாயைக்கு	—	*பிற சமயத்தவர் கூறும் மாயை என்னும் ஒரு தத்துவப் பொருள் இருத்தற்கு*
உணர்வு ஒன்றும் இல்லை	—	*உணர்தற்கு ஏதுவாகிய சான்று எதுவும் கிடையாது.*
என்றே வைத்திடும்	—	*என்றுதான் எங்களுடைய உலகாயத சமயத்துக்குரிய நூல்கள் வரையறுத்து வைத்துக் கூறியிருக்கின்றன.*
அதனால்	—	*ஆதலாலும் ;*
எல்லாம் வருவிப்பான்	—	*உடல் கருவிகள் எல்லாவற்றையும் இயக்கும் பொருட்டு*
வேண்டும்	—	*அந்தப் பூதமாகிய முதற்காரணத்தினை விரும்புவான்*
ஒருவன்	—	*ஒப்பற்ற எங்கள் வியாழ பகவான்*

உலகாயத மதச்சார்பான இவ்வுரையின் கண், பூதாதி - புத்திமத் - புருடன் - மதனால் - மாயை - உணர்வு - வைத்திடும் - வேண்டும் - ஒருவன் என்னும் சொற்களுக்கு அம் மதக் கொள்கையிற் பிறழாதவாறு உரை கூறியிருக்கும் திறம் உணரற்பாலது.

புத்த மதம் :

புத்தனே கடவுள். ஞானமே எல்லாவற்றிற்கும் காரணம். புறப்பொருளாகிய பூதம் முதலிய உலகமும், அவற்றை அறிபவனும் ஞானத்தின் வேறல்ல. அதனுடைய ஆற்றலாலேயே யாவும் நிகழ்கின்றன. வடிவமற்ற ஞானத்தின் அனுகர்ரத்தாலேயே கடம் படம் முதலிய வடிவங்கள் தோன்றுகின்றன. அங்ஙனம் தோன்றும் வடிவங்கள் வெறும் மயக்கமே. அஃது அஞ்ஞானத்தின் விளைவே யாகும். உலகிற்கு முதற் காரணமாகச் சில சமயத்தோர் கூறும் மாயை என்னும் தத்துவப் பொருளின் உண்மைக்குப் பிரமாணம் எதுவும் இல்லை. உலகப் பொருள்களின் வடிவங்கள் எல்லாம், புத்தியாகிய ஞானத்தின் செயலாலேயே தோன்றுகின்றன, என்பது புத்தரில் ஒருசாரார் கொள்கை. அதற்கேற்பவும் ஒருவாறு இச்செய்யுட்குப் பொருள் கொள்ளலாம்.

பூதாதி	—	பூதம் முதலியனவாகிய உலகமும்
புருடன்தானும்	—	புருடன் எனப்படும் அறிபவனும்
புத்தி	—	ஞானத்தினது
காரியத்தால்	—	பலத்த காரியத்தின் விளைவேயாதலால் ;
அத்து	—	அந்த ஞானத்தினது
அனுகரணம் பெற்றல்	—	அனுகரித்தலைப் பெற்றக்கால்
அறிதலால்	—	கடவடிவும் படவடிவுமாய் அறிவு நிகழ்தலால்;
அவற்றை	—	கடம் படம் முதலிய வடிவங்களை
மாயை	—	அஞ்ஞானமாகிய மயக்கம்
உய்த்திடும் அதனல்	—	வடிவம் அற்ற ஞானத்திற்கு உண்டாக்குவதனல் ;
மாயைக்கு	—	உலகத்திற்கு முதற்காரணம் எனப் பிறர் கூறும் மாயை என்னும் தத்துவம் உண்மைக்கு
உணர்வு	—	உணர்தற்கு ஏதுவாகிய சான்று
இல்லையென்றே	—	எதுவும் கிடையாது என்று வலியுறுத்தியே
வைத்திடும் அதனல்	—	எங்கள் சமய நூலாகிய பிடகாகமம் கூறிவைத்திருப்பதனல்
எல்லாம் வருவிப்பான்	—	உலகப் பொருள்களின் வடிவங்களையெல்லாம் தோற்றுவித்தற் பொருட்டு
வேண்டும்	—	அப்புத்தியாகிய ஞானத்தையே விரும்புவான்.
ஒருவன்	—	ஒப்பற்ற எங்கள் புத்தக் கடவுள்

புத்த சமயக் கொள்கைக்கு ஏற்பப் பொருள் கொண்ட இவ்வுரையில் 'புத்தி - மற்காரியம் - அத்து - அனுகரணம்' முதலிய தொடர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் பொருள், நுனித்து நோக்கி மகிழத்தக்கது.

சாங்கிய மதம் :

இனி இச்செய்யுளுக்குச் சாங்கிய மதத்திற்கு ஏற்பவும் பொருள் கொள்ளக்கூடும். நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்பவை, அறுவகைச் சமயம் (ஷட் தரிசனம்) என வழங்கப்படும். சாங்கியமதக் கொள்கையை விளக்கியவர் கபிலர் என்னும் முனிவர். உலகத்தைப் பகுத்தறிந்து 24 என்னும் சங்கியைக்குள் அடங்கியதனல் இதற்குச் சாங்கியம் என்னும் பெயர் அமைந்தது. ஆகாயத்தில் இருந்தே ஏனைய நான்கு பூதங்களும் தோன்றின. ஆகாயத்திற்குச் சலனமும் வேறுபாடும் இல்லை. அதுபோல விகாரமும் பற்றும் அற்று ஞானமாத்திரையாய் நிற்பது புருடன் என்னும் தத்துவம். புத்திதத்துவம் என்பது ஒன்றன் காரியமே. புத்தியின் காரியம் ஆகிய தனுகரணங்களை முன்னிலையில் இருத்தல் ஆகிய சம்பந்தத்தாற் பெற்றவழியே, புருடன் என்னும் தத்துவத்திற்கு அறிவு ஏற்படும். புத்திமுதலிய தத்துவங்கள் பிரகிருதிமாயையில் இருந்து தோன்றுகின்றன. பிரகிருதிமாயைக்குக் கிரியையுண்டு, ஆனல் ஞானம் இல்லை. பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குப் பிரகிருதி மாயை மூல காரணம். புத்திதத்துவத்திற்கும், மூலப் பிரகிருதிக்கும் சுதந்தர அறிவு இல்லை என்பது சாங்கிய மதக் கொள்கை. இதற்கு இயையுமாறும் இச்செய்யுளுக்குப் பொருள் கொள்ளலாம்.

புத்தி	— புத்தி தத்துவமானது
மன்	— (இடைச் சொல்)
காரியத்தால்	— ஒன்றன் காரியம் ஆதலினுல் ;
பூதாதி	— ஐம்பூதங்களுள் தோற்ற முறையில் முற்பட்டதாகிய ஆகாயம் (போல.)
புருடன்தானும்	— புருடன் என்னும் தத்துவமும், விகாரமின்றி ஒட்டற்று ஞானமாத்திரையாய் நிற்கும்; அந்தப் புருடதத்துவமும்.
அத் தனுகரணம் பெற்ருல்	— அந்தப் புத்தியின் காரியமாகிய தநுகரணங்களைச் சந்நிதி மாத்திரமாகிய சம்பந்தத்தாற் பெற்றவழியே
அறிதலால்	— அறியும் திறனை அடையும் ஆதலால்
அவற்றை	— அந்த 'மகத்' என்பன முதலாகிய தத்துவப் பிரபஞ்சங்கள் அனைத்தையும்
மாயை	— மூலப்பகுதி என்னும் பிரகிருதி மாயையானது
உய்த்திடும் அதனுல்	— தோற்றுவிக்கும் ஆதலால்
மாயைக்கு	— அந்தப் பிரதிருதி மாயைக்கு
உணர்வு ஒன்றும் இல்லை	— ஞானம் கிரியை என்னும் இரண்டினுள் ஞானம் ஆகிய ஒன்று மட்டுமே கிடையாது.
என்றே	— என்று கூறியே
வைத்திடும் அதனுல்	— சாங்கிய மதத்துக்குரிய நூல்கள் வரையறை செய்து வைத்திருப்பதனுல்
எல்லாம்	— 'மகத்' என்னுத் தத்துவம் முதலிய பிரபஞ்சம் அனைத்தையும்
வருவிப்பான்	— தோற்றுவித்தற் பொருட்டு
வேண்டும்	— பிரகிருதி மாயையையே விரும்புவான்
ஒருவன்	— ஒப்பற்ற எங்கள் கபில முனிவன்

சாங்கிய மதக் கொள்கையின்படி செய்யப் பட்ட இவ்வுரையில் புத்தி - மன் - பூதாதி புருடன் - மாயை - உணர்வு - ஒன்றும் என்னும் தொடர்களுக்குக் கூறப்பெற்ற பொருட் டிறம் கருதியுணரற்பாலது.

முடிவுரை :

ஆசிரியர் சிவஞான சுவாமிகள், இங்ஙனம் ஒரு செய்யுட்கே பல சமயக் கொள்கைகட்கு ஏற்ப, முறைப்படி பொருள் விரித்து விளக்கிக் காட்டியருளிய திறம், அவர்தம் அரிய பெரிய நுண்மாண் நுழைபுலமை நலத்திற்குச் சிறந்த இனிய எடுத்துக் காட்டாகும் ! தமது புத்தி சாமர்த்தியத்தால், இங்ஙனம் சுவாமிகள் பொருளுரைத்துக் காட்டினராயினும்,

"எந்நூற்கும் உபக்ரமம் (தொடக்கம்), உபசங்காரம் (முடிவு), அப்பியாசம் (நூலிற் பெரிதும் பயின்று வரும் தன்மை), அபூர்வதை (பிற நூல்களிற் கூறப்பெறாத சிறந்த பொருளாதல்), அருத்தவாதம் (புனைந்துரை வகையாற் சிறந்த பொருளை யுணர்த்துதல்), உபபத்தி (அறிவிற்கு மிகவும் பொருந்துதல்), முதலிய பலவகை நெறிமுறைக் கருவிகளைக் கொண்டு, அவற்றுக்கு விரோதம் வாராத படியே வியாக்கியானம் பண்ணல் வேண்டும் என்பது, சகலமத சம்மதம். ஆதலின், அது செய்தலை ஒழித்துத் தாம்தாம் கருதும் பிரயோசனங்களுக்கு இணங்க வியாக்கியானம் செய்தல் அடாது"

என்பது சிவஞான சுவாமிகள் வலியுறுத்தி அறிவுறித்தும் சிறந்த கருத்தாகும்.

இங்ஙனம் நூல்களுக்குப் பொருள் விளக்கி உரை வரையும் திறத்தினைச் செவ்விதில் தெளிவுறுத்தி யருளிய சிவஞான சுவாமிகளின் சிறப்பினை, அறிந்து அளவிட்டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ ! "ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்" எனத் திருமூலர் அருளிச் செய்ததற்கு ஏற்ப, நமது அருமைத் தமிழ் மொழியின் ஆழமும் அகலமும் அறிய விரும்புவோர் அனைவரும், சிவஞான சுவாமிகள் போன்ற செந்தமிழ்ப் பெருஞ்சான்றோர்களின் சிறந்த நூல்களைப் பயின்றினிது பயன்கொண்டு உய்ய முற்படுவார்களாக !

[தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின், 84-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. 6-5-68]

—ஆசிரியர்.

ஸ்ரீராமாயண ரஸப்ரவாகம்

(மகாவித்துவான். ஸ்ரீமத். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

ஸர்வபூதேஷு கோ ஹித :?

ஸாமாந்யமாக ப்ரியஹிதங்களின் விவரணம்:

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் "ஸர்வ பூதேஷுகோ ஹித ;" என்கிற எட்டாவது வினா இனி விவரிக்கப்படுகின்றது. உலகில் நம்மிடம் அன்புள்ளவர்களை இரண்டு வகையாகப் பார்க்கிறோம். ப்ரியமென்றால் என்ன? ஹிதமென்றால் என்ன? என்பதை முன்னம் தெரிந்துகொள்ளவேண்டும். தற்காலத்தில் இனிமையாயிருப்பது எதுவோ அது ப்ரியமெனப்படும். தற்காலத்தில் இனிதாக இல்லாமல், வெறுக்கத்தக்கதாயிருந்தாலும் பிற்காலத்தில் மிக்க நன்மை பயக்கக்கூடியதாக இருப்பது எதுவோ அது ஹிதமெனப்படும், முறையே சர்க்கரைப் பொங்கலையும் வேப்பிலை யுருண்டையையும் உதாரணமாகக் கொள்ளலாம். சர்க்கரைப் பொங்கல் உண்ணப்படும்போது மிக இனிதாகவேயுள்ளது. ஆனால், அது பிற்காலத்தில் விளைக்கும் கஷ்டம் தெரியமாட்டாது. வேப்பிலை யுருண்டை, விளக்கெண்ணெய் முதலியன உட்கொள்ளப்படும்போது ப்ரியமாக இருக்கமாட்டா. ஆயினும் அவை பிற்காலத்தில் மிக்க நன்மை பயப்பனவென்பது அநுபவ ஸித்தமாதலால், அவை ஹிதமென்கிற வகுப்பில் சேர்க்கப்படுகின்றன. தற்காலத்தில் நமக்குத் துன்பந் தருமவையான எல்லாமும் ஹித மென்று கொள்ளப்படமுடியாது; தேள்கொட்டுவது, பாம்பு கடிப்பது, கள்ளர் அடித்துப்பறிப்பது முதலானவை துன்பந் தருபவையே; ஆனால் இவற்றால் பிற்காலத்தில் நன்மையொன்றும் காணமுடியாததலால் இவை கஷ்டங்கள், ஆபத்துக்கள் என்கிற வகுப்பில் சேருமேயல்லாது ஹிதமென்னக்கூடியவையல்ல. ஆனாலும், இதைப்பற்றியும் ஆராய்ச்சி முறையில் சொல்லத்தக்க விஷயமுண்டு; அதைப் பிறகு சொல்லுவோம்.

உலகில் தாய்தந்தையரின் ப்ரியஹிதபரத்வம்:

குடும்பத்தில் தாயாருடைய செயலையும் தகப்பனாருடைய செயலையும் பார்க்கிறோம். தாயாரை ப்ரியபரையென்றும் தகப்பனாரை ஹிதபரரெனறும் பொதுவாக யாவரும் சொல்லுவர். தகப்பனார்க்கு நம்மைத் தண்டிப்பதிலேயே முழுநோக்குக் காணப்படும். தாயாரும் சிலசமயங்களில் சினம் மிகுந்து தண்டிப்பதுண்டாகினும், பெரும்பான்மையாகத் தாய்மார் மக்களின் முகங்கன்றக் காணமாட்டார்கள். ஆகவே, மக்களுக்கு ப்ரியஞ்செய்வதிலேயே தாய்மார் நோக்குடையர்; ஹிதஞ்செய்வதிலேயே தந்தையர் நோக்குடையர் என்று பெரியார் கூறுவர். அனுபவமும் இதையொட்டியே உள்ளது.

"மேலாத் தாய்தந்தையும் அவரேயினி யாவாரே" என்றும், "தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய்" என்றும், "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" என்றும், ஆழ்வாரருளிச் செய்துள்ளபடி எம்பெருமான் நமக்குத் தாயாயுமுளன் தந்தையாயுமுளன். "மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண :" என்று வடமொழி உபநிடதங்களும் ஓதுகின்றன. ஆகவே, எம்பெருமான் நமக்குத் தாயாயிருக்கும் முறையைக் கொண்டு ப்ரியங்களையும் செய்யக்கடவன்; தகப்பனாயிருக்கும் முறையைக் கொண்டு ஹிதங்களையுஞ் செய்யக்கடவன். ப்ரியங்களைச் செய்வதுபற்றி இங்கு விசாரமில்லை. அப்ரியமான ஹிதங்களைச் செய்வது பற்றியே "ஸர்வபூதேஷு கோ ஹித :?" என்னும் வினா விளைந்திருக்கின்றது.

பெருமாள் திருமொழியில் விவரித்த ஹிதபரத்வ நிரூபணம் :

பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார் எம்பெருமானது ஹிதபரத்வத்தைத்

"தருதுயரந்தடாயேல்'' என்கிற ஐந்தாவது பதிகத்தில் பல திருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டும் முகத்தால் மூதலிக்கின்றார். அவற்றுள், மூன்று நான்காம் பாசுரங்களிலுள்ள இரண்டு திருஷ்டாந்தங்களை மாத்திரம் இங்குக் கொள்வோம். "தானேக்கா தெத்துயரஞ் செய்திடினும் தார்வேந்தன் கோல்நோக்கி வாழுங் குடி போன்றிருந்தேனே'' என்றும் "வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன்போல்'' என்றும் அருளிச்செய்திருக்கின்ற இரண்டு திருஷ்டாந்தங்கள் குறிக்கொள்ளத்தக்கவை. அரசன் குற்றவாளர்களான குடிமக்களுக்குத் தண்டனைகள் புரிவது ஹிதபுத்தியினாலே; மருத்துவன் நோயாளிகளுக்குப் பலவகைக் கஷ்டங்களை இழைத்துச் சிகிச்சை செய்வதும் ஹிதபுத்தியினாலே. இப்படி பகவானும் பக்தர்களுக்குக் கஷ்டங்களையும் துயரங்களையும் தருவது ஹிதபுத்தியினாலேயே என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

இவ்விஷயத்தை வடமொழிப் புலவர்களும் "ஹரிர் துக்காநி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதிவை, சஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஹிதபுத்த்யா யதா பிஷக்'' என்னும் சுலோகத்தினால் கூறிவைத்தனர். கத்தியினால் அறுத்தல் நெருப்பினால் சூடுபோடுதல் முதலான பொறுக்கொணாத் துயரப் பணிகளை மருத்துவன் ஹிதபுத்தியினால் செய்வது போலவே பகவானும் பக்தர்களுக்கு ஹிதபுத்தியினாலேயே துக்கங்களை விளைவிக்கின்றான் என்பது மேலே குறித்த சுலோகத்தின் கருத்து.

ஹிதபரத்வ விஷயமாக தத்வத்ரய சூக்தி விவரணம் :

தத்வத்ரய மென்னும் ரஹஸ்யத்தில் ஈச்வரப்ரகரணத்தில் லோகாசாரியரருளிச் செய்யும் அற்புதமொழிகளையுங் காணீர்:—

> "சிலரைச் சுகிகளாகவும் சிலரை துக்கிகளாகவும் ஸ்ருஷ்டித்தால் ஈச்வரனுக்கு வைஷம்ய நைர்க்குண்யங்கள் வாராதோ வென்னில்; கர்மமடியாகச் செய்கையாலும், மண்தின்ற ப்ரஜையை நாக்கிலே குறியிட்டு அஞ்சப்பண்ணும் மாதாவைப்போலே ஹிதபரனாய்ச் செய்கையாலும் வாராது"

என்று. இந்த ஸ்ரீ ஸூக்திகளின் கருத்தாவது—பகவான் சேதநர்களுக்குக் கரணகளேபரங்களைக் கொடுக்கையாகிற ஸ்ருஷ்டியைச் செய்யும்போது எல்லா ஆத்மாக்களையும் ஒரே விதமாகப் படைக்காமல், சிலரை இன்பம்மிக்கவர்களாகவும், சிலரைத் துன்பம்மிக்கவர்களாகவும் படைக்கிறானே, இதனால் அவ்வீச்வரன் குற்றவாளனாகானோ வென்னில்; ஆகான்; நோயை விளைக்கும்படியான மண்ணை விரும்பித்தின்ற தன் குழந்தையை இனி மண்தின்னாதபடி நாக்கிலே சூடிட்டு மண் தின்ன அஞ்சும்படி பண்ணும் ஹிதபரையான மாதாவைப்போலே இவர்கள் மேன்மேலும் தீய கருமங்களைச் செய்ய அஞ்சும்படி ஹிதபரனாய்ச் செய்கையாலே என்றபடி.

இராமபிரான் பக்கலில் ஹிதபரத்வ நிரூபணம் :

ஆக, இவ்வளவாலும், எம்பெருமான் ஹிதபரனாயிருக்கும்படியும் அது அடியாக அவன் செய்யுமதும் நிரூபிக்கப்பட்டது. இனி இதனை இராமபிரானிடத்திலே காட்டி அநுபவிப்போம். இராமனைக் கருணையே வடிவெடுத்த காகுத்தனென்று கொண்டாடுகிறார்கள். பிறர் நோவு கண்டு ஐயோவென்று இரங்குமவனான இராமபிரானும் பிறர்க்குக் கஷ்டங்களை விளைத்தமை காண்கிறோம். அரக்கர் குலங்களுக்குத் துக்கங்களை விளைத்தானென்பது பற்றி இங்குச் சொல்லவில்லை; அந்தரங்க பக்தர்களாகக் கொள்ளப்பட்டவர்களுக்குக்கூட கஷ்டங்களை விளைத்ததாகக் காண்கிறோம்; அது கூடுமாவென்று பலர்க்கும் சங்கை தோன்றுவதுண்டு; இதற்கு ஓரிடமே யெடுத்துக் காட்டுகிறோம்.

சுக்ரீவன்பால் காட்டிய நிக்ரஹம் :

மழைக்காலம் கழிந்தவளவிலும், முன்பு சொன்னபடி சுக்ரீவன் சேனைகளுடன் வந்திலனென்று திருவுள்ளத்தில் மிக்க சீற்றங்கொண்ட இராமபிரான் இளையோனையழைத்து, சுக்ரீவனிடம் சொல்லுமாறு கூறினவார்த்தைகள் கொடுமையே வடிவெடுத்தவையா யிருக்கின்றன. இங்குக் கம்பராமாயணச் செய்யுள்கள் சிலவற்றை யெடுத்துக்காட்டுவோம்.

> "பெறலருந் திருப்பெற் றுதவிப்பெருந்
> திறன் நினைந்திலன் சீர்மையின் தீர்ந்தனன்
> அறம் மறந்தனன் அன்புகிடக்க நம்
> மறனறிந்திலன் வாழ்வின் மயங்கினான்"

(இதன் கருத்து.) பெறுதற்கரிய அரசாட்சிச் செல்வத்தைச் சுக்கிரீவன் நம்மாற் பெற்றிருந்தும், தனக்கு நாம் செய்த

அவ்வுபகாரத்தின் பெருமையைச் சிறிதும் கருதிற்றிலன். சிறந்த வொழுக்கத்தி னின்று நீங்கிவிட்ட தன்மையை நன்கு காட்டிவிட்டான். நாம் அவன்பக்கல் செய்த அன்பை அவன் மறந்து கிடக்கட்டும்; நமது பலபராக்கிரமங்களையுமன்றே நெஞ்சிற்கொள்ளாது மறந்துவிட்டான்; அரசாட்சியேற்று இன்புற்று வாழும் வாழ்க்கையில் மயங்கிப்போயினன்.

"நன்றி கொன்று அருநட்பினை நாரறுத்து
ஒன்று மெய்ம்மைசிதைத்து உரைபொய்த்
துளான்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்
சென்று மற்றவன்சிந்தையைத் தேர்குவாய்"

இவ்வாறு தான் பெற்றவுதவிக்குக் கைம் மாறு செய்யாமல் அதனை மறந்திட்டு அருமையான நட்பையுமொழித்து யாவர்க்கும் ஏற்றதான சத்தியத்தையுமழித்துப் பேச்சுத் தவறியவனைக் கொன்றொழிப்ப தானது பழிபாவமற்ற செயலேயாகும்; ஆதலால் அச்சுக்ரீவனைத் தண்டிக்க வேண்டி நீ சென்று அவனது எண்ணத்தை யறிந்து வருக.

"வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்து
இம்பர் நல்லறஞ் செய்ய எடுத்தலில்
கொம்பு முண்டுஅருங் கூற்றமுமுண்டு, உங்க
ளம்பு முண்டென்று சொல்லு நம் மாணையே"

துஷ்ட நிக்கிரகஞ் செய்து இவ்வுலகில் தருமத்தை நிலைநாட்டுதற்பொருட்டு நாம் கையிலேந்திய வில் வாலியோடு தொலைந்திலது; இன்னமும் உள்ளது; யமதரும ராசனுமுளன்; வானரவீரர்களாகிய உங்களையும் கொல்லவல்ல அம்பும் நம்மிடமுண்டு; என்றிங்ஙனம் நமது கட்டளையாகச் சுக்கிரீவனிடம் சொல்லுக.

"ஊரும் ஆளும் அரசும் நுஞ்சுற்றமும்
நீரு மாளுதி ரென்பது நேர்ந்தநாள்
வாரும் வாரலிரா மெனின் வானரப்
பேரும் மாளுமெனும் பொருள் பேசுவாய்"

கிஷ்கிந்தாபுரியும் குடிகளும் அரசாட்சியும் உங்கள் உறவினமுமாக இவ்வுலகத்தில் நெடுநாள் விளங்க விருப்பமுண்டாகில் உடனே புறப்பட்டு நம்பக்கல் வருக; அங்ஙனம் வராமற்போனல் வானரமென்கிற பெயரும் உலகத்தில் இல்லாதொழியுமென்கிற வுண்மையை நீ சென்று தெரிவிப்பாயாக என்று சொல்லியனுப்புகிறார் பெருமாள்.

வான்மீகி ராமாயணத்திலும், கிஷ்கிந்தா காண்டத்தில் முப்பதாவது ஸர்க்கத்தில் இவ்விஷயம் காணலாம்; இராமபிரான் அங்குக் கூறும் வார்த்தைகளாவன:— "லக்ஷ்மண! சுக்ரீவன் நம்மால் விரோதி தொலையப்பெற்றுத் தன்னுடைய வாக்குறுதியை அடியோடு மறந்து மன்மதவிகாரங்களினால் காலங்கழிக்கின்றனன்; இப்போது மழைக்காலம் கழிந்துவிட்டபடியால் அரசர்கள் படையெடுக்குஞ் சமயமன்றோ விது; சுக்கிரீவன் செய்ந்நன்றி மறந்த காதகனைகத் தோன்றுகின்றனனே; நீ உடனே சுக்கிரீவனிடஞ் சென்று 'நன்றியறிவுகெட்ட பாபிஷ்டன் புருஷர்களிற் கடையனுவன்; அவன் மாண்டபின்புகூட அவனது சரீரத்தை மாமிசந் தின்னும் ஜந்துக்களும் தின்னமாட்டா என்றுரைப்பாயாக. லக்ஷ்மண! மராமரங்களை யெய்து வாலியைக் கொன்றதனுல் என் பராக்கிரமத்தைச் சுக்ரீவன் நன்கறிந்திருந்தும் அந்தோ! சிறிதும் அஞ்சாதிருக்கின்றனன்; வாலி சென்ற வழி அவனுக்கும் திறந்திருக்கின்ற தென்பதை அவனிடம் கூறுவாயாக. அவனைச் சுற்றத்தோடும் யமபுரமனுப்ப நான் சித்தமாயிருத்தலைத் தெரிவிப்பாயாக'' என்பனவாம்.

சுக்ரீவ நிக்ரகத்தில் ஆக்ஷேப
சமாதானங்கள் :

இங்ஙனம் கூறுதலும் த்ரோஹபுத்தி கொள்ளுதலும் தண்ணளியே வடிவெடுத்த இராமபிரானுக்குத் தகுமோ? அக்கினி சாக்ஷியாகக் கொள்ளப்பட்ட உயிர் நண்பனன்றோ சுக்கிரீவன். அவனிடத்து இவ்வளவு த்ரோஹ சிந்தனை கொண்டது என்னே?

அன்றியும், அயோத்தியாகாண்டம் முதல் ஸர்க்கத்தில் (11),

"கதஞ்சிதுபகாரேண க்ருதேனைகேந துஷ்யதி
ந ஸ்மரத்யபகாராணும் சதமபி ஆத்மவத்தயா."

என்று இராமபிரானது குணம் ஆச்சரியமாகக் குலாவப்பட்டுள்ளது. பிறர் நூற்றுக் கணக்கான தீங்குகள் செய்தாலும் அவற்றை நெஞ்சினுலும், நினைப்பதில்லையென்றும், புத்திபூர்வமாகவோ, அபுத்திபூர்வமாகவோ ஒருவர் மிசச்சிறிய வுதவி ஒன்று செய்தாலும் அது கொண்டு மகிழ்ந்திடுவானென்றும் புகழப்பட்டுள்ள இராமன் உயிர் நண்பனிடத்தில் இப்படி த்ரோஹ சிந்தனை கொண்டானென்றால்

இது பொருத்தமாக இல்லையே! என்கிற சங்கை தோன்றும். இதற்குப் பரிஹார முணர்த்தும் வகையாகவே "ஸர்வபூதே ஷுகோ ஹித:?" என்னுமிவ்வினு தோன்றி யுள்ளது. பகவான் ப்ரியஞ்செய்வதிற் போலவே ஹிதஞ்செய்வதிலும் ஊற்றமுற் றவனுதலால் கீழே விவரித்த வரலாறு போன்ற வரலாறுகள் ஹிதவகுப்பில் சேர்க்கத் தக்கவையே யாகும்.

இராவணவதம் ஆனபிறகு பிராட்டி அக்நிப்ரவேசம் செய்வதற்கு உறுப்பாகப் பெருமாள் சொன்ன கடுஞ்சொற்களும் இங்ஙனமே ஹித வகுப்பில் சேர்க்கத் தக்கவையே.

நாரத முனிவரை நோக்கிக் கேட்கும் வான்மீகி முனிவர் "கோ ஹித:?" என்று இவ்வளவேகேளாமல் "ஸர்வபூதேஷு கோஹித:" என்று கேட்டிருத்தலால் ஸர்வேச்வரனுடைய தன்மையை நெஞ்சிற் கொண்டே கேட்டதாக நன்கு விளங்கு கின்றது. ஸர்வபூதங்களிடத்தும் ஹிதபரனு யிருக்குந் தன்மை பகவானுக்கே யன்றோ உள்ளது. நம்போல்வார்க்கு எவ்வகைக் கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவை பகவத் ஸங்கல்பத்தினுலேயே நேருகின்றனவென் றும், காருணிகனுன பகவானுல் அவை ஹிதபுத்தியடியாகவே விளைக்கப்படுகின் றன வென்றும், உண்மையுணரும் பெரி யோர் உணர்வர். இதுபற்றியே "ஹிரிர் துக்காநி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதி வை" என்று சாஸ்த்ரஞ் சொல்லி வைத்தது.

(தொடரும்)



நமது அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன், M.A., B.L., அவர்கள் ஸ்ரீ கொளஞ்சியப்பர் கோயிலுக்கு வருகை தந்து சிறப்பித்தல். 31—3—68

மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

சேடன் தவம்: நாகங்களுள் மிகவும் புகழ் பெற்ற ஆதிசேடன் காற்றைப் புசித்துக் கொண்டு கடுந்தவம் புரிந்தான். திருத்தல யாத்திரையும், தீர்த்த யாத்திரையும் புரிந்தான். பிரமதேவர் சேடனுக்கு முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். "தேவரே! என் தம்பியரின் நடை எனக்குப் பிடிக்கவில்லை. என் உள்ளம் அறநெறியில் நிற்க வேண்டும்" என்று கேட்டார். பிரமதேவர் 'ஆதிசேடனே! நீ பூமியைத் தாங்கி உலகிற்கு உதவிசெய்; உனக்கு நன்மையுண்டாகும்' என்று கூறிக் கருடனுக்கும் ஆதிசேடனுக்கும் நட்பையுண்டாக்கி வைத்தார். ஆதிசேடன் சென்றபின் நாகங்கட்கு அரசனாக வாசுகி மகுடம் பூண்டான்.

ஆலோசனை: வாசுகியும் மற்ற நாகர்களுடன் இருந்து, தாய் சாபம் மிகவும் கடுமையானது, ஜனமேஜயனுடைய சர்ப்ப யாகத்தில் நமக்கு அழிவு வராமல் இருக்க நாம் என்ன செய்வோம்?" என்று சிந்தித்தார்கள்.

ஒருவன் "நாம் அந்தணவடிவுடன் சென்று யாகம் நடவாமல் இருக்கும்படி யாசிப்போம்" என்றான்.

ஒருவன் "நாம் மந்திரிகளாக இருந்து சர்ப்பயாகம் புரிவது நல்லதன்று என்று ஆலோசனை கூறி நிறுத்தலாம்" என்றான்.

மற்றொருவன் "சர்ப்ப யாக புரோகிதனைக் கடித்துக் கொல்வோம்" என்றான்.

ஒருவன், "மழையாகிப் பொழிந்து யாகத்தைத் தடுப்போம்" என்றான்.

ஒருவன், "ஜனமேஜயன் நீராடும்போது அவனைக் கொணர்ந்து நாகலோகத்தில் கட்டிவைப்போம்" என்றான்.

இந்த ஆலோசனைகளை யெல்லாம் நாக ராஜனான வாசுகி ஏற்றுக்கொள்ளவில்லை. இவைகள் நல்ல ஆலோசனைகள் அன்று என்று மறுத்தான்.

ஏலாபத்ரன் என்ற நாகன் கூறுவான் :-

"ஜனமேஜயன் சிறந்தவன். அம் மன்னனை நாம் அழிக்கவோ மோசம் செய்யவோ இயலாது. நம்தாய் சாபம் கொடுத்தபோது நான் நடுங்கினேன். அப்போது தேவர்கள் சர்ப்பங்கள் கொடியவை என்று கூறிப் பிரமதேவரைப் பார்த்து "கொடிய அன்னையான கத்துரு, தான் பெற்ற பிள்ளைகளைக் கருணையின்றிச் சபித்தாள். நீருந் தடுக்காமல் இருந்தீரே; காரணம் யாது?" என்று கேட்டார்கள். "கொடிய நஞ்சுள்ள அரவங்களைச் சபித்தது உலக மக்களின் நன்மையைக் கருதியேயாகும்; இவைகள் அழிவது நியாயமேயாகும். ஆனால் சர்ப்ப யாகத்தில் அறநெறியில் நின்ற சில நாகங்கள் மட்டும் பிழைக்கும். யாயாவரர் குலத்தில் பெருந்தவ முனிவர் ஜரத்காரு என்பவர் தோன்றுவார். அவருக்கு வாசுகி தன் தங்கையைத் தருவான். தன் பெயருள்ள நாக கன்னிகையிடம் அம்முனிவர் ஆஸ்தீகன் என்னும் புதல்வனை யுண்டாக்குவார். வேத வேதாங்கங்களில் கரை கண்ட அந்த ஆஸ்தீகரால் சர்ப்பயாகம் தடுக்கப்படும்" என்று கூறினார். இவற்றை நான் கேட்டேன். ஆதலால், ஜரத்காரு முனிவர் கேட்கும்போது தங்கையைக் கொடு, பிட்சையைப் போலத்

தரக்கடவாய். இதுதான் நம் அச்சந்தீர்க்கும் உபாயம்'' என்றான்.

நாக இனங்கள் ஏலாபத்ரன் சொற்களைக் கேட்டுச் 'சரி சரி' என்று கொண்டாடினார்கள். அது முதல் ஜரத்காரு என்ற தங்கையை மகிழ்ச்சியுடன் காப்பாற்றி வந்தார்கள். ஜரத்காரு முனிவர் எங்கே எப்போது கன்னிகையை யாசிக்கின்றார் என்பதை நாலா பக்கங்களிலும் இருந்து கவனிக்குமாறு ஏற்பாடு செய்தான் வாசுகி.

ஜரத்காரு சரித்திரம்:

யாயாவரர் என்று பேருள்ள முனிவர் குலத்தில் பிறந்தவர் ஜரத்காரு. யாயாவரர் என்றால் இன்றிருந்த ஊரில் நாளையிரார் என்று பொருள். கெடுவதை "ஜரை" என்று சொல்லுவார்கள். துன்பத்தைச் செய்வதற்குக் 'காரு' என்று பேர். அவருக்கு வைராக்கியத்தினால் சரீரம் காருவாக இருந்தது. சிறந்த ஞானமுள்ள அவர், தவத்தால் சரீரத்தைக் குறைத்தார். இந்தக் காரணத்தினால் ஜரத்காரு என்று பேர் பெற்றார். வாசுகியின் தங்கையான நாககன்னியும் தவத்தினாலேயே ஜரத்காரு என்று பெயர் பெற்றாள்.

ஜரத்காரு முனிவர் உலகமுழுவதும் உலாவினார். பொழுதுபோன இடத்தில் தங்குவார். காற்றையே உணவாகக் கொண்டு தீர்த்த யாத்திரை செய்து கொண்டு திரிந்தார்.

ஒரு பள்ளத்தில் விலாமிச்சம் புல்லைப் பிடித்துக்கொண்டு தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த பிதிர்களைக் கண்டார். அவர்கள் பிடித்துக்கொண்டிருந்த விலாமிச்சம்வேரை ஒரு எலி சிறிது சிறிதாகக் கடித்திருப்பதையுங் கண்டார்.

ஜரத்காரு என்பவர் அவர்களுக்கருகிற் சென்று, 'வளையில் இருக்கின்ற எலியினால் வேர் அரிக்கப்பட்டு வலிமையற்ற விலாமிச்சம் வைக்கோலைப்பற்றித் தொங்குகின்றீர்களே, நீங்கள் யார்? இந்த விலாமிச்சைக்கு ஒற்றை வேர்தான் மிச்சமாக நிற்கின்றது. அதையும் இந்த எலி கூர்மையான பற்களால் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்திழுக்கின்றது. இந்த வேரில் சிறிது பாகமே மிச்சம் இருப்பதனால் இதுவும் சீக்கிரத்தில் அறுந்துபோய்விடும், அப்போது நீங்கள் இந்தப் பள்ளத்தில் தலை கீழாய் விழுவீர்கள். இங்குத் தலைகீழாகத் தொங்கித் துன்புறுகின்ற உங்களைக் கண்டு நான் வருந்துகின்றேன். உங்களுக்கு நான் உதவி செய்ய விரும்புகின்றேன். என் தவத்திலிருந்து நான்கிலொரு பங்கையாவது மூன்றிலொரு பங்கையாவது தருவேன். பாதியையேனும் அல்லது முழுத் தவத்தையேனும் தருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். நீங்கள் கரையேறுங்கள்'' என்று இரக்கத்துடன் கேட்டார்.

பிதிர்கள் "அப்பா! நீ பிரம்மச்சாரி. உன்னால் எங்களைக் காப்பாற்ற முடியாது. உன் தவத்தினாலும் எங்களைக் கரையேற்ற முடியாது. எங்களுக்கும் தவத்தின் வலிமையிருக்கின்றது. அப்பா! கருணையுடன் கேட்கின்ற நீ யார்? நாங்கள் யாயாவரர்கள் என்னும் முனிவர்கள். எங்கள் குலத்தில் ஜரத்காரு என்பவன் ஒருவன் இருக்கிறான். அவன் நன்கு வேதங்களை ஓதினவன்; உறுதியான நியமங்களையுடையவன் ; நல்ல தவமுள்ளவன்: புலன்களை வென்றவன். அவன் திருமணஞ் செய்துகொண்டு சந்ததியைப் பெறவில்லை. அதனால் எங்களுக்கு இக்கதியுண்டாயிற்று. நாங்கள் புண்ணிய உலகிலிருந்து நழுவி நரகில் விழுகின்றோம். இந்த ஒற்றை விலாமிச்சம் புல்தான் அவன். இதையும் காலமாகிய எலி கடிக்கின்றது. தவத்தாலும் வேள்வியாலும் எங்களைக் கரையேற்ற முடியாது. ஜரத்காரு என்பவனை நீ எங்காவது காண நேர்ந்தால் எங்கள் துன்பத்தைச் சொல். அவன் சந்ததியையுண்டாக்கினால் எங்களுக்கு நற்கதி கிடைக்கும். தவமும் வேள்வியும் ஒரு சற்புத்திரருக்குச் சமானமாகா. ஜரத்காரு என்ற மூடன் தவத்தைப் பெரிதாக எண்ணிக் குலத்தை வளர்க்கவில்லை. எங்கள் மீது கருணை கொண்டு அவனிடம் கூறு, என்றார்கள்.

இதைக்கேட்ட ஜரத்காருவின் கண்களில் நீர் பெருகியது. நீங்கள் என் முன்னோர்கள். நான்தான் ஜரத்காரு. நான் ஆசையை அறவே விட்டவன். ஆயினும்

உங்கள் நன்மைக்காக நான் ஒருத்தியை மணந்து சந்ததியைத்தருகின்றேன். என் பெயருள்ள ஒருத்தியைப் பிட்சையைப் போல் தருவதானுல் மணஞ்செய்துகொள் வேன். உங்களைக் கரையேற்றுவேன் என்று கூறினர்.

அவர் உலகமெலாம் சுற்றினர். வயது முதிர்ந்த அவருக்கு அவர் விரும்பியபடி கன்னிகை கிடைக்கவில்லை. தளர்ச்சியுற் ருர். காட்டிடை நின்று உரக்கக் கூவினர். 'கன்னிப்பிச்சை கேட்கின்றேன்' என்று மூன்று முறை கதறினர். நாகங்கள் சென்று வாசுகிக்குத் தெரிவித்தன, வாசுகி தன் தங்கையைக் கொணர்ந்து பிட்சை யைப்போலத் தந்தான்.

இவள் பெயர் என்ன? என்று கேட்டார். 'முனிவரே இவள் பேர் ஜரத்காரு'' என் ருன் வாசுகி. 'இவளை நான் காப்பாற்ற மாட்டேன். என் மனத்துக்கு மாருக நடப் பாளாயின் இவளை விட்டுவிடுவேன்'' என் ருர் முனிவர். ''நான் இவளைக் காப்பாற் றுவேன். நீர் இவளை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்'' என்று வாசுகி கூறினன். ஜரத்காரு முனிவர் நாகலோகம் போய் விதிப்படி அவளை மணஞ் செய்து கொண் டார்.

ஜரத்காரு முனிவர் முதல் நாள் அவ ளைச் சந்தித்தபோது 'பெண்மணி! என் விருப்பத்துக்கு மாருக நீ நடப்பாயானுல் நான் உன்னை விடுவேன்'' என்ருர். அவள் அதற்கு உடன்பட்டு இங்கிதமாக சுவேத காகீயம் போல் ஒழுகினுள். *

அப்பெண்மணி கருவுற்ருள். ஒரு நாள் அவர் களைப்புற்று மனைவியின் மடியில் தலைவைத்துத் தூங்கினர். அப்போது கதிரவன் மேற்கடலில் விழுகின்ருன். சந்தியா காலத்தில் தூங்கினுல் கணவனு ருக்குத் தருமலோபம் உண்டாகும். எழுப் பினுல் கோபம் உண்டாகும். அதனுல் என்னை விட்டுப் பிரிவார். நான் துன்புறு வேன். என் துன்பத்தைக் காட்டிலும் அற நெறிவழுவிக் கணவனுர் துன்புறக்கூடாது என்று கருதினுள் அந்த உத்தமி, கண வனை எழுப்பினுள்.

அவர்எழுந்து உதடு துடிக்க 'அடியே! என்னை நித்திரை விட்டு எழுப்பி, என்னை அவமதித்தாய். நான் உன்னை விட்டுப் பிரிவேன்'' என்ருர்.

''காதலரே! வணக்கம். நான் ஒரு சிறி தும் அவமதிக்கவில்லை. இதோ பாரும். சந்தியாகாலம், இந்தநேரத்தில் துயில்வது கூடாது. தங்கள் தருமங் கெடும் என்று கருதினேன். மன்னியுங்கள்'' என்ருள்.

''பெண்ணே! என் வாக்கு பொய்புக லாது. இனி உன்னுடன் வாழ மாட்டேன்'' என்ருர்.

அம்மாதரசி கண்ணீரால் உடம்பு நனைந்து தழுதழுத்த குரலில் ''சுவாமிஎன் தமையனுர் என்னைத் தங்கட்குத் தந்த காரணம், எனக்குப் பிறக்கும் மைந்தனுல் அவர்கட்கு நன்மையுண்டாகும் என்பதே. எனக்கு ஒரு மைந்தனைத் தராமல் நீர் போவது முறையன்று'' என்ருள்.

''மாதரசியே! உன் மணிவயிறு வாய்த் துள்ளது. அனற்கடவுளுக்கு நிகரான ஒரு வன் உன் திருவுதரத்தில் வந்திருக்கின் ருன். அவன் மாதுலர்கட்கு உதவுவான். வருந்தாதே'' என்று கூறிவிட்டுத் தவ நெறியிற் சென்ருர்.

அவளுக்கு உரிய காலத்தில் காலைக் கதிர் போன்ற சிறந்த மகன் தோன்றினன். கருவில் இருக்கின்ற போதே 'அஸ்தி' (இருக்கின்ருன்) என்று பிதா சொன்னபடி யால் ஆஸ்திகர் என்று பேரிட்டார்கள். அவர் வளர்ந்து சகல கலைகளையும் கற்று ஒப்பற்ற உயர்குணச் செம்மலாக விளங் கினர்.

பரிட்சித்து :

உதங்க முனிவர் சொல்ல இந்த வரலாறு களையெல்லாம் ஜனமேஜயர் கேட்டார். கேட்டபின் ''முனிவரரே! இவையெல்லாம் சரியே. என்மாட்டுப் பிழை செய்யாத நாகங்களை நான் சர்ப்பயாகம் புரிந்து கொல்வது அறமா? அதுபற்றித்தான் சிறிது சிந்திக்கின்றேன்'' என்ருர்.

உதங்கமுனிவர் ''ஜனமேஜயரே! நன்று கூறினீர். உம்மைப் பெற்ற அருமைப்

பிதா பரிட்சித்து வேந்தனைத் தட்சகன் கொன்றதை நீ யறியாயோ?'' என்றார். ஜனமேஜயர் "தவசீலரே! என் தந்தையின் சரிதையைக் கூறும்" என்று கேட்டார். உதங்கர் கூறுகின்றார்.

குருமரபில் அபிமன்யுவின் மகனைக் பரிட்சித்து வேந்தர் பிறந்தார். கௌரவர்கள் யாவரும் ''பரிக்ஷயம்'' எனப்பட்ட அழிவையடைந்த பின் உத்தரையிடம் பிறந்தபடியால் பரிட்சித்து என்ற பேர் பெற்றார். அவர் அறநெறி வழுவாதவர். நற்குணசீலர்; அறத்தின் உருவம் அவர்; அவரைப் பகைப்பவர் ஒருவருமில்லை; அவரும் யாரையும் பகைப்பதில்லை. பிரம தேவரைப் போல் அவர் எல்லாவுயிர்களிடத்திலும் வேறுபாடின்றி இருந்தார். குடிகள் மங்களமாகத் தத்தம் செயல்களைச் செவ்வையாகச் செய்து இனிது வாழ்ந்தார்கள். அவர் கணவனையிழந்த பெண்களையும், அநாதைகளையும், அங்கம் பழுதானவர்களையும் காப்பாற்றினார். இரண்டாவது சந்திரனைப்போல் எல்லோருக்கும் காட்சிக்கு இனியராக விளங்கினார். அவருடைய ஆட்சியில் மக்கள் திருப்தியாக வாழ்ந்தார்கள். செல்வமும் உண்மையும் வெல்லமுடியாத ஆண்மையும் படைத்த அவர் கிருபாச்சாரியாரிடம் வில் வித்தை பயின்றார். கண்ணனிடத்தில் பக்தியும் உயிர்க்கருணையும் உடையவராக இருந்தார். அவர் அரச தருமங்களிலும் தன வளர்ச்சியிலும் வல்லவர். எச்சரிக்கையுள்ளவர். புலன்களை வென்றவர். காமாதியறுபகையுங் கடிந்தவர். அறுபது ஆண்டுகள் அவர் அரசு புரிந்தார்.

வேட்டை: அவர் தன் பாட்டனாரின் தந்தையாகிய பாண்டுவைப்போல் வேட்டையாடுவதில் அதிக விருப்பத்தைச் செலுத்தினார். ஒரு நாள் வேட்டைக்குச் சென்றார். மான்கள், புலிகள், காட்டுப் பன்றிகள், சிங்கங்கள், யானைகள், முதலிய விலங்குகளைக் கொன்று வீழ்த்தினார். ஒரு மானை அடித்தார். அடிபட்ட மான் ஓடி மறைந்தது. அதனைத் தேடிக்கொண்டு திரிந்தார். பசியும் தாகமும் அடைந்து களைத்துப் போனார்.

சமீகர்: ஊட்டின கன்றுகளின் வாயிலிருந்து வெளிப்படும் பால் நுரையைப் புசித்துக்கொண்டு, மாட்டுக்கொட்டிலில் மௌனவிரதத்துடன் அமர்ந்திருந்த சமீக முனிவரைப் பார்த்தார். "இந்த வழியாக ஒரு மான் சென்றதா? நீர் கண்டீரா?'' என்று கேட்டார். அவரோ மௌன விரதம் மேற்கொண்டவர். விடை ஒன்றும் விளம்பவில்லை. வேந்தர் வெகுண்டார். அங்கு ஒரு புறம் மாண்டுகிடந்த பாம்பை வில்லின் நுனியால் எடுத்து அவருடைய கழுத்தில் மாட்டினார். அவர் அதற்கும் சும்மா இருந்தார். விதியினால் தூண்டப்பட்ட வேந்தர் நகரஞ் சென்றார். பொறுமை மிகுந்த அவர் மன்னனைச் சபிக்கவில்லை.

சிருங்கி: அம்முனிவர் பெருமானுக்குக் கடுந்தவமும் சினமும் பொருந்திய சிருங்கி என்ற ஒரு புதல்வர் உண்டு. இளம் பிள்ளையான அவர் ஒவ்வொரு காலத்திலும் பிரமதேவரை வணங்குவார். அன்று பிரம தேவரை வழிபட்டுத் திரும்பினார். முனிவர் புதல்வர்களுடன் வழியில் விளையாடினார். அவருடைய நண்பன் கிருசன் என்பவன் "அடேய் சிருங்கியே! உனக்கென்ன பெருமிதம்? உன்பிதா பிணந்தூக்கி'' என்றான். சிருங்கி ''ஏய்! ஏன் என்பிதா பிணந்தூக்குகின்றார்?'' என்று கேட்டார். வேட்டையாடி வந்த பரிட்சித்து மன்னர் மானைப் பற்றிக் கேட்டார். உன்பிதா விடைகூறாமல் இருந்தார். அதனால் அவர் சினந்து செத்த பாம்பை மாலைபோல் கழுத்தில் இட்டார். உன் தந்தை இறந்த பாம்பைச் சுமக்கின்றார் என்றான்.

உடனே சிருங்கிக்குக் கண் சிவந்தது. உதடு துடித்தது. ''என் பிதாவை அவமதித்த வேந்தன் இன்று ஏழாவது நாள் இரவுக்குள் தட்சகன் என்ற அரவத்தால் கடிக்கப்பட்டு மாள்க'' என்று சாபத்தைத் தந்தார். பிதா இருக்குமிடம் வந்து அரவத்தை எடுத்து வணங்கித்தான் சாபம் இட்டதைக் கூறினார்.

சமீகர், மகனே! நீ பெரும் பிழை செய்துவிட்டாய். தவஞ் செய்கின்றவருக்கு இது தருமமன்று. பரிட்சித்து உத்தமமான மன்னன். ஏதோ பசி தாகத்தால் ஏற்பட்ட மதிமயக்கத்தால் எனக்கு இதைச் செய்

தான். பொறுப்பதுதான் அந்தணர்களான நமக்குக்கடமை. நல்ல மன்னவன் இல்லையானால் உலகில் அறம்நிலை பெருது. நாம் தவம் புரிந்துகொண்டு சுகமாக வாழ்வது மன்னவனுடைய இனிய ஆட்சியினால்தான். மன்னவனால் உலகம் காப்பாற்றப்படுகின்றது. ஒரு வேந்தன் வேதம் ஓதிய பத்து அந்தணர்கட்கு நிகரானவன் என்று மனு கூறியிருக்கின்றார். என்னுடைய மௌன விரதத்தையறியாமல் இதைச் செய்துவிட்டார். நீ சிறுபிள்ளைத் தனமாக அவசரப்பட்டு அம்மன்னரைச் சபித்தனையே. மகனே சாபத்தை மாற்று'' என்று கூறினர்.

சிருங்கி "பிதாவே! நான் விளையாட்டுக்கும் பொய் சொன்னதில்லை. என் வாக்கு ஒருபோதும் மாருது'' என்ருர்.

மகனே, எப்போதும் பொறுமையை மேற்கொண்டிரு. பொறுமை, இம்மை மறுமை இரண்டையுந் தரும் என்று கூறி விட்டுச் சமீகர், தன் சீடர் கௌரமுகரை அழைத்து, நீ சென்று பரிட்சித்து மன்னருக்கு என் ஆசியைக் கூறிச் சாபத்தையும் கூறி, எச்சரிக்கையாக இருக்கச்சொல் என்று அனுப்பினர். கௌரமுகர் அத்தினபுரம் எய்தி அமைச்சர்கட்கு முன் வேந்தரைக்கண்டு நிகழ்ந்ததைக் கூறினர்.

பரிட்சித்து பெரிதும் வருந்தினர். தனக்கு நேர இருக்கும் மரணத்தைக் காட்டிலும் மாதவருக்குச் செய்த தீங்கை நினைத்து மனம்புழுங்கினர். "என்னை மன்னிக்குமாறு முனிவர் பெருமானை நான் வணங்கி வேண்டிக்கொண்டேன் என்று கூறுங்கள்'' என்று அவரிடம் சொல்லி அனுப்பினர்.

மந்திரிகளின் ஆலோசனைப்படி ஒரு தூண்போல் அமைத்த மாளிகையில் வசித்தார். அதில் காவல் அமைத்தார். காற்றுக்கூட உத்தரவுஇன்றி நுழைய முடியாத அளவில் கடுங்காவல் அமைக்கப்பட்டது. விஷ வைத்தியர்களும் மாந்திரிகர்களும் பலர் சூழ்ந்திருந்தார்கள்.

காசியபர்: காசியபர் என்ற ஏழை வேதியர் அமிர்த சஞ்சீவி மந்திரம் அறிந்தவர். ஏழாவது நாள் அவர் மன்னனை நாடி வந்துகொண்டிருந்தார். வழியில் கிழ மறையவன் வடிவில் நின்ற தட்சகன் அவரைக் கண்டான். நீர் எங்குப் போகின்றீர்?'' என்று கேட்டான். காசியபர் "ஐயா! நான் சிறந்த மாந்திரீகன். மன்னரை இன்று தட்சகன் என்ற நாகராஜன் கடிக்கப்போகின்ருனும். அப்படி மன்னர் மாண்டால் நான் என் மந்திர சக்தியால் எழுப்புவேன். அதனால் எனக்குப் பொருளும் புகழும் வரும்'' என்ருன்.

தட்சகன் "அந்தணரே! நான்தான் தட்சகன். என் விஷத்தைச் சிவமூர்த்தியைத் தவிர வேறு யாராலுந் தாங்கமுடியாது. என் விஷத்தீயால் எரிந்து மாண்ட மன்னனை நீஎழுப்பப்போகின்ருயா. இது ஆகாத காரியம்'' என்ருன்.

"என் மந்திரத்தின் ஆற்றல் மிகவுயர்ந்தது. அதன் மகிமையை நீயறியாய்'' என்ருன் வேதியன். தட்சகன் "நல்லது இதோ இருக்கின்ற ஆலமரத்தைக் கடித்து எரிப்பேன். இதைப் பழையபடி தழைக்க வைப்பாயானால் உன் மந்திர வன்மையை நான் நம்புவேன்'' என்ருன் தட்சகன். உடனே தழைத்து வானோங்கியுள்ள அந்த ஆலமரத்தின் அடியில் தன் நஞ்சினைப் பதித்தான். குபீர் என்று மரம் தீப் பற்றி எரிந்தது. காசியபன் அமிர்த சஞ்சீவி மந்திரத்தை உச்சரித்தான். உடனே மரம் பழையபடி தளிர்த்து நின்றது. அம்மரத்தில் விறகு ஒடித்துக் கொண்டிருந்தான் ஒருவன்; அவனும் எரிந்தான். மந்திரத்தால் பிழைத்தான். அவன்தான் காட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை நாட்டில் வந்து கூறினன். தட்சகன் கண்டு அதிசயம் அடைந்தான்.

"வேதியரே! உமக்கு வேண்டியது செல்வம். ஒருவேளை மன்னரை நான் கடிக்க முடியாது போனலும் போகக்கூடும். அதனால் உன் வறுமைப் பிணியகல மன்னரிடம் நீர் எதிர்பார்ப்பதைவிட இருமடங்கு செல்வம் இந்தா! இதை எடுத்துக் கொண்டு திரும்பிப்போ, என்ருன். பொற்குவியலைப் பெற்று வேதியன் திரும்பினன்.

தட்சகன் தன் இனங்களான நாகங்களை வேதியர்கள் வடிவில் வேந்தரிடம் அனுப்பினன். அவர்கள் பழம் மந்திரநீர் இலை தர்ப்பை இவைகளைக் கொண்டுபோய்த் தந்து ஆசி கூறியகன்றனர்கள். பொழுது மலையில் சாய்ந்து கொண்டிருந்தது. அப் பழங்களை மந்திரிகட்கும் தந்து தானும் ஒரு பழத்தை எடுத்துப் பரிட்சித்து உண்ணத் தொடங்கினன். அதில் தட்சகன் சிறு புழுவாக இருந்து கீழே விழுந்தான். விதி மாய்ந்த வேந்தன் அப்புழுவை எடுத்துக் கழுத்தில் வைத்துக் "கதிரவன் கடலில் முழுகுகின்றன். முனிவர் வாக்கு பொய் யாகாமல் இருக்கட்டும். இதுதான் தட்சகனுகி என்னைக் கடிக்கட்டுமே?" எனக்கூறி வேடிக்கையாகச் சிரித்தார். உடனே அப் புழுவாக இருந்த நாகராஜன் நீண்ட பாம்பாகி அவன் கழுத்தைச் சுற்றிச் சீறிக் கடித்தான். பரிட்சித்தும் அம்மாளிகையும் விஷாக்கினியால் வெந்து சாம்ப ராயின. அமைச்சர்களும் பணியாளர்களும் அஞ்சி ஓடினர்கள். இப்படி உன் தந்தை மாண்டார்.

பின்னர்க்குழந்தையாக இருக்கும்போதே உமக்கு மகுடாபிஷேகம் நடைபெற்றது. நீர் காசி மன்னர் சுவர்ணவர்மாவின் மகள் வபுஷ்டமையை மணந்து அரசு புரிகின்றீர், என்று கூறினர் உதங்க முனிவர்.

ஜனமேஜயர் துன்பத்தால் தவித்தார். கையுடன் கையைப் பிசைந்தார். கண்ணீரால் நனைக்கப்பட்டார். பாவியாகிய தட்சகன் அந்தக் காசியபரைப் பணங் கொடுத்து அனுப்பாது இருந்தால் என் தந்தை பிழைத்திருப்பாரே? என் பிதா பிழைத்தால் இவனுக்கு என்ன நஷ்டம்? சிருங்கி முனிவருடைய சாபத்தைக் காரணமாக வைத்து என் தந்தையைக் கொன்றன்.

ஆதலால் "சர்ப்பயாகஞ் செய்து தட்சகனையும் நாக இனத்தையும் அழிப்பேன்" என்று உறுதி கொண்டார்.

(தொடரும்)

* சுவேதகாகீயம் :- சுவ-நாய்: ஏதம் -மான்; காக-காக்கை. நாயைப்போல் ஜாக்கிரதையாகவும், மானைப்போல் பயந்தும், காக்கையைப்போல் குறிப்பறிந்தும் நடந்து உபசரித்தாள்.

நல்லுபதேசம்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்! யார்அறிவார்
சாநாளும் வாழ்நாளும்? சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே!

(சம்பந்தர்)

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டான் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே!

(அப்பர்)

உகந்தருளின நிலங்கள்

திருமலை நல்லான் இராமகிருஷ்ணையங்கார், சென்னை.

காக்கு மியல்வினன் கண்ணபெருமான். அம்மாயப்பிரானையன்றி வேறு யார் காக்கு மியல்பினராயிருக்க முடியும்? காப்பவனே இறைவன்; காப்பு இன்றேல் இறைமை நிலைக்காது. இறைவன் உடையவன்; உடைமைகளைக் காப்பது அவன் கடமை. உடைமைகளில் ஏதேனுமொன்றையவன் கைவிட்டாலும், அவனது இறைமையில் சிறிது குறை நேரும்; அதனால்தான் எப் பொருளையும் விடாது, தன்னுடைமை என் பது தோன்ற ஒவ்வொரு பொருளிலும் ஆன்மாவா யுட்கலந்து தாங்கி நிற்கின்றான் இறைவன்! தன்னுட் கலவாத எப்பொரு ளும் தானில்லையே? அங்ஙனம் கலந்து தாங்கி நிற்கும் இறைவனைச் சடப்பொருள் அறியமாட்டா. உணர்வு படைத்த உயி ரினங்களே அறிந்து இன்புறல் வேண்டும். ஆயின் மாயையால் மயங்கும் உயிரினங்கள் சடப்பொருள்கள் போலப் பிறிதொன்றும் அறியாது கிடக்கின்றன. இவையறியா விடினும் இறைவன் இவற்றை யணைந்து தான் இன்புற்ற வண்ண மிருக்கிறான். உறங்குகிற குழந்தையைத் தாய் அணைந்து இன்புறுவதில்லையா? அதுபோல் என்க. உறங்கும் குழந்தை தன்னையும் மறந்து தாயையுமறியாது கிடக்கின்றன. உயிரினங் கள் மாயையால் உணர்வையிழந்து (உறங்கி), தன்னை (ஜீவாத்ம ஸ்வரூபத்தை) யும், இறைவனை (பரமாத்ம ஸ்வரூபத்தை) யும் அறியாது மயங்கிக்கிடக்கின்றன. ஆயினும் எவ்வுயிர்க்கும் தாய் இருக்கும் வண்ணம் விடலரும் தொடர்பு கொண்டு அணைந்து நின்றின்புறுகின்றனன் இறைவ னென்க.

விண்ணாட்டவரோ மூதுவர், வயதுவந்து அறிவு படைத்த மகனுக்கும் தாய்க்கும் ஏற் படும் உறவு போன்றதே அவர்களுக்கும் இறைவனுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு. இந்நாட்டவர் அறியாப்பருவத்தினர். ஆத லின் இளங்குழந்தைகளிடம் தாய்க்குள்ள பாசம் இங்கே இறைவனுக்கு ஏற்படுகிறது. அறியாத இளங்குழந்தைக்கு முகம் காட் டாது அகன்றிருக்கத் தாயினால் முடியுமா? குழந்தை உணர்ந்து அம்மா என்னுதா? ஏனென்று முகங்காட்டி அதனையரவணைத் துக்கொள்ள மாட்டோமா என்று தாய் ஏங்கி நிற்பது போலப், பரமனும் பரமபதம் விட்டுப் பாற்கடலில் கிடந்து உயிரினங்கள் உணர்ந்து தம்மைக் காக்குமாறு கூப்பி டாவா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறான். அந்நிலையிலும் இறைவனது ஆற்றாமை தீர்ந்தபாடில்லை. இன்னும் நெருங்கி நிற்க வேண்டும் என்று அவாவுகிறான். பரம பதத்தையும் பாற்கடலையும் துறந்து தனது அருமை மக்களது சரீரத்துட்புகுந்து இத யத்திலிடம் பிடித்துக்கொண்டு உணர் வுற்றவழி முகங் காட்டி யுதவுவதற்காக அழகிய திருவுருவத்துடன் திகழ்கின்றான். சரீரத்தினுடைய உட்புறம் அருவருக்கத் தக்கதாயினும் தன் மக்களிடமுள்ள பாசத் தாலே அருவருப்புத் தோன்றாததோடு அதனை மனத்துக்குப் பிடித்த இடமாக ஆதரித்துக் கொண்டிருக்கிறான் இறைவன் என்பர். "இதயத்தில் எழுந்தருளியுள்ள புருஷன் அருவருப்படைவதில்லை" என்கி றது உபநிடதம். "திருப்பாற் கடலிலுள்ள இல்லம் பெரியதாய் விளங்கிக் கொண்டி ருப்பினும், பிரகிருதி மண்டலத்துக்கு அப் பாற்பட்டுத் திவ்வியமாய்க் கொண்டாடத் தக்க வீட்டுலகத்தில்லம் விளங்கிக்கொண் டிருப்பினும், உடலுக்குள் மிக நுண்ணிய தாயுள்ள இந்த இதயவெளி உனக்கு எங் ஙனம் விரும்பியுறையும் இல்லமாயிற்று" என்று ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்தில் ஸ்ரீ வேதாந்ததேசிகன் அருளியிருப்பதும் இங்கு அறியத்தக்கது.

உட்புக்குப் பேராது உறைந்து நின்றும் யோக முறையானுணர்வுற்று இறைவனைக் காண்பார் அரியராயினர். ஆகவே யோகியர் அல்லாதார் எல்லோரையும் வாரிப்பிடியாகப் பிடித்து அள்ளியணைத்தரவணைக்கும் பேராசையினால் இந்நிலவுலகத்தின் இழிவு பாராது ஆங்காங்கே இறைவன் அர்ச்சையுருக்கொண்டு உவப்புடன் எழுந்தருளியிருக்கிறான். புறக்கண்ணுங் காணலாம்படி தன்னையமைத்துக்கொண்டு எல்லோரையும் அகப்படுத்துவதற்குப் பாங்காக இறைவன் உவப்புடன் எழுந்தருளியுள்ள இடங்களே க்ஷேத்ரங்களென்று சிறப்பித்துப் பேசப்படுகின்றன. எல்லா நிலங்களும் இறைவனுக்குச் சொந்தமாயிருக்கச் சில நிலங்களில் மட்டும் இறைவன் உவப்புடன் எழுந்தருளியிருப்பதற்குக் காரணம், அந்நிலங்கள் நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் பல உயிரினங்கள் வந்து சேர்ந்து அகப்படுவதற்கு வாய்ப்பாய் அமைந்திருத்தலே யென்க. ''புண்ய க்ஷேத்ரம் முதலியவற்றில் பகவானுக்கு ப்ரீதி தன்பால் அன்புடையோரை வரிப்பதற்காக'' என்பர் சுருதப்ரகாசிகாசார்யர்.

இறைவன் எவருடைய வேண்டுகோளையும் எதிர்பாராது தானாக உகந்து எழுந்தருளியிருப்பது பற்றித் திருவரங்கம், திருமாலிருஞ்சோலைமலை, திருமலை முதலிய க்ஷேத்ரங்கள்தான், (இறைவன்) உகந்தருளின நிலங்கள் என்று போற்றப்படுகின்றன.

> '' மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்
> அன்பது மேஎய்இருங் குன்றத்தான் ''

என்கிற பரிபாடலும், '' உயிர்ப்பன்மையது மறுக்கத்தைச் செய்யும் பிறவித்துன்பத்தைக் களைவோன் அன்புபட்டு இருங்குன்றத்தின் கண்ணுறைதலால் '' என்ற உரையும் ஈண்டுக் காண்டற்குரியன. இவற்றால் உயிரினங்களின் பிறவித் துன்பத்தைக் களைவதற்காக (உணர்வுறுத்தற்காக) இறைவன் திருமாலிருஞ்சோலைமலையில் அன்புடன் எழுந்தருளியிருப்பது காட்டப்படுகிறதன்றோ?

அந்தமில் பேரின்ப மெனப்படும் பரமபதத்தில் இறைவன் உவப்புடன் எழுந்தருளியிருக்கும் நிலைக்கும் இந்நிலவுலகின்கண் உள்ள க்ஷேத்ரங்களில் எழுந்தருளியிருக்கும் நிலைக்கும் மிகவும் வித்யாஸம் உண்டு. பரமபதம் இறைவனும் உகந்தது, நித்யஸூரிகளும் உகந்தது; இறைவனது உகப்புடன் சூரிகளது உகப்பும் கலந்துள்ளது. இந்நிலவுலகிலுள்ள க்ஷேத்ரங்களோ இறைவன் மாத்திரம் உகந்தவை. இறைவனது உகப்புக்கலப்பற்றது. அங்கு உணர்ந்து விழிப்புடன் உள்ள சூரிகள் போல இங்கு உறங்கி மறந்து கிடக்கும் ஸம்ஸாரிகளாகிய உயிரினங்கள் உவக்க இடமில்லையே! எனவே இறைவனது உகப்புக் கலப்பற்றுத் தனித்தன்மையுடன் திகழுவது இங்கேயே என்க. தன் உடைமை நசியாமைக்காக இறைவன் தானே ஆதரித்து வந்து நிற்கிற தேசமே உகந்தருளின நிலங்கள் என்றதாயிற்று.

எவ்வுலகத்தவராயிருந்தாலும், எந்த நிலையில் உள்ளவராயிருந்தாலும், நலமந்தமில்லதோர்நாடு எனப்படும் பேரின்ப வீட்டுலகை யெய்த விருப்பம் கொள்கின்றனர். வீட்டுலகையடைந்தவர்க்கு வீவில் இன்பம் மிக வழங்குகின்றனன் எம்பெருமான். ''இவனேயன்றோ ஆநந்தப்படுத்துகிறான்'' என்கிறது உபநிடதம். ''வந்தவரை இன்புறுத்தும் எம்பெருமான் ஆநந்தமயன்.'' அந்த ஆநந்தமயனுக்குப் பேராநந்தம் தருகின்றன உகந்தருளின நிலங்கள்! ''தெளிவிசும்பு'' எனப்படும் விண்ணுலகில் இன்பம் நண்ணுவதில் வியப்பொன்றுமில்லை. ''இருள்தருமாஞாலம்'' என்று இகழப்படும் இவ்வுலகில் பேராநந்தம் பெறுவது பெருவியப்பே. விண்ணுலகிலின்புறுவது அல்லலெல்லாமகன்ற ஆன்மவர்க்கங்கள் இவ்வுலகிற் பேராநந்தம் பெறுவதோடு உயர்ந்த நலமுடையவன் ஒருவன். நமக்கு வீட்டுலகம் போன்றவை, எம்பெருமானுக்கு இந்நிலவுலகின்கண்ணுள்ள உகந்தருளின நிலங்கள் என்றதாயிற்று.

நமக்கு, பெத்த தசை என்றும், முமுட்சு தசை என்றும், முக்ததசை என்றும் மூன்று நிலைமைகள் உண்டு. இருவல்வினை வன்கயிற்றாற் கட்டப்பட்டுச் சரீரத்தோ டுழலும் நிலைமையே பெத்ததசை. ஆக்கையின் புணர்வினையறுத்து வீடுபெறத்துடிக்கும் நிலைமையே முமுட்சு தசை. விடுபட்டு இறைவனடியை யடைந்து இன்பவெள்ளத்தில் மூழ்குதலே முக்ததசை. நமக்குப் போல இறைவனுக்கும் இத்தகைய மூன்று நிலைமைகள் உண்டென்பர், பரமபதத்தில் சூழ்ந்திருந்தேத்தும் சூரிகளுக்கிடையே அவர்கள் கண்பார்வையிற் கட்டுப்பட்டு வெளியேறமாட்டாமல், இறைவன் எழுந்

தருளியிருக்கும் நிலைமையே "பெத்ததசை" என்க. சூரிகளின் கட்டுப்பாட்டையறுத்து உகந்தருளின நிலங்களைப் பெறத் துடித்துக் கொண்டு பாற்கடலிற் கிடக்கும் நிலைமையே "முமுட்சுதசை" என்க. உகந்தருளின நிலங்களை யடைந்து ஸம்ஸாரிகளாகிய நம்மையணைத்துப் பேரானந்தமுறும் நிலைமையே இறைவனுக்கு "முக்ததசை" என்க. முக்தியென்பது பேரின்பம். பேரின்பம் தரும் இடங்களை இறைவன் உகந்தருளின நிலங்கள் என்பது பொருந்துகின்றதன்றோ?

பேரின்பமுற்று இறைவன் எழுந்தருளியிருக்கும் இவ்வுகந்தருளின நிலங்களிலேயே நாம் அவனைப் பற்றுதல் வேண்டும். இறைவனிடம் உள்ள குணங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பற்றுதற்கு உறுப்பாயமைந்தவை ஒருவகை, பற்றினோர்க்குப் பயன் தருதற்கு உறுப்பாயமைந்தவை மற்றொருவகை, பயனடைந்தோர் துய்ப்பதற்கு உறுப்பாயமைந்தவை இன்னொருவகை. பற்றுதற்கு உறுப்பான குணங்களாக ஸ்வாமித்வம், வாத்ஸல்யம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் என்பவை கருதப்படுகின்றன. ஸ்வாமித்வமாவது சொத்துக்கு உடையவனாயிருத்தல். உடைமையாகிய உயிரினங்களை இழக்காது பெறுதற்காகவே இங்குவந்தெழுந்தருளியிருப்பதால் ஸ்வாமித்வம் வெளிப்படுகிறது. வாத்ஸல்யமாவது குன்றனைய குற்றம் செய்யினும் குணமாகக்கொள்ளும் அன்புடைமை. குற்றத்திற்கு உறைவிடமான இந்நிலத்தை ஆதரவுடன் பற்றி நிற்கையாலே இக்குணமுடைமை தெரிகிறது. ஸௌசீல்யமாவது தன் மேன்மை பாராது கீழோரிடமும் ஒன்றிப் பழகும் பண்பு. இறைவன் எல்லாம்வல்லவனாயினும்தன்னை வழிபடுவோர்க்குக் கைப்பொம்மையாயமைந்திருப்பது கொண்டு இப்பண்புடைமை காணலாம். ஸௌலப்யமாவது கண்ணுக்குத் தோன்றி நிற்கும் எளிமை. புறக்கண் கொண்டும் காணலாம்படி எழுந்தருளியிருத்தலாலே ஸௌலப்யம் தெளிவாகிறது. ஆகவே பற்றுதற் குறுப்பான குணங்கள் விளங்குமிடங்களாயிருப்பது பற்றி உகந்தருளின நிலங்களே பற்றுதற்கேற்ற இடங்களாமென்க.

இனி பற்றினர்க்குப் பயன் தருதற்கு உறுப்பான குணங்கள் அறிவு, ஆற்றல் தண்ணளி முதலியன. அர்ச்சைவடிவத்திற் கையிலே பிடித்த திவ்யாயுதங்களால் பற்றுகின்ற நம்முடைய விரோதிகளை யறிந்து களையும் ஆற்றலுடைமை தோற்றுகிறது. "செருவரை முன்ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்த தென்கின்றாளால்" (பெரிய திருமொழி 8, 1, 2,) என்று திருமங்கை மன்னன் திருக்கண்ணபுரம் ஸௌரிராஜப் பெருமாளைப் பார்த்து, பகை தொலைத்த படை கையிலிருந்தும் என் பகையை (இறைவனை யநுபவிப்பதற்குத் தடையாயிருக்கும் பாபத்தைப்) போக்காததேனோ ? என்று வினவுவது காண்க. "அழகுக்கோ கையிற் பிடித்திருக்கிறது. விரோதிகளை நிரஸிக்கைக் கன்றோ ?" என்பது, வியாக்கியானம். இவ்வியாக்கியானத்திலேயே, திருமங்கை மன்னன் அருளிய இச்சொற்றொடரைப் பிள்ளை திருக்கண்ணபுரத்தரையர் விண்ணப்பம் செய்யப், பகையினத்தை ஒரு க்ஷணத்திலே அழிப்பதாகப் பெருமாள் அருளிச் செய்ததாக, ஐதிஹ்யம் காண்பதும் இங்கு அறியத் தக்கது. அர்ச்சையுருவில்திருக்கண்களில் தண்ணளி நிறைந்திருப்பதைப் பக்தர்களின் அநுபவ வாக்குக்களால் நாம் காணலாம்.

இனி, துய்ப்பதற்கு உறுப்பாயமைந்த குணங்கள் அழகு சேஷித்வம் முதலியன. பரமபதத்தில் இறைவனது பேரெழிலை அடியார்கள் இடைவிடாது துய்த்துக் கொண்டேயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. "விஷ்ணுவின் சிறந்த திருவடியைச் சூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள்" என்று வேதம் ஓதுகின்றது. சேஷத்வ மாவது, அடியவர்கள் அழகுக்குத் தோற்றுப்புரியும் அடிமையினை யேற்குந் தன்மை. வீட்டுலகின் கண் அடியார்கள் குழாங்களாய் இறைவனை இமைப்பிலாது நன்கு துய்த்துப் பணி புரிந்து மகிழ்வுறுத்துகின்றனர். இத்தகைய எழிலும் சேஷித்வமும் வீட்டுலகின் கண் விளங்குவதைவிட உகந்தருளின நிலங்களிலேயே இறைவனிடத்தில் சுடர் விட்டொளிருகின்றன. விண்ணாட்டவர்களாகிய விஷ்வக்ஸேநரும் வீட்டுலகை விட்டுத் திருவேங்கடத்தின்கண் வந்து பொருந்தி வந்தனை வழிபாடுகள் செய்வதாக நம்மாழ்வார் அருளிச் செய்கின்றார். வீடடைந்து அங்கு நின்றும் வேங்கடத்துக்கு மீண்டு வந்து அடிமைபுரிவதைவிட இங்கு நின்றும் நேரே திருவேங்கடம் சென்று அடிமைபுரிவதே சாலச்சிறந்ததென்பது ஆழ்வாருடைய திருவுள்ளமா

கும். தமிழ் வேதமாம் திருவாய்மொழியை ஓதிய வேதியர்கள், ஆழ்வார் கருத்தையடி ஒற்றிப் பணிபுரிந்து இறைவனையின்புறுத்தும் வீட்டின்பத்தை உகந்தருளின நிலங்களிலேயே யெய்தி விடுகின்றனர். ''விண்ணுலகத்தில் விலக்கின்றி மேவுமடிமையெலாம், பண்ணமருந் தமிழ்வேத மறிந்த பகவர்கள் மண்ணுலகத்தில் மகிழ்ந்தடைகின்றனர்'' என்னும் வேதாந்த தேசிகன் திருவாக்குமிங்கு நோக்கத்தகும்.

ஆக மூவகைப்பட்ட குணங்களும் நன்கு மிளிருவதுபற்றி உகந்தருளின நிலங்களே நமக்குப் பற்றுதற்கும், பயன் எய்துதற்கும் துய்ப்பதற்கும் பாங்கானவை என்பது விளங்கும். சௌநகபகவான் ''அர்ச்சை யெம்பெருமானை அர்ச்சித்து வழிபட வேண்டும், வழிபட்டவன் குற்றம் நீங்கி அவ்வர்ச்சையிறைவனையே எய்துவான்'' என்று கூறியிருப்பது மிங்கு நினைக்கத்தகும்.

ஆக யாம் இதுகாறும் கூறியவற்றால் உகந்தருளின நிலங்களின் சிறப்பு நன்கு புலப்படும். அவை பேரின்பவடிவனான இறைவனுக்கும் இன்பம்தருபவை. வீட்டுலகத்தினும் வீறுமிக்கவை யென்பது போதரும். இராமபிரான் அவதரித்த அயோத்திமா நகரத்திற்கு இங்ஙனமே சிறப்புக் கூறுகிறார் கம்பர் :—

> ''எவ்வுலகத்தோர் யாவருந்தவஞ் செய்தேறுவானு
> தாிக்கின்ற
> அவ்வுலகத் தோரிழிவதற்கருத்தி புரிகின்ற
> தயோத்தி மாநகரம்''

எத்தகைய சிறந்த புண்ணிய லோகத்திலுள்ளவர்களும், எத்தகைய சிறந்த பதவி வாய்ந்த மேலோரும், மேலும் ஏற்றமெய்த வேண்டுமென்று தவம் புரிந்து வீட்டுலகமடைய விரும்புகின்றனர். அத்தகைய வீட்டுலகத்தவர்களாகிய இறைவனும், சங்கசக்ராதி சூரிகளும் அவ்வுலகத்தைவிட்டு இந்நிலவுலகின்கண் ணுள்ள அயோத்திமாநகரத்துக்கு இறங்கிவர விரும்புகின்றன ரென்றால், அந்நகரத்தின் மாட்சி செப்புந்திறத்ததோ? இதைவிட நகரின் சிறப்பை வேறு எந்த விதத்திலும் எந்தக் கவிஞனும் வருணிக்க இயலாது, கவிஞர் பெருமான் கம்பன் அங்ஙனம் வருணித்துள்ளமை பேருவகை தருகிறது.

இவ்விடத்தில் ''ஏறுவான்'' 'இழிவதற்கு' என்னும் சொற்கள் சுவைதருவனவாயமைந்துள்ளன. ஏறுதல் இறுதியான ஏற்றம் தரவில்லை. இழிதல் அத்தகைய ஏற்றம் தருகின்றது. இழிதல் இறங்குதல், அவதாரம் செய்தல். பிறக்கச் சிறப்படைகின்றன னிறைவனென்று வேதமோதுகின்றது. ''பிறப்பாய் ஒளிவருமுழுநலம்'' என்கிறது தமிழ் மறையாம் திருவாய் மொழி.

வீட்டுகிலன்கண் இறைவன் எழுந்தருளியுள்ள ஊருக்கும் அயோத்தி என்றே பெயர். அதனைவிட்டு இந்நிலவுலகின் கண்ணுள்ள அயோத்திக்கு வருவதற்குக் காரணம் இது மாட்சியுள்ள நகரமாயமைந்திருப்பதே என்பார் ''மாநகரம்'' என்றார். அங்கு இறைவன்பால் உள்ள எளிமைக் குணங்கள் பகல்விளக்குப் போல இருக்கும். இங்கேயே அவை ஒளிருகின்றன. எல்லோரும் இறைவனோடு ஒப்படைந்துள்ளமையின் எளிமையின் மதிப்பை யுணருவாரங்கில்லை. சிறந்த ரத்நங்கள் பெரிய நகரங்களில்தான் நல்ல மதிப்பையடைய முடியும்.

கம்பர், அவதாரஸ்த்தலமாகிய அயோத்திக்குச் சொன்ன சிறப்பைவிட அதிகமான ஏற்றம் அர்ச்சையுருவில் உகந்தருளின நிலங்களுக்கேயுண்டு என்பதை உணர்தல் வேண்டும். அவதரித்த இறைவன் சில காலம் அயோத்தியை விட்டு நீங்கியதும், பிறகு பழைய வீட்டுலகிற்கே தன்னோடு தன் நாட்டவரையும் கூட்டிக்கொண்டு மீண்டுவிட்டதும், அயோத்தி மாநகருக்கு உள்ள குறைகளாகும். உகந்தருளின நிலங்கட்கோ இத்தகைய குறைகளில்லை. இடம்விட்டுப் பேராது, ஸம்ஸாரம் கிழங்கெடுத்தாலல்லது பேரேன் என்று மீளாது, என்றும் இறைவன் கிடந்து உகந்தருளிக் கொண்டிருப்பது, உகந்தருளின நிலங்கட்கு வாய்த்த தனிச் சிறப்பன்றோ?

ஞானசித்தர்களும் சித்த மருந்தும்

திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ.,பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.

கண்டத்திற்குமேல் தேவலோகமென்றும், கண்டத்திற்குக் கீழும் இடுப்பிற்கு மேலும் மானிடலோக மென்றும், அதற்குக் கீழுள்ள அங்கங்கள் அசுரலோகமென்றும் சாதாரணமாய் நாம் சொல்லக்கேட்டுள்ளோம். இவை மூன்றினுள் தேவலோகமே உயர்ந்த தென்பதைக் கேள்வியளவிலேயே முடிவு காண்கிறோம். இந்தச் சிறந்த லோகத்தைப் பாதுகாப்பது நம்முடைய கடமை. அங்கு உண்டாகும் பிணிகளை அறுவைச் சிகிச்சைகளால் நீக்க முயல்வது அசுரசிகிச்சையைக் காட்டிலும் தாழ்ந்தது. ஒருவனுக்கு மயக்கம் வருகிறது. தனக்குத் தெரியாமலேயே எழுந்து நடந்து போகிறான். இவ்விதநோய் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வருகிறது. இந்த வியாதி மூளையில் ஏதோ மாறுதல் காரணமாக உண்டாகியிருக்கலாமென்று கபாலத்தைத் திறந்து அதில் ஆயுத சிகிச்சை செய்ய முயலுவோமாயின் பிராணனுக்கு நிச்சயமாய் ஆபத்து நேரிடும். எத்தனை எத்தனையோ மக்கள் அவ்வித சிகிச்சையால் மாண்டுபோ யுள்ளனர்.

100 வருடத்திய வேம்புமரம் கிடைத்தால் நலம். கிடைக்காவிடில் வயது முதிர்ந்த வேம்பு மரத்தின் வடக்கிற்போகும் வேரை எடுத்து அந்த வேர்ப்பட்டையை நூறுகிராம் அளவுக்கு எடுத்துத் தட்டிப் புதுப்பானையில் இரண்டு லிட்டர் தண்ணீர் ஊற்றி அதில் ஷ பட்டையைத் தட்டிப் போட்டுப் பானையின் வாயிற்குச் சன்னமான வெள்ளைத் துணியைக்கட்டி வெய்யலில் வைத்து மூன்று நாட்கள் ஆனபிறகு நாலாம் நாளிலிருந்து அந்தத் தண்ணீரை மூன்று அவுன்ஸ் அளவு காலை வெறும் வயிற்றில் நாள் ஒன்றுக்கு ஒரு வேளை 10,200 நாட்கள் சாப்பிடின் மேற்படி மயக்கம், தானாக நடந்து போவது, சித்தப்பிரமை (Hysteria) முதலிய மூளையைப்பற்றிய வியாதிகளெல்லாம் குணமாகும். இதற்குச் செலவு ஒன்றுமில்லை. ஷ பானைத் தண்ணீரை மருந்து சாப்பிடும் நாள் வரையில் சூரிய புடத்தில் வைக்கவேண்டும்.

உடலிற் பிணிகள் வரும் காலங்களில் யோகிகள் பிணிக்குத் தக்கவாறு சுவாசத்தை மாற்றிக் குணப்படுத்திக் கொள்வர். உடல் அதிக வெப்பமாக இருப்பின் சுவாசத்தை (சந்திரகலை) இடது நாசித்துவாரத்தால் இயக்கிக் குளிர்ச்சி செய்து கொள்வர். அதைப் போன்றே அப்புவென்னும் நீர் அதிகமாய்ச் சேருங்காலங்களில் வலது நாசித் துவாரத்தால் சுவாசத்தை இயக்குவர். இதனால் உடல் வெப்பமடையும். உடலில் நீர் அதிகமாகக் காண்பது வெப்ப நிலையைக் காட்டிலும் மோசமானது. வெப்பம் குறையுங் காலையில் பிராணன் போய்விடும், உயிர் நீங்குகிற காலத்தில் பாதங்கள் கால்கள் குளிர்ச்சியடைந்து விடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகவே உடலின் வெப்ப நிலையைக் குறையாமல் வைத்திருப்பதுவே சிறந்தது. அதன் காரணமாகவே தவத்தில் சிறந்தோர் படுக்குங்கால் இடது பக்கமாகவே படுத்துப்பழகுதல் நலமென்பர். இடது பக்கம் படுப்பதினால் சுவாசம் வலது (சூரியன்) நாசித் துவாரத்தில் இயங்கித் தூங்கும் காலத்தில் இயங்கும் உறுப்புக்களிலுள்ள அழுக்குகள் எரிக்கப்பட்டு உடல் வன்மைபெறுகின்றது. அவ்விதப் பழக்கத்தினால் ஆயுளும் விருத்தியாகிறது. உடலும் சுக்குப்போல் மெலிவடைந்து சுவாசம் தானாக ஒரு முகப்படவாரம்பிக்கும். ஆகவே மூக்கின் முக்கியத்துவம் எவ்வளவென்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

மூக்கடைப்பு: இதற்கு முன்கட்டுரையில் அறுகம்புல் தைலத்தைப் பற்றி எழுதியுள்ளோம். அதை வாரத்திற்கிருமுறை தலையில் தேய்த்துக் குளிக்கவும், வில்வ இலைகள் இருபதைப் பசும்பால்விட்டு வெண்ணெபோல அரைத்

துத் தலையில் தப்பளம் போட்டு ஒரு மணி நேரம் இருக்கவிட்டு பிறகு தண்ணீர் ஊற்றிக் கொள்ளவும். இப்படி 10, 20 நாட்கள் செய்தல் வேண்டும். இப்படிச் செய்வதினுல் தலையிலுள்ள நச்சு நீர் முறிக்கப்பட்டு மூக்கடைப்புத் தீரும். காலையில் பல்துலக்கும் காலத்தில் மூக்கினுள் தண்ணீரை இழுத்து வெளியே தள்ளவும். இப்பழக்கம் எல்லோரும் செய்தல் நலம். மூக்கினுள்ளிருக்கும் அழுக்கு நீங்கி கண்களும் குளிர்ச்சியடையும். கண்களைத் திறந்துகொண்டு தண்ணீரை அடித்தால் நலமென்பதைப் பற்றியும் இதுவரையில் எழுதியிருந்தோம்.

கரிமஞ்சள் புகை: கரிமஞ்சள் கொம்பு ஒன்றை எடுத்து நல்லெண்ணெயில் முனையை முக்கி விளக்கொளியில் சுட்டு, அதில் வரும் புகையை நாள் ஒன்றுக்கு ஒரு முறையாவது நுகருவதினுல் மூக்கின் அடிப்பாகத்திலுள்ள கிருமிகள் இறந்துபோகும். இப்படி பல நாட்கள் செய்வது நல்லது. சளியடைப்பையும் குணப்படுத்தும்.

ஒரு பாத்திரத்தில் தேங்காய்நாரைவைத்து நெருப்பிட்டு அதில் கொஞ்சம் சாம்பிராணிப் பொடியிட்டு அதில் வரும்புகையைப் பிடிப்பது நல்லது.

நேத்திரமூலத் தைலத்தைப்பற்றிமுன்னெரு கட்டுரையில் எழுதியுள்ளோம். அந்தத் தைலத்தை மூக்கினுள் அடிக்கடி விட்டு வந்தால் மூக்கடைப்பு தீரும். சதைவளர்ச்சி முதலியன நாளடைவில் குணமாகும்.

மற்ருெருதைலம்: இந்தத் தைலம் மிகச் சிறந்தது.

பாதாம் தைலம்:

பாதாம் எண்ணெய்	100 கிராம்
பசு நெய்	50 கிராம்
கோரோசனை	5 கிராம்

இவைகளைச்சேர்த்து சிறு அளவில் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். இதை மூக்கில் விட்டு வர நாசியில்உண்டாகும் பல பிணிகள் நீங்கும்.

வைத்தியர்கள் செய்யக்கூடிய முறை:

லிங்கம் (Mercury Sulphide)	5 கிராம்
எருக்கன் வேர்பட்டை	5 கிராம்
மஞ்சள் தூள்	5 கிராம்

மூன்றையும் ஒன்ருகச்சேர்த்து அரைத்து அத்தூளை ஒரு துணியில் திரியாகச் சுருட்டி நுனியில் கொளுத்தி அதில் வரும் புகையை பக்குவமாய் நுகரச் செய்தால் பீனசமென்னும் மூக்கினுள்ளிருக்கும் பல வியாதிகள் தவிடு பொடியாகிவிடும். இந்தப் புகையை வெகு சாக்கிரதையாக் கண்ணில் படாதபடி செய்ய வேண்டும். புகையை யிழுக்கும் சமயம் கண்களை மூடிக்கொள்ள வேண்டும்.

உடல் பலவீனப்படும் காலத்தில் காது, மூக்கு, முதலிய உறுப்புகளில் பிணிகள் வருவது இயற்கை. உடல் தேறும் மறுந்துகளையும் உள்ளுக்குச் சாப்பிடுதல் சிறந்தது. அயச் செந்தூரம், அயக்காந்த செந்தூரம், முதலியன, அஸ்வகெந்திரசாயனம் அல்லது அசுவகெந்திசூரணத்தை அனுபானித்துத் தேனில் சாப்பிடுதல் நல்லது. (தொடரும்)

செய்திச் சுருக்கம்

கும்பகோணம் ஸ்ரீஜகத்குரு சாந்ததேவ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடம் பிரசார மண்டபத்தில், சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கத்தின் சார்பில், சைவ சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்பு, 23—5—68 முதல் 2—6—68 வரை திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரு த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் 'திருவுந்தியார்' பற்றிச் சிறப்புற நடைபெற்றது. சித்தாந்தம், ஆசிரியர் திரு மு. அருணுசலம் எம் ஏ., அவர்கள் வகுப்பைத் துவக்கி வைத்தார்கள். அன்பர்கள் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

—ஆசிரியர்.

உடம்படு மெய்

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழிக்கே உரிய பலவகைப் பெருமைகளுள், அதன் சீரிய இலக்கண அமைப்பும் ஒன்ருகும். அதுபற்றியே,

“ கண்ணு தற்பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்த இப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண
வரம்புஇலா மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?”

என ஆசிரியர் பரஞ்சோதி முனிவர், அதன் சீரிய இலக்கண அமைப்புத்திறம் குறித்துப் பாராட்டி யுரைப்பாராயினர் !

“தமிழ் மக்களைப்போல இலக்கணத்தினை அன்பும் ஆர்வமும் கொண்டு, திட்ப நுட்பம் செறிய, மிகவும் நுணுகிக் கற்றுணர்ந்து இன்புற்றவர்கள் உலகிலேயே வேறு பிறர் இல்லை எனலாம். மொழியின் இலக்கண அமைப்புக்களை நுணுகி நுணுகி மிகவும் ஆராய்ந்து பயின்று வந்ததனுல், தமிழர்களின் அறிவு மிகக் கூர்மை யடைந்து வளர்ந்ததுடன், அவர்களுடைய மொழியும் திருத்தமுற்றுச் செம்மை எய்தித் திகழ்வதாயிற்று” எனப் பேரறிஞர் திரு. கால்டுவெல் அவர்கள் பாராட்டியுரைக்கின்ருர். (1).

சுருங்கக் கூறலுறின், தமிழிலக்கண அமைப்பினை ஆராய்வதொன்றே, தமிழ் மக்களின் அறிவாரய்ச்சித் திறனையும், நாகரிக மேம்பாடுகளையும் அளந்தறிந்து உணர்ந்து கொள்ளுதற்கு எளிய இனிய உறுபெருங் கருவியாகும் எனலாம் (2).

இவ்வாறு தமிழ் மொழியானது திட்ப நுட்பம் செறிந்த சிறந்த இலக்கண அமைப்பினைப் பெற்றிருக்கும் திறம்பற்றியே, தமிழ்க் கவிஞர்களிற் பலரும் தாம் தாம் பாடிய கவிதைகளில், இலக்கண நூற் குறியீடுகளையும் கருத்துக்களையும் விதிகளையும் ஆங்காங்கு ஏற்ற பெற்றி விரவ வைத்துத் தமது சுவை நிறைந்த கற்பனைத் திறனைக் காட்டியுள்ளனர்.

தமிழ்மொழியின் இலக்கணம், பிறமொழிகளில் உள்ள இலக்கணம் போல வெறும் எழுத்துச் சொல் சொற்ருெடர் முதலியவற்றின் வழங்கற்பாடு பற்றிய இயல்புகளை மட்டுமே கூறி அமைந்து விடாமல், மிக உயர்ந்த தத்துவநூற் கருத்துக்களையும்

---

(1) “Educated Tamilians have studied Tamil with an earnestness and assiduity which are **highly creditable** to them, and which never have been exceeded in the history of any of the languages of the world.

One result of this long-continued devotion to grammatical studies has been the development of much **intellectual acuteness**; another result has been the **progressive refinement** of the language itself.”

(2) “There is no easier and better method of gauging the genius and mental acumen of the ancient Tamil race than to study their science of grammar which they **have** carried to a **very high perfection**.

Their subtle linguistic observation, their happy invention of the wonderful Sutra-device, their logical arrangement of the rules, and their elaborate methods of construing them cannot but be **the wonder of all ages.**”

—Dr. G. U. Pope.

தன்னோடு இயைத்துப் பிணைத்து விளக்கிக் கொண்டு நிற்கும் திறத்தினதாக விளங்கு கின்றது.

தமிழிலக்கணத்தில் எழுத்துக்களுக்குப் பெயர் அமைத்திருக்கும் முறையே, தமிழ் மக்களின் நுண்மாண்நுழை புலத்தினை நுனித்துணர்த்த வல்லதாய் உள்ளது.

தாமே தனித்து இயங்க வல்ல எழுத்துக் களுக்கு 'உயிர்' என்றும், உயிரோடு கூடி யல்லது இயங்கலாற்றாத எழுத்துக்களுக்கு 'மெய்' என்றும், உவமை ஆகுபெயராற் காரணம் பற்றிப் பெயர்கள் வழங்கப்படு கின்றன. தமிழ் மக்களின் தலை சிறந்த தத்துவ ஞானத்தினை இப் பெயர்கள் தகவுற விளக்குகின்றன (3). இப் பெயர் களின் தத்துவக் கருத்து நுட்பங்களுக்கு முன்னொடு பின் சிறிதும் முரணாமல், தமிழில் எழுத்திலக்கணம் வகுக்கப் பெற்றிருக்கின்றது.

தமிழிலக்கணம் தத்துவநூற் கருத்துக் களை அடிப்படையாகத் தகவுறக் கொண் டது என்னும் உண்மை, 'உடம்படுமெய்' என்னும் தமிழிலக்கணக் குறியீட்டுச் சொல்லானும் தெளிவுற விளங்கும்.

" இப்படி யன்றிக் கன்மம்
உயிர் இறை வேறுண் டென்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர்
செய்திடும் குற்றம் என்னோ?
ஒப்பிலா மலடி பெற்ற
மகன்ஒரு முயற்கொம்பு ஏறித்
தப்பில் ஆகாயப் பூவைப்
பறித்தமை சாற்றி னாரே!"

"காயத்தின் குணமது அன்றிக்
கண்டது ஆன்மா உண்டாயின்,
மாயத்திற் சொல்லிடாதே;
மனம்முதல் ஆறி னுக்கும்
நேயத்த தாக வேண்டும்;
அன்றியே நிகழ்த்தும் உண்மை
தேயத்தின் முயற்கொம்பு எல்லை
செப்புவோர் செய்தி யாமே"

என உலகாயதர்கள் உடம்பின் வேறாக உயிர் என்பதொன்று இல்லை எனக் கூறு வராயினும், சமய தத்துவ நூல்கள் பலவும் உயிர் என்பதொரு பொருள் உண்டு எனவும்; உடம்பே உயிரன்று, உடம்பின் வேறாக உடம்பின்கண் இயைந்து நிற்பது உயிர் எனவும் கூறும்.

உடம்படுமெய்

சடப் பொருளாகிய உடம்பின்கண் சித்துப் பொருளாகிய உயிரானது இடம் பெற்று ஒன்றி நிற்பதனாலேயே, உலகில் வாழ்க்கை நடைபெறுகின்றது. "அன் போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு" எனவரும் திருக்குறளும் இவ்வுண்மையை யுணர்த் தும். உயிரும் உடலும் தனித்தனியே நிற்பிற் பயனில்லை. அவை இரண்டும் ஒன்று சேர்ந்து இயங்குதல்வேண்டும். உடம்பின்கண் உயிர்வந்து சேர்ந்து ஒன்றி நின்று இயங்குவதே, உலக வாழ்வில் நாம் காணும் இயல்பு. இவ் வாழ்வியல் உண் மையினையே "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் நூற்பாவும் உணர்த்துகின்றது.

இந்நூற்பாவானது தத்துவச் செய்தி யினையும் தமிழிலக்கண விதியினையும் ஒருங்கே உணர்த்தி நிற்றல் காணலாம். **அரன் + அருள்** என்பழி 'அரன்' என்னும் சொல்லின் ஈற்றில் உள்ள 'ன்' ஆகிய உடலின்மேல் 'அருள்' என்னும் வருமொழி யின் முதலிலுள்ள 'அ' என்னும் உயிரானது வந்து சேர்ந்து, அவ் விரண்டெழுத்துக் களும் தனித் தனியாக நில்லாமல், **அரனருள்** எனப் புணர்ந்து, னகர உயிர் மெய்யாகிய ஓரெழுத்தாக ஒன்றி விடு கின்றன. மேற் குறித்த நூற்பாவின் பொருள் இதுவேயாகும்.

இச் சூத்திரத்தினை மகாவித்துவான் **மீனாட்சி சுந்தரம்பிள்ளை** அவர்கள், தமது 'குளத்தூர்க் கோவை'யில் மிக அழகாக வும் முழுதாகவும் எடுத்தாண்டிருத்தல் காணலாம்.

(3) "Tamil grammarians designate vowels by a beautiful metaphor, as **Uyir** or life of a word; consonants as **Mey**, or the body; and the junction of a vowel and consonant as **Uyirmey** or an animated body."

—**Dr. Robert Caldwell.**

"நன்று வதிமனத் தான்வேத
நாயக நம்பிவெற்பில்
கன்று வதிகை உயிர்,நீமெய்
யேற்கரை நின்குறைநீ
வென்று வதிவடி வேல்அண்ண
லேயுடல் மேல் உயிர்வந்
தொன்று வதியல் பெனும்
சூத்திரமும் உணர்ந்துளையே"

இதன்படி, உடலும் உயிரும் ஆகிய எழுத்துக்கள் மட்டும் தம்முள் ஒன்று சேருமேயன்றி, உயிரும் உயிரும் தம்முள் ஒன்றுசேரமாட்டா என்பது பெறப்படும். இது, தத்துவம் இலக்கணம் என்னும் இரு திற நூற்கும் பொருந்தும் அரும்பெறல் உண்மையாகும்.

"இருவர் மடந்தையர்க்கு என்பயன்?
இன்புண்டாம் ஒருவன் ஒருத்தி யுறின்"

எனவரும் திருவருட் பயனும், ஈண்டு ஓராற்றன் எண்ணி யுணர்ந்து இன்புறற் பாலது. உயிரும் சிவமும் ஒன்று கூடிய வழியேயன்றி, உயிரும் அருளும் கூடுதல் மாத்திரத்தால் மட்டும் இன்பம் நிகழாது என்பது இதன்பொருள்.

இவ்வாறு உயிரும் உயிரும் தம்முட் சேரமாட்டாமையால், அவற்றுக்குப் பற்றுக் கோடாக ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்பெறும். இங்ஙனம் இரண்டு உயிர் எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து உடம் படுதற்குத் துணைபுரியும் மெய்யெழுத்தே 'உடம்படுமெய்' என்னும் குறியீட்டான் வழங்கப்படும்.

இங்ஙனம் உடம்படு மெய்யாக வரும் எழுத்துக்கள் இரண்டேயாகும், அவை வ் ய் என்பனவாகும். மணி + அழகு = மணியழகு எனவும், சே + அடி = சேவடி எனவும், இரண்டு உயிரெழுத்துக்களை ஒன்று சேர்த்தற்கு இவ்வுடம்படுமெய் யெழுத்துக்களைப் பயன்படுத்தும்முறை, தமிழ்மொழியின் முற்போக்கான தூய்மை நெறிச் சிறப்பினை யுணர்த்தி நிற்கின்ற தெனப் பேரறிஞர் திரு. கால்டுவெல் அவர்கள் புகழ்ந்து கூறுகின்றார்.[4]

'உடம்படுமெய்யாக வரும் இவ் வகர யகரங்களே, மந்திர மொழிகளில் முறையே அருளையும் உயிரையும் குறித்துவருதல், வியப்பிற் குரியதாகத் திகழ்கின்றது'[5] என ஆராய்ச்சியறிஞர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் கூறுவதும்; அதனை வலியுறுத்தும் முறையிலேயே,

"வாசி யருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமாம் அங்கு"

எனத் திருவருட்பயன் என்னும் சித்தாந்த நூல் விளக்குவதும்; ஈண்டு நாம் சிந்தித்து உணர்ந்துகொள்ளத் தக்கன.

'உடம்படுமெய்' என்னும் இத்துணைச் சிறந்த இலக்கணக் குறியீட்டினை ஆசிரியர் கச்சியப்ப முனிவர், தாம் இயற்றிய

தணிகைப் புராணத்திற் களவுப் படலத்தில் அழகுறக் கையாளுகின்றார் :

"சடம்படும் ஆவியும் ஆவியும்
ஆயிற்சந் திக்க, இடை
உடம்படு மெய்ஒன் றுறவேண்
டுவது;உட லோடுயிர் வந்து
இடம்படு மாயின் இடையொன்று
வேண்டுவ தெற்றுக்கு? அண்ணல்!
மடம்படு கண்ணிக்கு நீயே
மொழிய வலித்தியின்றே"

---

4 "This use of *v* in one conjunction of vowels, and of *y* in another, is doubtless a result of the progressive refinement of the language."

—*Rt. Rev. Robert Caldwell*, D.D., LL.D.

5 "The same two letters வ and ய occur in Manthras where they are termed as Grace and Soul letters respectively, with the aid of which the emancipation or the annihilation of births is attained."

—*The Tamil Alphabet, Its Mystic Aspect.*

தலைவன் தலைவியின் அன்பைப்பெறத் தோழியின் உதவியை நாடுகின்றான். அதற்கு அவள், 'நீயே தலைவியின்பாற் சென்று உன் காதலைத் தெரிவித்துக் கொள். உயிரும் உயிரும் ஆகிய எழுத்துக்கள் கூடுதற்குத் தான் இடையில் ஓர் உடம்படு மெய்யெழுத்து வருதல்வேண்டும். ஆனால், உடலும் உயிருமாகிய எழுத்துக்களோ தாமே இயல்பாக ஒன்று சேர்ந்துவிடும். நீயும் நின் தலைவியும் உடலும் உயிரும் போல்வீர்கள். ஆதலின் நின் காதலை யான் சென்று தலைவிக்குக் கூறுதல் முறையாகாது' என மறுத்துக் கூறிவிடுகின்றாள்.

"அவன் அறிவுறுக்க என்று இகுளை அகற்றல்" என்னும் இவ்வகப்பொருட்டுறையின் கருத்தினை, இங்ஙனம் இலக்கண நூற்பொருள் கொண்டு தமது புலமைநலந் தோன்ற விளக்கிய கச்சியப்ப முனிவரின் கற்பனைத்திறம் பெரிதும் பாராட்டுதற்குரியது.

நம்மருமைச் செந்தமிழின் நல்லமைப்பை ஆராய்ந்தால்
செம்மைமிகு நற்றமிழர் தெய்விக-மெய்மைகள்தாம்
எல்லாம் பொதிந்தொளிர்தல் யாரும் இனி துணர்ந்து
நல்லோராய் வாழ்வர் நயந்து.

— ஆசிரியர்

மதிப்புரை

ஸ்ரீமஹாலக்ஷ்மி ஸ்தோத்ரங்கள்: இந் நூலில் ஸ்ரீஸூக்தம், ஸ்ரீவிஷ்ணு புராண ஸ்ரீஸ்துதி, சதுச்ச்லோகி, கத்யத்திலுள்ள ஸ்ரீப்ரபத்தி, ஸ்ரீஸ்தவம், ஸ்ரீகுணரத்நகோசம், ஸ்ரீதேசிக ஸ்ரீஸ்துதி, ஸ்ரீகனக தாரா ஸ்தோத்ரம், ஸ்ரீலக்ஷ்மி ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் என்பவை தொகுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சதுச்ச்லோகி, ஸ்ரீஸ்தவம், ஸ்ரீகுணரத்ன கோசம், ஸ்ரீஸ்துதி, ஸ்ரீகனக தாரா ஸ்தோத்ரம் என்பவற்றிற்குத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யுட்களும், அவற்றிற்கு அரும்பத உரைகளும்கூட, இதன்கண் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

ஸ்ரீமஹாலக்ஷ்மியின் தோத்திரங்களை, வடமொழி எழுத்துக்களிலும், தமிழ் எழுத்துக்களிலும் தொகுத்துத் தந்திருப்பது, பெரிதும் பயனுடையதாகும்.

இந்நூலைச் சிறந்த முறையில் தொகுத்துத் தந்திருப்பவர், ஸ்ரீதிருமலை நல்லான் இராமகிருஷ்ணஐயங்கார் அவர்களாவர். இத்தொகுப்பு நூலைச் சென்னைத் தியாகராயநகர் ஸ்ரீவிசிஷ்டாத்வைத பிரசாரிணி சபா, மிகவும் நல்லமுறையில் செவ்விதாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது. பக்கம் 170. விலை ரூபா இரண்டு. கிடைக்குமிடம்: ஸ்ரீவிசிஷ்டாத்வைத பிரசாரிணி சபை, 7 நாதமுனி தெரு, தியாகராயநகர், சென்னை-17.

—ஆசிரியர்.

"ஒருவர் எனும் இயற்சொல்"

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' எனப் பாரதியார் பாடியதற்கேற்பத் தமிழ் மொழியானது மிகச் சிறந்த சொல்வளம் பெற்றுத் திகழ்கின்றது. அத்தகைய உயர்ந்த சொற்களில் ஒன்ருகக் குறிப்பிட்டுப் போற்றத் தகுந்த சிறப்புடையது, 'ஒருவர்' என்னும் செஞ்சொல் ஆகும். அச்சொல் உயர்திணை முப்பால்களுள் ஒரு பாலைத் தனியே விளக்காமல், ஒருவன் ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாக வரும். மேலும், இச் சொல்லானது ஒரு வகையில் வியக்கத்தக்க அமைப்புடையதாக விளங்குகின்றது எனலாம். இச்சொல் முற்பகுதியால் ஒருமையையும், பிற்பகுதியிற் பன்மையையும் ஒருங்கே இனிதியைத்து உணர்த்துவதாக உள்ளது. இச் சிறப்பியல்பினை விதந்து வியந்தே,

> "ஒருவர் என்பது உயர்இரு பாற்ருய்ப்
> பன்மை வினைகொள்ளும் பாங்கிற் றென்ப"

என நன்னூலார் நவின்றருளினர். சிறந்த இந் நூற்பாவின் திட்பநுட்பம் தெளிந்த சிவஞானசுவாமிகள், இதற்கு வகுத்துள்ள உரை பெரிதும் சுவை பயப்பதாகும்.

"இவ் ஒருவர் என்னும் சொல், பொதுவியலுட் கூறும் உவப்புயர்வு முதலியவற்ருன் வரும் ஒருவர் என்னும் சொல்லன்றித் தன்னியல்பாய் வந்ததாகலின் ஈண்டுக் கூறப்பட்டதென்றுணர்க.

இச் சொல்லின்கட் பகுதிக் கேற்ப இருபாற்ருய் என்றும், விகுதிக்கேற்பப் பன்மை வினைகொள்ளும் என்றும், உயர்திணை முப்பாலுட் பன்மையைப் பின் விதத்தலின் ஆண் பெண் என விதவாது உயர் இருபாற்ருய் என்றும், உயர் என முன் விதத்தலின் உயர்திணைப் பன்மையென விதவாது பன்மை என்றும், ஒருவர் வந்தார் ஒருவரவர் என வினையும் பெயருங் கொள வருவது உவப்புயர்வு முதலியவற்ருன் வருவதாம்; இங்ஙனம் தன்னியல்பாய்வரும் ஒருவர் என்பது வினையும் வினைக் குறிப்புமே கொள்ளும் என்பார் பெயரை யொழித்து வினைகொள்ளும் என்றும், இச்சொல் ஒருமைப் பகுதியோடு பன்மை விகுதி மயங்கிப் பால்வழுவாய் நின்றதேனும் தன்னியல்பாய் மயங்கி நின்றமையின் வழாநிலைபோலும் என்பதூஉம், பன்மை வினை என்றது சொன்மாத்திரையிற் பன்மைவினையன்றிப் பொருண்மாத்திரையின் ஒருமை வினையாமாதலின் இப் பயனிலையை ஒருவர் என்னும் சொற்கொள்ளுதல் வழுவன்றென்பதூஉம் தோன்றப் பாங்கிற்று என்றும், இங்ஙனமாதல் சான்ருேர்க்கு ஒப்ப முடிந்தது என்பார் என்ப என்றும் கூறினர்."

'ஒருவர்' என்னும் இவ்வரிய சொல்லின் அருமை பெருமைகளை அறிந்துணர்ந்து மகிழக் குமரகுருபர அடிகளார்க்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்தது. உலகிற் பல மதங்கள் கடவுளை ஆணுக வைத்துப் போற்றுகின்றன. மற்றும் பல மதங்கள் பெண்ணுகக் கருதி வழிபாடு புரிகின்றன. ஆனல் பழந் தமிழர்கள் கடவுளைத் தனியே ஆணுகவோ பெண்ணுகவோ கருதாமல் 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக...' எனத் திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்த நூல் தெளிவிக்கும் முறையில், ஆண் பெண் என்னும் இருதிறக் கூறும் அமைந்த அம்மை யப்பராகக் கொண்டு, பண்டுதொட்டு வழிபட்டு வருகின்றனர். 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள் நிழற்கீழ் மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே' என ஐங்குறுநூறு என்னும் சங்கநூல் இவ் வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும். 'பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்' எனப் புறநானூறு கூறுதலும் காணலாம். கந்தழிப் பொருளின் இயல்பினை உண்மையாற்

கண்டுணர்ந்த சான்றோராகிய மாணிக்க வாசகர், அம்மையப்பரின் திருவுருவத்தினையே "தொன்மைக் கோலம்" (கோத்தும்பி : 18) எனத் தொழுது போற்றியருளிச் செய்கின்றார். இத்தகைய அம்மையப்பரின் திருவுருவச் சிறப்பினை விளக்கும் முறையிலும், 'ஒருவர்' என்னும் சொல்லின் அமைப்பினை வியக்கும் முறையிலும், பின்வரும் பாடலைக் குமரகுருபரர் அருளிச் செய்து நம்மனோரை உவப்பித்து உய்விக்கின்றார் :

" அருவருக்கும் உலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் இயமானன் தீநீர்
மண்ணெனும்என் வகையுறுப்பின் வடிவு கொண்ட
ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன்றால் அவ்
வுருவையிக் தொருத்தனென்கோ? ஒருத்தி என்கோ?
இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றோர் [கேனே?"
இயற்சொல் இலதெனின் யான்மற் றென்சொல்

இயைபுடைமைபற்றி, அம்மையப்பரின் திருவுருவச் சிறப்பினைக் குறித்துக் குமரகுருபரர் பிறிதோர் இடத்தில் அருளிச் செய்துள்ள வேறொரு சிறந்த பாடலும், ஈண்டு உணர்ந்து கொள்ளுதற்குரியது. அது தானும் இலக்கணச் செய்தி நுட்பம் மிக்க தொன்றாக மிளிர்கின்றது!

"செவ்வாய்க் கருங்கட் பைங் தோகைக்கும்
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு ஒன்றேஉளது!
அவ்வுரு வினைமற்று
எவ்வாச் சியம்என்று எடுத்திசைப்பேம்?
இன்னருட் புலியூர்ப்
பைவாய்ப் பொறியரவு அல்குல்
எந்தாய் என்று பாடுதுமே!"

"அர்த்தநாரீசுவரன் என்னும் பார்வதி பரமேசுவரன் போலச் சொல்லும் பொருளும் பேதாபேதமாய் வரும் என்பாரும் உளர். காளிதாசனும் 'வாகர்த்தா விவ' என்னும் சுலோகத்தால் அவ்வாறு கூறுவன்" என வரும் பிரயோக விவேகவுரைப் பகுதியும் (18) பிறவும் ஈண்டு எண்ணி மகிழ்ந்தின் புறற்பாலன.

" சொல்லும் பொருளும் எனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே"

—அபிராமி அந்தாதி : 28

—ஆசிரியர்.

வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழில் வெளியிடுவதற்குக் கோபுரம்-மண்டபம்-திருக்குளம் முதலிய கோயிற் காட்சிகள், சிறந்த கலைச் சிற்பங்கள், சுவாமி அம்பாள் திருவுருவங்கள், ஆகியவற்றின் அழகிய படிமங்கள் (Blocks) வரவேற்கப் பெறுகின்றன. மூவண்ணப் படிமங்கள் (Tricolour blocks) சிறப்பாகப் பெரிதும் விரும்பி வரவேற்கப் பெறுகின்றன. அவைகள் நன்றிக் குறிப்புடன் வெளியிடப்பெறும்.

—ஆசிரியர்.

தொல்காப்பியச் சிறப்பு

தொல்காப் பியம் என்னும் தொன்மைப் பெருநூலின்
ஒல்காப் பெருஞ்சிறப்பை உய்த்துணரின்—அல்கா
தறிதோ றறியாமை ஆழ்ந்தகன் றோங்கித்
தொடுவானம் போற்செல்லும் சூழ்ந்து. 1

பழமை பெருமைநூற் பண்பனைத்தும் வாய்ந்து
விழுமியர்கள் எல்லாம் வியப்ப—முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்விகநூ லாய்விளங்கும்
நந்தம்அருங் தொல்காப் பியம். 2

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
ஒழிவில் இலக்கணமும் உண்டு!—வழிமுறையே
என்றாலும், தொல்காப் பியம்போல் இலக்கணநூல்
ஒன்றேனும் இவ்வுலகத் தில். 3

வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தொடு சொல்லின் இயல்பே—முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா தினைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தொல்காப் பியம்! 4

எழுத்தொடுநற் சொல்லியல் பெல்லாம் இனிதே
முழுத்தும் விளக்கி மொழிந்து—விழுப்பமிகத்
தள்ளாப் பொருளியல்பும் சாற்றியதொல் காப்பியம் போல்
எள்ளாச்சீர் நூல், யாண்டும் இல். 5

உயர்திணை அஃறிணை என்றிவ் வுலகை
மயர்வில் அறிவின் வளத்தால்—செயிர்அற
நன்று பிரித்ததொடு, நல்ல அகம்புறம்
என்றும் இரு கூறுகண்டார் யார்? 6

களவுநெறி கற்புநெறி கட்டுரைத்துள் ளத்தே
உளவாம்மெய்ப் பாடுவமை ஓர்வித்—தளவையிலாச்
செய்யுளியல் நன்மரபும் தேற்றினர்தொல் காப்பியனார்
வையமெங்கும் இல்லா வகை! 7

முதலும் கருவும் உரியுமென மூன்று
வகையால் உலகை வகுத்துத்—தகைமைமிகத்
தெய்வமுணு மாமரம் புள்பறையாழ் செய்திமக்கள்
மெய்யியல்பும் தேற்றினர்யார் வேறு? 8

புலநெறி நல்வழக்காற் காதல் பொருந்தும்
தலைமக்கள் வாழுநெறி சாற்றி—உலகியலில்
இன்பம் பொருள்அறன்கள் என்பவெலாம் எய்துமுறை
மன்பதைக்குச் சொல்லினர்யார் மற்று? 9

இறைஉயிரே அன்றி, உல கின்னியலும், நல்ல
துறவியலும் மற்றுமெலாம் சொல்லும்—முறையால்
இலக்கண நூல் நுட்பம் இறைநூற்கோள் வாய்ப்பக்
கலக்கமறச் சொற்றூர்யார்? காட்டு! 10

“ நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்” என்னும்—குறள்மொழியால்,
வள்ளுவரும் தொல்காப் பியம்போற்றும் வாய்மையினைத்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து. 11

“ உயிரிற் சிறந்தன்று நாணே, அந் நாணிற்
செயிர்தீர்காட் சிக்கற்புச் சீர்த்தென்”—மயல்தீரும்
தொல்காப் பிய நூற்பாச் சூழ்ந்து, மணிமொழியார்
நல்காத லிற்போற்றி னுர்! 12

“வாழ்கநல் அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்கபுனல் வேந்தனும்மிக் கோங்கு”கெனும்-ஆழ்பொருட்பா
ஞானசம் பந்தருமே நன்றுதொல் காப்பிய நூல்
ஊனமின்றிப் போற்றலுணர்த் தும்! 13

தேக்கு பெரும்புலமைச் செம்மலாம் நம் அருமைச்
சேக்கிழார் பெம்மான்தம் தெய்வஅருள்—வாக்கினுல்
நன்றே அருந்தமிழ் நூல் என்று நனிபுகழ்ந்த
தொன்றே, இதன்திறம்சாற் றும்! 14

பாணினியார் நூற்செறிவும், பண்பார் பதஞ்சலியார்
காணினிய திட்பக் கருத்தியலும்,—சேணினராம்
சீர்அரித்தாட் டில்சொற் றெளிவும், அளவையுஞ்சால்
பேரெழிற்றும் தொல்காப் பியம். 15

முந்துபல ஆயிரமாம் ஆண்டுகட்கு முன்னரே
செந்தமிழில் அன்றிச் சிறந்துமிகும்—இந்தவகை
நாகரிகத் தெய்வநல நல்லறிவு நூல்களொன்றுண்
டாக, நினைப்பவும்யார்க் காம்? 16

—ஆசிரியர்.